
கல்கி
KALKI
26-1-1958
30
நயாபைசா

கல்கி

பொருளடக்கம்

"கல்கி"யில் வெளியாகும் கதைகளில் உள்ள பெயர்கள் எல்லாம் கற்பனைப் பெயர்கள்; சம்பவங்களும் கற்பனையே.


கவர்ச்சி
யுடன்
களிப்பை
அளிக்கும்...
ஜஸ்மின்
ரேயான் ஸில்க் துணிகள்
எம்பாஸ்டு காட்டன் மற்றும்
ஸாட்டின்
பிரிண்டட் ஜியோஜி
பிக்மெண்ட் பேன்ஸி பிரிண்ட்
ப்ளாக்டு டபேட்டா ஜகுதாய்
ப்ராக்கேடு மற்றும் வெல்வெட்டு
ஜஸ்மின் மில்ஸ் பிரைவேட் லிட்..
பம்பாய்-2.



மலர் 1 / இதழ் 26

தமிழ்த்திரு நாடு தன்னைப்—பெற்ற
தாயென்று கும்பிடடி பாப்பா—பாரதியார்

ஹேவிளம்பி தை 13

குடியரசுத் திருநாள்

இந்த ஞாயிற்றுக்கிழமை குடியரசு தினமாகக் கொண்டாடும் நாள்.

குடியரசுக்கு அஸ்திவாரம் ஒற்றுமை.

ஒற்றுமையுண்டாக்கும் கருத்தோடு செய்யப்படும் சில காரியங்கள் ஒற்றுமையைக் குலைத்துவிடும் என்று தமிழ் நாட்டுப் பெரியோர்கள் எச்சரித்திருக்கின்றனர்.

எண்ணுவது ஒன்று முடிவு வேறு; எண்ணியதற்கு நேர் விரோதமாகும் என்று எச்சரித்திருக்கின்றனர். இந்தி மொழியை இந்தியா முழுதும் பரப்புவதில் யாருக்கும் ஆட்சேபணையில்லை. ஆனால் அதை ஆட்சிமொழியாக்க முடியாது. திணிக்கவில்லை என்று சொல்லிக்கொண்டே திணிப்பதற்கு வேண்டிய காரியங்கள் செய்துவரப் படுகின்றன. அவை கூடாது என்று தமிழ் நாட்டுப் பெரியோர்கள் ஒருமுகமாக எச்சரித்திருக்கின்றனர். எந்த மொழியைப் பற்றிய வெறியும் பாரத தேசத்தில் தேசபக்தியாகாது. தேச நன்மைக்கு விரோதத்தைத் தரும். அந்தந்த ராஜ்யத்தில் அந்தந்த மொழிகள் இந்தி உள்படப் போற்றப்பட வேண்டும். நடுநிலைமை கொண்ட ஆங்கிலம் மத்திய அரசியல் விவகாரங்களுக்குத் தற்போது போல் இனியும் பயன்படுவதே ஒற்றுமைக்கு வழி. பெரும் பாகத்தில் பேசப்படாத இந்தி மொழியைச் சட்டத்தின் மூலம் வற்புறுத்தித் திணிப்பது ஒற்றுமையை அழிப்பதாகும். குடியரசு தினத்தில் இந்தி பேசும் மக்களுக்குத் தென்னாடு அன்புடன் கூறுவது இதுவே.

மொழிப் பிரச்னை தீரவில்லை

ஆண்டுதோறும் அகில இந்திய காங்கிரஸ் கூடுவதன் நோக்கம் என்ன?

பாரத தேசம் சுதந்திரம் பெறுவதற்கு முன் பாரத மக்களைப் பெருந் திரளாகக் கூட்டி வைத்து, அவர்களுக்குச் சுதந்திர உணர்ச்சி யூட்டவும், சுதந்திரப் போரில் பங்கெடுத்துக் கொள்ள வேண்டிய முறைகளைப் பற்றி விளக்கவும், மக்களுக்கு வழி காட்டவும் மகாநாடுகள் நடத்தப்பட்டு வந்தன. எல்லாவற்றையும்விட, காங்கிரஸ் கட்சியின் பின்னால் லட்சக்கணக்கான மக்கள் ஆதரவு தந்து நிற்கின்றனர் என்று அதிகார பீடத்தில் இருப்பவர்களுக்கு உணர்த்த வேண்டிய அவசியம் இருந்தது. அதனால் பெரும் கூட்டம் கொண்ட வருஷாந்திர மகாநாடுகள் கூட்டவேண்டியிருந்தது.

ஆனால் சுதந்திரத்துக்குப் பிறகு காங்கிரஸ் ஆளும் கட்சியாகி விட்டது. காங்கிரஸ் பல காலம் சொல்லி வந்த கருத்துக்களை, நிலப் பிரச்னை சம்பந்தமாகவும், மற்றும் பல விஷயங்கள் சம்பந்தமாகவும் சொல்லி வந்த கொள்கைகளை அமுல் செய்து வந்திருக்கிறது. இவற்றைப் பற்றிய தீர்மானங்கள் கீழே ஜில்லா காங்கிரஸ் கமிட்டிகளிலிருந்து செய்யப்பட்டு, அகில இந்திய மகாநாட்டில் விவாதிக்க வேண்டும். அப்பொழுதுதான் செய்யப்பட்ட காரியங்கள் மக்களுக்கு எவ்வளவு நன்மையளித்திருக்கின்றன, எவ்வளவு தீமை விளைவித்திருக்கின்றன என்பதைத் தெரிந்து கொள்ள முடியும்!

இதுதான் உலகெங்கிலும் உள்ள முறை. சமீபத்தில் பிரிட்டனில் நார்விட் என்ற ஊரில் கூடிய தொழிற் கட்சிக் கூட்டத்தில், அணு-ஆயுத குண்டுகளைப் பகிஷ்கரிக்க வேண்டும் என்று தீர்மானம் செய்யப்பட்டது. அந்தத் தீர்மானம் தொழிற் கட்சியின் வருஷாந்திர மகாநாட்டில் விவாதிக்கப்பட்டது. தொழிற் கட்சித் தலைவர் பெவன் இந்தத் தீர்மானம் சரியல்ல என்று வாதித்தார். தீர்மானம் தோற்றது.

தொழிற் கட்சி செய்த முடிவு சரியோ தவறோ - அதை இங்கே விவாதிக்க வரவில்லை. ஆனால் மேல் நாடுகளில் - சுதந்திர நாடுகளில் கட்சிக் கூட்டங்கள் நடைபெற்று வரும் முறையைக் குறிப்பிடவே இதை இங்கே எழுதினோம். எந்தப் பெரிய அகில உலக விஷயமாயினும் மக்கள் ஒரு தீர்ப்புச் செய்தால் அதைச் சரியா தவறா என்று வருடாந்திர மகாநாடுகளில் ஆராய்ந்து வழிகாட்ட வேண்டியது பெருந் தலைவர்களின் கடமை. நமது நாட்டிலோ கட்சிக் கூட்டம் முற்றும் மாறுபட்ட முறையில் நடைபெற்று வருகிறது.

நமது நாட்டில் அகில இந்தியக் காங்கிரஸ் ஒரு தீர்மானம் செய்ய வேண்டியது. அதை நடைமுறையில் கொண்டுவர வேண்டியது. வெற்றி யடைந்தாலும் தோல்வி யடைந்தாலும் பரவாயில்லை. அடுத்த வருஷமும் அதே தீர்மானம் கொண்டு வரவேண்டியது.

'நிலச் சீர்திருத்தம் கொண்டுவர வேண்டும். நில உடைமைக்கு உச்ச வரம்பு கட்ட வேண்டும்' என்று ஆண்டுதோறும் தீர்மானங்கள் செய்ய வேண்டியது. இவை எவ்வளவு தூரம் பயன் விளைவித்திருக்கின்றன என்று சற்றும் ஆராயாமல் மீண்டும் அதே தீர்மானம் செய்ய வேண்டியது.

'சோஷலிஸபாணி சமுதாயம்' என்று ஒரு தீர்மானம். இத்துறையில் நாம் சாதித்தது என்ன என்பதைப் பற்றி யாருக்குமே சரியாகப் பிடிபடவில்லை. இருப்பினும் ஆண்டு தோறும் ஒரு தீர்மானம் வருகிறது.

தப்பித் தவறி பிரத்யட்ச நிலைமை உணர்ந்து ஒரு தீர்மானம் செய்து விட்டால் அதை நடைமுறையில் கொண்டு வருவதற்குத் தைரியம் இருப்பதில்லை. அம்ருதசரஸ் காங்கிரஸின் பன்மொழித் தீர்மானம் இப்படித்தான் கை நழுவ விடப்பட்டது.

இந்த வருஷம் இன்னொரு புது மாதிரியான தகிடுதத்தம் நேர்ந்திருக்கிறது. சர்க்கார் செய்த ஒரு தவற்றை மற்றொரு முறையில் மூடி மழுப்பி நல்ல பெயர் சூட்டிக் கொள்ளக் காங்கிரஸ் வருஷாந்திர மகாநாட்டை உபயோகப்படுத்திக் கொண்டிருக்கின்றனர்.

மொழிப் பிரச்னை சம்பந்தமாக ஒரு தீர்மானம் வந்தது. அந்தத் தீர்மானம் சில திருத்தங்களுடன் நிறைவேற்றப் பட்டது. சென்னை நிதி மந்திரி திரு சி. சுப்பிரமணியம் சில திருத்தப் பிரேரேபணைகளை ஆதரித்துப் பேசினார். 'ஆகா! நமது நிதி மந்திரி எவ்வளவு நன்றாகப் பேசியிருக்கிறார்' என்று தமிழ் மக்கள் மகிழ்ந்து போனார்கள்! 'தென்னகம் வடநாட்டின் மீது வெற்றி கொண்டு விட்டது!' என்று அக மகிழ்ந்தார்கள். 'வடநாட்டுக் காங்கிரஸ் தலைவர்களும் எவ்வளவு விட்டுக் கொடுக்கும் பரந்த மனப்பான்மை கொண்டிருக்கிறார்கள்' என்றும் பேசிக் கொண்டார்கள்.

இவ்வளவும் அசல் தீர்மானத்தையோ திருத்தப்பட்ட தீர்மானத்தையோ பார்க்காமலே பேசியிருக்கிறார்கள். முதலில் வந்த தீர்மானத்துக்கும் திருத்தப்பட்ட தீர்மானத்துக்கும் பெருத்த மாறுதல் ஒன்றுமில்லை. தீர்மானத்தின் அடிப்படை அப்படியே கல்லுளி மங்கன் போல் அசையாமல் இருக்கிறது. அதாவது பாரத நாட்டில் ஆட்சி மொழி இந்திதான் என்று இந்தத் தீர்மானம் உறுதி செய்கிறது. அமுலுக்கு வரவேண்டிய 1965ம் ஆண்டுக்குப் பிறகும் ஆங்கிலம் உபயோகிக்கலாம் என்பதுதான் தீர்மானம்.


ஆனால் நாம் சொல்ல வந்த விஷயம் வேறு. நிதி மந்திரி திரு சி. சுப்பிரமணியம் இவ்வளவு பிரமாதமாகக் காங்கிரஸ் மகாநாட்டில் பேசியிருக்கிறாரல்லவா, தென்னக மக்களின் நிலைமையை நன்றாகத் தெரிந்து கொண்டு தான் பேசினார். ஒரு சில வாரங்களுக்கு முன் தான் திரு சி. சுப்பிரமணியம் அவர்கள் இந்தியும் ஆங்கிலமும் இரட்டை ஆட்சி மொழிகளாக விளங்கலாம் என்று பாரத சர்க்காருக்குச் சென்னை சர்க்காரின் சார்பில் ஒரு யாதாஸ்து அனுப்பிய பின் இப்படிக் காங்கிரஸில் பேசினார். இந்த யாதாஸ்து தமிழ் நாட்டில் பெரும் அதிருப்திக் கிளர்ச்சியை உண்டு பண்ணியது யாவரும் அறிந்த விஷயமே! இந்தக் கிளர்ச்சியை மூடி மழுப்பவே, அகில இந்தியக் காங்கிரஸில், தமிழ் மக்களின் குறைகளை வேகத்துடன் பேசுவதுபோல் எடுத்துக் கூறினார். வடநாட்டுத் தலைவர்களும் காரியம் தமக்குச் சாதகமாக முடியும்போது, ஏன் பொருளை மாற்றாத இரண்டு திருத்தப் பிரேரேபணைகளை அனுமதித்துத் தென்னக மக்களுக்குச் சலுகை காட்டியதாக நல்லபெயர் தட்டிக்கொண்டு போகக்கூடாது என்று எண்ணி, காரியத்தை முடித்துக்கொண்டனர்.

மொத்தத்தில் விஷயம் வெறும் ஏமாற்றுச் செப்பிடு வித்தையாகப் போய்விட்டது. இந்த ஏமாற்றுத் தகிடு தத்தங்களுக்குத் தென்னாட்டு அரசாங்கப் பிரதிநிதிகள் கூட்டுப் பங்காளிகளாகி விட்டனர்.

இப்படிச் சர்க்கார் செய்யும் தவறுகளை மூடி மழுப்பி, மக்களை ஏமாற்றும் மேடையாகக் காங்கிரஸ் வருஷாந்திர மகாநாடு அமைந்து விட்டது கண்டு வருந்துகிறோம்.

காங்கிரஸ் ஆண்டு விழாத் தீர்மானங்கள் மக்களுக்கு வழிகாட்டிகளாக இருந்ததுபோய், மக்களை ஏமாற்றி மூளையைக் குழப்பும் மேடையாக அமைந்து விட்டது என்பதை மிகுந்த வருத்தத்தோடு சொல்லிக் கொள்ளத்தான் வேண்டியிருக்கிறது.

பாரத நாட்டில் இன்று வயதிலும் அனுபவத்திலும், அறிவுத் தெளிவிலும் முதன்மை இடம் பெற்று விளங்கும் தலைவர் ராஜாஜி. காங்கிரஸ் ஸ்தாபனத்துக்கு முன்னணியில் நின்று பணி புரிந்த தலைவர் அவர். பாரத நாட்டுக்காகப் பல பெரிய பதவிகளையும் சிறிய பதவிகளையும் ஏற்று மகத்தான தொண்டு புரிந்த பெரியார். செந்தமிழ் நாட்டில் மிகத்தீவிரமாக இந்திப் பிரசாரம்செய்து


பழைய பல்லவிகள் மீண்டும் பாடப் பட்டன!
காங்கிரஸைத் தூய்மைப் படுத்த வேண்டும்.
சோஷலிசமே இறுதி இலட்சியம்
ஜாதி ஒழிக
மாகாண வெறி
வகுப்புவாதம் ஒழிக
காஷ்மீர் நமதே!
காங்கிரஸ் மகாநாடு
பொது மக்களிடம் காங்கிரஸ் மகாநாட்டைப் பற்றி உற்சாகமே இல்லையாம்.
மகாநாட்டுக்கு வழி
போன மந்திரிகள்......
வீட்டுக்கு வழி
.... திரும்பினர்.
"எனக்கு வழி காட்ட யாரையும் காணுமே!"

பலப்பல சங்கடங்களைத் தாங்கியவர் ராஜாஜி. எந்தத் தீவிர இந்திக்காரரையும்விடச் சற்றும் குறையாமல் தமிழ்நாட்டில் இந்திப் பிரசாரம் செய்த ஒப்பற்ற தலைவர் அவர். அவர் இந்தியை ஆட்சி மொழியாகச் செய்யக் கூடாது என்று ஒரு அபிப்பிராயம் சொல்லுகிறார் என்றால் காங்கிரஸ் தலைவர்கள் அனைவரும் கூடி யோசிக்க வேண்டியது அவர்கள் கடமை. கௌஹாட்டியில் கூடிய காங்கிரஸ் தனது கடமையில் நழுவியது. இத்துடன் இந்த மொழிப் போர் தீர்ந்து விடவில்லை.

மேனாட்டு நாகரிகங்களையும் அரசியல் முறைகளை மேற்கொண்டும், கடன் கேட்டு வாங்கிய பணங்களையும் உதவிகளையும் பெற்றுக் கொண்டும், மேனாட்டுத் தொடர்புகளை வைத்துக் கொண்டும் வாழ்க்கை நடத்தி வருகிறோம். இன்னும் பல விஷயங்களிலும் பிரிட்டிஷாரைக் காப்பியடிக்கும் தலைவர்கள் காங்கிரஸில் இருக்கிறார்கள்! இப்படியிருக்க 'ஆங்கிலம் நமது ஆட்சிமொழியாகும்' என்று சொன்னால் 'அவமானம்' என்று சொல்வது விந்தையாக இருக்கிறது!

பாரதப் பண்பாட்டில் ஊறிய தலைவர் ஒருவர் உண்டென்றால் அவர் ராஜாஜிதான். அவர் பாரத நாட்டின் ஆட்சி மொழி ஆங்கிலமாக வைத்துக் கொண்டு இப்போதைப் போல் நடத்திக் கொண்டு போகலாம் என்று சொல்கிறார். இதில் ஒரு கௌரவக் குறைவும் அவர் காணவில்லை.

மொழி தனி ஒரு நாட்டின் சொத்தல்ல. யார் எல்லாம் கற்றுக் கொள்ளுகிறார்களோ அவர்களுடைய சொத்து! நூற்றைம்பது வருஷங்களாக அது நம்முடைய சொத்தாகி விட்டது. பாரத தேசத்தை ஒன்றாகப் பிணைத்து நிற்கும் அற்புதப் பாசக் கயிறாகி விட்டது. பாரதத்தை உலகத்தோடு பிணைத்து நிற்கும் அற்புதப் பாசக் கயிறாகவும் இருக்கிறது. அதை அறுத்தெறிந்து விட்டு வேறு முடிவு செய்வது நாம் முன்னர் பல தடவைகள் சொன்னதுபோல் தமிழகத்துக்கு மட்டுமல்ல, இந்தி பேசப்படாத ஐந்தில் மூன்று பங்குள்ள பாரத மக்களுக்கு அநீதி இழைத்ததாக முடியும்!

மொழிப் பிரச்னை விஷயம் வெறும் ஒரு பிரதேச மக்களின் உணர்ச்சி விஷயமல்ல. பாரத நாட்டுப் பல பகுதி மக்களின் வாழ்வைப் பாதிக்கும் விஷயம். அதனால் மூளையைச் செலவழித்துச் சிந்தித்து, தயங்காமல், நின்று நிதானமாக ராஜாஜி கூறி வரும் யோசனையிலுள்ள உண்மையைக் காங்கிரஸ்காரர்கள் அனைவரும் காண வேண்டும். ஆங்கிலமே ஆட்சிமொழி என்று முடிவு செய்யவேண்டும். தற்போதுள்ள ஆட்சி மொழி முறையை மாற்ற வேண்டியதில்லை என்று முடிவு செய்ய வேண்டும்.

சென்னை சர்க்காருக்கு ஒரு யோசனை கூற விரும்புகிறோம். இப்போதும் காலம் வரம்பு கடந்து போகவில்லை. சென்னை சட்டசபையில் கட்சிக் கட்டுப்பாடின்றி மொழிப் பிரச்னையைப் பற்றித் தீர்மானம் செய்யக் கேட்கவேண்டும். காங்கிரஸுக்கு விரோதமாக வோட்டளித்தால் மந்திரி சபையையாவது அங்கத்தினர்களையாவது பாதிக்காது என்று உறுதியளித்துத் தீர்மானத்தை விவாதித்து முடிவு செய்யச் சொல்ல வேண்டும். பூரண சுதந்திரம் அளித்துச் செய்யப்பட்ட அத்தகைய தீர்மானத்தைக் கொண்டு இந்தி மொழிப் பிரச்னையை நியாயமாக முடிவு செய்யும்படி வற்புறுத்த வழி ஏற்படும். இந்த முறையையாகிலும் பின்பற்றிச் சென்னை சர்க்கார் தமிழ் மக்களின் நலன்களைப் பாதுகாப்பார்களா?

என்ன சேதி?

வந்தேமாதரம்

காங்கிரஸில் வந்தேமாதரத்தைப் பற்றிய பேச்சு நடந்தது. வந்தே மாதரம் பாட்டும் ஜனகணமன பாட்டும் இரண்டுமே வங்க மொழிப் பாட்டுக்கள் என்பதை முற்றிலும் மறந்து விட்டுப் பேச்சு நடந்தது. தேசியகீதம் வங்க மொழியிலிருப்பதை இந்தி வெறியர் அறியவில்லை!

ஜின்னா வேண்டாம்!

சமீபத்தில் கராச்சியிலிருந்து ஒரு செய்தி வந்தது. பாகிஸ்தான் சர்க்கார் தங்கள் ரூபாய் நோட்டுகளில் ஜனாப் ஜின்னாவின் தலையை அச்சடித்து நூறு ரூபாய் நோட்டுக்களாக வெளியிட்டார்களாம். பாகிஸ்தானைச் சிருஷ்டித்த ஜனாப் ஜின்னாவின் எண்பத்திரண்டாவது பிறந்த தினத்தைக் கொண்டாடப் பாகிஸ்தான் சர்க்கார் இம்முறையைக் கையாண்டிருக்கிறார்கள்.

இதற்குப் பாகிஸ்தானில் எதிர்ப்புக் கிளர்ச்சி நடைபெற்றிருக்கிறது. இது படத்துக்குப் பூஜை செய்யும் முறைக்கு வழிகோலுவதாகும் என்று கிளர்ச்சி செய்திருக்கிறார்கள்.

நல்ல எண்ணத்தோடு செய்த ஒரு காரியத்துக்கே பாகிஸ்தானில் இந்தப் பாடு என்றால் மற்ற விஷயங்களைப் பற்றிச் சொல்லவே வேண்டியதில்லை.

மொரார்ஜியின் மூளை

"பாரத நாட்டின் மொத்த ஜனத் தொகையில் நாற்பத்திரண்டு சதவிகித மக்கள் இந்தி அறிவார்கள். ஆனால்

பாரதத் தாயின் மூவர்ண தேசியக் கொடிக்கு மக்கள் வணக்கம் செலுத்தும் குடியரசு தினக் காட்சியை இவ்வாரத்திய அட்டைச் சித்திரமாக வழங்குகிறார் ஓவியர் மணியம்.

ஆங்கிலத்தை அறிந்தவர்கள் அவ்வளவில்லை. ஒரு சர்க்கார் நிர்வாகம் என்ருல் எல்லா மக்களுக்கும் புரியக்கூடிய மொழியில்தானே நடைபெற வேண்டும்?'' என்று மொரார்ஜி தேசாய் பேசியிருக்கிருர். இன்னும் பலரும் இதையே திரும்பத் திரும்பப் பேசுகிருர்கள். இந்தி ஆட்சி மொழியாக்கப்பட்டால் தென்னுட்டில் ஒரு சதவித மக்களுக்கும் புரியாது என்பதை மறந்துவிடுகிருர்கள்.

பாரதத்தில் இந்தி மொழி தெரியாதவர்களின் ஜனத்தொகை ஐம்பத்தெட்டு சதவிகிதம். ஜனநாயகம் என்ருல் சிறுபான்மை மக்களின் கஷ்டங்களை மனதில் கொண்டு காரியங்கள் செய்ய வேண்டும். அப்படியிருக்கப் பெருவாரியான மக்களின் வசதிகளையும் மறக்கப் பார்க்கிருர்கள்.

ஆங்கில மொழியை அறிந்த மக்கள் பாரத நாட்டின் ஒரு பகுதியில் மட்டுமில்லை. காஷ்மீர் முதல் கன்யாகுமரி வரை பரவியிருக்கிருர்கள். பல்வேறு மொழிகள் பேசும் முப்பத்தைந்து கோடி ஜனங்கள் உள்ள பாரத நாட்டு மக்களை இந்த ஆங்கிலம் அறிந்த மக்கள் முத்து மாலையின் நடுவே இழைந்து செல்லும் நூலைப் போல் கட்டிப் பிணைத்து நிற்கிருர்கள். இந்த நூலை அறுத்து விட்டால் முத்துக்கள் சிதறிப் போகும். அதனுல்தான் ஆங்கிலமே ஆட்சிமொழியாக வேண்டும் என்பது!

பாமர மக்கள் புரிந்து கொள்ளக் கூடிய மொழியில் தானே ஆட்சி மொழியாக நடைபெற வேண்டும் என்பது மிகவும் நியாயமான வாதம். அதற்குத் தான் ஒவ்வொரு ராஜ்ய நிர்வாகமும், சட்டசபை விவாதங்களும் அந்தந்தப் பிரதேச மொழியில் நடைபெற வேண்டும் என்கிருேம். தமிழ் நாட்டில் தமிழிலும், வங்கத்தில் வங்காளியிலும், மைசூரில் கன்னடத்திலும், கேரளத்தில் மலையாளத்திலும் நடைபெற வேண்டும் என்கிருேம். இந்த நியதியின்படி இந்தி பேசும் பிரதேசத்தின் நிர்வாகம் இந்தி மொழியின் மூலமே நடைபெறும். நிச்சயமாகச் சர்க்காருக்கும் அந்தந்தப் பிரதேச மக்களுக்கும் நெருங்கிய தொடர்பை ஏற்படுத்தும். 'நம்முடைய சர்க்கார் நடக்கிறது' என்ற உணர்ச்சியை வளர்க்கும். ஆனுல் மத்திய சர்க்காரின் ஆட்சிமொழி மட்டும் இப்பொழுது இருப்பது போலவே ஆங்கிலமாகவே இருக்கட்டும் என்கிருேம்.

அருள் வாக்கு


முன் காலத்தில் அதாவது முப்பது நாற்பது வருஷங்களுக்கு முன்பு ஒரு ரூபாய், ஐந்து ரூபாய் நோட்டுகள் கிடையாது. நோட்டு என்றால் நூறு ரூபாய், ஆயிரம் ரூபாய் நோட்டுகள்தான் உண்டு. அப்பொழுது தேசத்தின் ஒரு பகுதியிலே பிரஞ்சுக்காரர்கள் ஆட்சி நடத்தி வந்தார்கள். மற்றொரு பகுதியிலே பிரிட்டிஷ் ராஜாங்கம். இந்த இரண்டுக்கும் நடுவிலே எல்லையாக ஒரு மலையிருந்தது.

பிரஞ்சுப் பகுதியிலே நடக்கும் தேர்தல்களில் அடி, குத்து, சண்டை, கொலை எல்லாம் நடக்கும். பிரிட்டிஷ் அரசாங்கப் பகுதியிலே இவ்வளவு நடக்காது. பிரஞ்சுப் பகுதியில் ஒரு பெரிய பணக்காரன் இருந்தான். தேர்தல் கலவரத்துக்குப் பயந்துகொண்டு, பிரஞ்சு எல்லையைக் கடந்து பிரிட்டிஷ் பகுதிக்குப் போய்விட வேண்டும் என்று நினைத்தான். அதனால் அவன் சொத்தையெல்லாம் தங்கமாகவும், வெள்ளியாகவும் மாற்றிக் கொண்டான். பெரிய இரும்புப் பெட்டிகள் வாங்கி அடைத்துக் கொண்டான். அவன் விட்டுக் கொல்லையிலேயே மலையிருந்தது. மலை ஏறினான், பாரத்தைத் தூக்கிக்கொண்டு. மலை ஏறுவது மிகச் சிரமமாக இருந்தது. மலை உச்சியில் பிரிட்டிஷ் போலீஸ்காரன் இருந்தான். அவனிடம் இந்தச் சொத்தை யெல்லாம் கொடுத்து பிரிட்டிஷ் ராஜாங்கத்தில் மாற்றிக் கொள்ளக் கூடிய நோட்டாக மாற்றிக் கொண்டான். பிறகு வெகு சௌக்கியமாக இறங்கிப் போய் விட்டான். அங்கே சந்தோஷமாக வாழ்ந்தான்.

நாமும் ஒரு நாள் இல்லாவிட்டால் இன்னொரு நாள் இந்தப் பூலோக ராஜ்யத்தை விட்டு வேறொரு ராஜ்யத்துக்குப் போகத்தான் போகிறோம். அப்பொழுது நம்முடைய சொத்து எல்லாவற்றையும் அங்கு சுலபமாக எடுத்துக் கொண்டு போக ஒரு ஏற்பாடு இருக்கிறது. அதுதான் தர்மம். ஆகவே நம் சொத்துக்களாகிய உடல், பொருள், ஆவி எல்லாவற்றையும் தர்மம் செய்து புண்ணிய நோட்டாக மாற்றிக் கொள்ள வேண்டும். அது வெகு சுலபம். உடல் சக்தி, நா சக்தி எல்லாவற்றையும் புண்ணிய நோட்டுக்களாக மாற்றிக் கொள்ள வேண்டும். சரீரத்தினால் பிறருக்கு உபகாரம் செய்யலாம். நாவினால் பகவன் நாமாவை உச்சரித்துப் புண்ணிய நோட்டாக மாற்றிக் கொள்ளலாம். வம்பு தும்பு பேசினால் கடன் நோட்டாகத்தான் சேர்ந்துவிடும்.

பொருள்கள் மீது மனிதனுக்குப் பிரியம் ஏற்படுகிறது. மனிதனுக்கு எத்தனை பொருள்களின் மீது பற்று ஏற்படுகிறதோ அத்தனை அழுகைக்கு முளையடித்தாகி விட்டது என்று அர்த்தம். பொருளின் தன்மை என்ன? ஒன்று, அது நம்மைவிட வேண்டும்; அல்லது நாம் அதைவிட வேண்டி யிருக்கும். எந்தக் கட்டத்திலும் பிரிவின்போது துக்கம் ஏற்படத்தான் செய்கிறது. ஆகவே ஒரு பொருளின் மீது பிரியம் உண்டு என்றால் பிரிவும் இருக்கவே செய்கிறது. பிரிவின்போது துயரம் ஏற்படாமற் செய்து கொள்ள ஒரு வழியுண்டு. அதாவது மனம் ஒப்பிப் பொருளின் ஆசையிலிருந்து பிரிந்துவிட வேண்டும். இதற்குத்தான் வைராக்கியம் என்று பெயர்.

மாமரத்தில் மாங்காய் இருக்கிறது. காயாக இருக்கும்போது பறித்தால் காம்பில் கண்ணீர் சொட்டுகிறது. ஆனால் அதே மாங்காய் நன்றாகப் பழுத்து விட்டால் பழம் தானாகவே உதிர்ந்து போய்விடுகிறது. காம்பில் கண்ணீர் வருவதில்லை. காயாக இருக்கும்போது அதில் கசப்பும் புளிப்பும் இருக்கிறது. கசப்பு மாறித் தித்திப்பு வந்தவுடன் பழம் தானாக உதிர்ந்து விடுகிறது. அதுபோல் மனப் பக்குவம் ஏற்பட்டு விட்டால் பிரிவில் வருத்தம்உண்டாகாது.



ஸ்ரீ சங்கராச்சாரியார் — காஞ்சிகாமகோடி பீடம்.

உலர்ந்து பட்டுப்போன மரம் துளிர்ப்பதை நாம் கண்டதில்லை. உள்ளத்தில் அன்பில்லாதவன் அந்த உலர்ந்த மரத்தைப் போல் ஆவான் என்கிறார் குறளாசிரியர். பட்டுப்போன மரத்தைப் போல் சமூகத்தினிடை நிற்பான். அவனுடைய வாழ்க்கையில் பிறர் ஏதும் பயன் காண மாட்டார்கள்.

அன்பு அகத்து இல்லா
உயிர்வாழ்க்கை வன்பார்க்கண்
வற்றல் மரம்தளிர்த் தற்று.

அகத்து — உள்ளத்தில். அகத்து அன்பு இல்லா — உள்ளத்தில் அன்பு இல்லாதவனுடைய. வன்பார் — பாறையான நிலம். வன்பார்க்கண் — அத்தகைய நிலத்தின் கண். வற்றல் மரம் தளிர்த்தற்று — ஈரமில்லாத நிலத்தில் கொஞ்சம் வளர்ந்து பிறகு பட்டுப்போன மரம் மறுபடியும் தழைக்காது. அதுபோல் இல்லறம் நடத்துகிற சம்சாரி உள்ளத்தில் அன்பு இல்லாதவனால் யாருக்கும் உதவாத மனிதனாகிப் போவான். பட்டுப்போன மரத்தில் இலையை எதிர்பார்ப்பது போலாகும், அன்பில்லாதவன் வாழ்வில் உலகத்துக்குப் பயன் எதிர்பார்ப்பது.

புறத்துறுப்பு, அகத்துறுப்பு என்று சரீரத்தில் இரு வகை உறுப்புக்கள். யாக்கையில் காணப்படும் கண்ணும் செவியும் புறத்துறுப்பு. காட்சியையும் ஒலியையும் உணரக்கூடிய சக்தி உண்மையில் அகத்தில் இருக்கிறது. அதுவே அகத்துறுப்பு.

குருடனுடைய கண் பார்க்காது. செவிடனுடைய காது கேட்காது. இதற்குக் காரணம் அகத்துறுப்புக் குறையினால். அன்பில்லாதவனுடைய இல்லற வாழ்க்கை, பார்வைக்கு இல்லறமாகத் தோன்றும். குருடனுடைய கண்களிலும் செவிடனுடைய காதுகளிலும் வெளிப்பார்வைக்குக் குறையேதும் காண மாட்டோம். ஆயினும் அவை பயனற்ற உறுப்புக்களாகும். அதைப் போலவே அன்பில்லாதவனுடைய இல்லறம் வெளியில் குறை காட்டாவிடினும், உண்மையில் பயனற்றது. குருடனுடைய கண்ணைப் போலவும், செவிடனுடைய காதைப் போலவும் அவனுடைய இல்லறம் பயனற்றுப் போகும்.

புறத்துஉறுப்பு எல்லாம்
எவன்செய்யும் யாக்கை
அகத்துஉறுப்பு அன்பி லவர்க்கு.

புறத்து உறுப்பு எல்லாம் — புறத்து உறுப்புக்கள் எல்லாம், வெளிப் பார்வைக்கு எல்லாவிதத்திலும் அழகாக இருந்தபோதிலும். எவன் செய்யும் — என்ன பயன்படும். அகத்து உறுப்பு — அகத்திலே மறைந்து வேலைசெய்யும் உறுப்பு. புறத்து உறுப்பு — புறத்திலே உள்ள உறுப்பு. புறத்துறுப்பாகிய மெய், வாய், கண், மூக்கு, செவி முதலானவை அலங்காரமாய் இருந்து என்ன பிரயோசனம்? மரப் பாவைக்கும் கண்ணும் மூக்கும் உண்டு. ஆனால் அது பார்க்காது, கேட்காது. இல்லறத்தானுடைய உள்ளத்தில் அன்பு இல்லாமற் போனால் அதைப் போலவே ஆவான்.

இன்னும் சொல்லுகிறார்: அன்பு இல்லாதவனுடைய சரீரம், எலும்புக்குத்தோல் போர்த்தி நிறுத்திய வெறுங் கூடு. உயிரின் தத்துவம் அன்பில் நிற்கிறது. அன்பு இல்லாவிடில் சரீரம் உயிரில்லாத உடம்பாகும்.

அன்பின் வழியது
உயிர்நிலை அஃதுஇலார்க்கு
என்புதோல் போர்த்த உடம்பு.

அன்பின் வழியது உயிர்நிலை — உயிரினுடைய இரகசியம் அன்பில் நிற்கிறது. அன்பில்லாவிடில் அதற்கு நிற்க இடமில்லை. அஃது இலார்க்கு — அன்பு இல்லாதவர்க்கு. என்பு தோல் போர்த்த உடம்பு — தோலால் மூடப்பட்ட எலும்புக்கூடு. அன்பில்லாதவர்களுக்கு அவர்களுடைய சரீரம் இவ்வளவே ஆகும்.

உயிருக்கும் உடம்புக்கும் உள்ள பேதத்தை எடுத்துக் காட்டிச் சொல்லுகிறார். உயிர் மட்டும் இருந்தால் போதாது. அன்பு இருக்க வேண்டும். உயிரினுடைய இயக்கம் கேவலம் தேகத்தின் செயல்களிலில்லை. அன்பு வாழ்க்கையிலேதான் அது இயங்குகிறது. உயிருக்குரிய தொழில் அன்பு. உடலின் உறுப்புக்கள் அசைவது மட்டும் அல்ல.

மத்திய அலுவலக மொழி

எல். கிருஷ்ணசாமி பாரதி

நீள் வாழ்நாளில் தான் ஆற்றிய அரிய பணிகளில் தலையாயது தாம் எழுதிய 'வியாசர் விருந்தும்' 'சக்கரவர்த்தித் திருமகனும்' என்ற இரு பெரும் தமிழ் நூல்களே ஆகும் என்பது ராஜாஜி அவர்கள் தம்மைப் பற்றிக் கூறிய கூற்று. ஆனால் அவர்கள் இது போழ்து மொழிப் பிரச்னையில் முழு மூச்சோடு ஈடுபட்டுழைத்து வருவதே தமிழுக்கும், தமிழருக்கும், தமிழகத்துக்கும் செய்துவரும் சிறந்த தொண்டு என்பது என் சிற்றைக் கருத்து.

ராஜாஜி அவர்கள், சிக்கல் நிறைந்த மொழிப் பிரச்னைக்கு வழிகாட்டுவதற்கு உரிய தகுதிகள் பலவும் சாலப் பெற்றவர். இந்திய மத்திய அரசுக்கு வேண்டிய அலுவலக மொழி ஆங்கிலமே தொடர்ந்து இருந்து வரவேண்டும் என்று ஆணித்தரமாகக் கூறி வருகிறார். மத்திய அரசியல் அலுவலக மொழிக் குழுவினரின் சென்னைத் தீர்மானம், சமூகத்தின் முழு ஆதரவையும் பெற்றுள்ளது. சென்னை அரசு அனுப்பிய குறிப்புரை ஒன்றில் 'ஆங்கிலமும் இந்தியும் ஒருங்கே மத்திய அரசு மொழியாக இருக்கட்டும்' என்று கூறுகிறது. 'பாலுக்கும் காவல், பூனைக்கும் தோழன்' என்ற இந்தக் கொள்கை, பூனையையும் எலியையும் ஒரு கூட்டில் அடைத்து விளையாட்டு பார்க்கும் வேடிக்கையாகவே முடியும்; அல்லது இருதாரம் பெற்ற புண்ணியவான்கள் கதியையே அடையும்.

அறிவோடு ஆற்றலும், அன்போடு அனுபவமும் அமைதியோடு பொறுமையும் அதிகம் பெற்றுள்ள ராஜாஜி அவர்களின் ஆலோசனையை, அதிகாரத்தில் உள்ளவர்களும், ஏனைய மக்களும் செவிசாய்த்துக் கேட்க வேண்டியது அறிவுடைமைக்கு அழகாகும்.

வடநாட்டவரோடு, சில ஆண்டுகளுக்கு முன்னர் நெருங்கிய தொடர்பு எனக்கும் உண்டு. மொழி வெறி பிடித்த வடநாட்டு அரசியல்வாதிகளோடு கவனமாக இருக்க வேண்டியது அவசியம். நிதானம் உள்ளவர்கள் கூட அவ்வெறியர்கள் வலையில் மாட்டிக் கொள்ளுகிறார்கள். — ஒரு உதாரணம்.

அஞ்சல் ஏடு (தபால் கார்டு) பணம் அனுப்பும் பதிவுத்தாள் — இவைகள் இந்தி மொழியில் பொறிக்கப்பட்டு இங்கு வழங்கப்படுகின்றன; மக்கள் விருப்பத்துக்கு மாறாக இந்தி மொழியைத் திணிக்க மாட்டோம் என்று பறைசாற்றுகிறார்களே, இச் செயலைத் 'திணிப்பு' என்று சொல்லாமல், வேறு எப்படிச் சொல்லுவதோ! இது தமிழர் விருப்பமோ? இது வலுக்கட்டாயம் இல்லையா? சென்னை அரசாங்கப் பிரதம காரியதரிசி அவர்களே இந்தி மொழியில் வந்த பணம் அனுப்பும் பதிவுத் தாளில் கையெழுத்திடத் தெரியாது விழித்து, 'தர்ம' நிலையை அடைந்தார் என்றால், பிறரின் நிலையைப் பற்றிப் பேசவும் வேண்டுமோ?

மக்களாட்சி என்பது சொல்லளவோடு நில்லாமல் செயலிலும் நிகழ வேண்டும் என்றால் அந்தந்த வட்டார மொழிகளிலேயே பணம் அனுப்பும் பதிவுத்தாள், பயணச் சீட்டு முதலியவைகளில் குறிக்கப்பட வேண்டும். அடிமைப்பட்டிருந்த அன்னிய ஆங்கில ஆட்சியில் கூட இவை தமிழில் இருந்தனவே! கரன்சி நோட்டுகளில் தமிழிலும் பொறிக்கப்பட்டிருந்தது; காலணாக் காசில் கூடத் தமிழ் இருந்தது. சுதந்திரம் பெற்ற பின்னர், இவைகளில் இருந்த தமிழ் மொழி மறைந்தது என்றால், 'இதுவா சுதந்திரம்?' என்று மக்கள் வெறுத்து இகழ மாட்டார்களா? எனவே, தமிழகத்தில், மீண்டும் மேற்சொன்ன இனங்களில் தமிழ் மொழியில் பொறிக்கப்பட வேண்டும். மற்ற மொழி வட்டாரங்களிலும் அப்படியே வேண்டும்.

இதனை அரசியலார் கவனிப்பார்களா? கவனிக்கச்செய்யும் ஆற்றல் நம் ஒவ்வொருவர் கையிலும் இருக்கிறது என்பதை அவர்களுக்கு உணர்த்திய பின்தான் கவனிப்பார்களா?

மேலும், இவ்வாறு அஞ்சல் ஏடுகளிலும் பணம் அனுப்பும் பதிவுத்தாள்களிலும் இந்தி மொழியில் பொறித்திருப்பது அரசியல் சட்டத்துக்கு மாறானது. அரசியல் சட்டத்தை ஆக்கியவர்களில் ஒருவன் என்ற நிலையில் இதைப் பணிவோடு, ஆனால் ஆணித்தரமாகக் கூற விரும்புகிறேன்.

அரசியல் சட்டப்படி ஆங்கிலமே தொடர்ந்து பதினைந்து ஆண்டுகள் மத்திய அரசின் அலுவலக மொழியாகும். ஆனால் அதற்கு முன்னும் இந்தி மொழியைக் குறிப்பிடுகிற சில காரியங்களுக்கு உபயோகித்துக் கொள்ள ஜனாதிபதிக்கு உரிமை உண்டு. ஆனால் அவ்வாறு அவர் செய்ய முற்படும்போது, ஆங்கிலத்துடன் கூட இந்தி மொழியைச் சேர்த்துக் கொள்ளலாமே ஒழிய, ஆங்கில வாசகத்தைச் சிறிதும் எடுத்துவிடக் கூடாது என்பது சட்டம். 'In addition to English' 'ஆங்கிலத்தோடு கூட' என்பதே சட்டத்தின் சொற்கள். ஆங்கிலச் சொற்களோடு சேர்த்து, தேவையானால் இந்தியைப் போட்டுக் கொள்ளலாம். ஆனால் ஆங்கிலம் இருந்தே தீரும். எனவே, பட்டப்பகலில் இப்படிச் சட்ட விரோதமான செயலைச் செய்யத் துணிகிறவர்களிடம் நாம் எப்படி நம்பிக்கை வைக்கமுடியும் என்பதை அறிஞர்கள் சிந்திப்பார்களாக!

சென்னை அரசியலார் இதைப்பற்றி ஏதேனும் நடவடிக்கை எடுத்துள்ளார்களா? இது பற்றி நான் முன்னர் இங்கு எழுதிய முடங்கலுக்கு மறுமொழியே இல்லை. மீண்டும் எழுதி உள்ளேன். மறுமொழி தருவார்களா? பொறுத்திருந்து பார்ப்போம்.

மொழிப் பிரச்னையைப் பற்றிச் சீரிய முறையில் விளக்கி வருகிற 'கல்கி'யைப் பாராட்டுகிறேன். தமிழர்கள் இதுபோழ்து, ராஜாஜியைப் பின்பற்றி, தமிழ்நாடெங்கும் கூட்டங்கள் கூட்டி, நிலைமையை மக்களுக்கு விளக்க வேண்டியது அவசரமும் அவசியமும் ஆகும். தும்பை விட்டு வாலைப் பிடிக்க முற்படுவது அறிவுடைமைக்கு அழகாகாது.



... You'll love
MAX FACTOR
HOLLYWOOD
Color-fast
LIPSTICK
Lanolin-rich Color-fast Lipstick won't blot away, won't fade away, won't eat away...stays on until you take it off. Its satiny long-lasting lustre will always be on your lips. It looks better, feels better too!
Eight Exciting New Shades
Available at all Leading Cosmetic and General Stores
ELEANOR PARKER
in "LIZZIE"
an MGM release
SOLE AGENTS IN INDIA: ORIENT COSMETICS PRIVATE LTD. MADRAS, BOMBAY, CALCUTTA.
Aiyars LS 7

சக்கரவர்த்தி அசோகன்

பாரதம் சுதந்திரம் பெற்றவுடன் நாம் அசோகனையே நினைவுகூர்ந்தோம். சுதந்திரப் போராட்டத்தில் ஊக்கமும் உற்சாகமும் மூட்டிய மூவர்ணக் கொடியில் அசோகனின் தர்ம சக்கரம் ஏற்றி அவன் ஆட்சி நடத்திய முறையில் நமது ஆட்சியும் நடைபெற வேண்டும் என்று உறுதி பூண்டோம்.

பாரத நாட்டை அன்பு நெறியில் அஹிம்சை வழியில் நாற்பதாண்டுகள் சீரும் சிறப்புடன் ஆண்ட பேரரசன் அசோகன். எந்தப் பேரரசனும் கையாளாத அன்பு நெறியை அவன் பின்பற்றியதாலேயே உலகப் பேரரசர்களில் அவன் முதன்மை இடம் பெற்றான். மேற்கே இந்துகுஷ் மலையிலிருந்து கிழக்கே பிரம்மபுத்ரா வரையிலும், வடக்கே காஷ்மீரம் முதல் தெற்கே பாலாறு வரையிலும், வியாபித்த பெரு நாட்டை மிகச் சிறப்புடன் அன்பு நெறியில் நிறுவி ஆண்டு வந்தான்.

இந்த அன்பு நெறியைக் கடைப்பிடிக்க எப்படி நேர்ந்தது? வீர அரச குல பரம்பரையில் தோன்றிய மன்னன் வாளைத் துறந்து அன்பு மதத்தைக் கையாள எப்படி மனம் வந்தது? அரசஉடையையும் அலங்காரங்களையும்துறந்து காவியுடை தரித்துப் பௌத்த பிக்ஷுவாகியும் ஆண்டிருக்கிறான். இது எப்படி நேர்ந்தது?

எத்தனையோ பேருடைய வாழ்க்கையில் சர்வ சாதாரண சம்பவம் பெரும் மாறுதலை உண்டாக்கி விடுகிறது. அதுபோல் அசோக சக்கரவர்த்தியின் வாழ்க்கையிலும் ஒரு போர் அவன் வாழ்க்கை முறையையும் ஆட்சி முறையையும் முற்றும் மாற்றி விட்டது.



அசோகன் இரண்டாயிரத்து இருநூறு ஆண்டுகளுக்கு முன் பட்டத்துக்கு வந்தான். பட்டத்துக்கு வந்த எட்டாவது ஆண்டு நாடு பிடிக்கும் நோக்கத்துடன் கலிங்கத்தின் மீது போர் தொடுத்தான். கலிங்கம் என்பது தற்போது ஒரிஸ்ஸா என்று வழங்கும் ராஜ்யத்தைக் குறிக்கும். பழைய கலிங்கம், தற்போதுள்ள ஒரிஸ்ஸா ராஜ்யத்தை விடப் பெரிது. போர் மிகக் கடுமையாக நடைபெற்றது. இந்தப் போரில் ஒரு லட்சத்து ஐம்பதினாயிரம் பேர்கள் கைதானார்கள். ஒரு லட்சம் பேர் கொல்லப்பட்டார்கள். இதைப்பற்றி அசோகருடைய கல்வெட்டு கூறுவதைப் பாருங்கள்:

''கலிங்கத்தை வெற்றி கொண்டதுமே அரசருக்கு அளவுகடந்த மனவருத்தம் ஏற்பட்டது. அதன் விளைவாக, அவர் அன்பு மதத்தைப் பின்பற்றத் தொடங்கி விட்டார்.

''ஏற்கெனவே வெற்றி கொள்ளாத ஒரு நாட்டின் மீது படையெடுப்பதால் கொலை, சாவு, சிறைப்படுத்துதல் ஆகிய கொடுமைகள் நிகழ்கின்றன. இவற்றைக் கண்டு அரசருக்கு அளவுகடந்த வருத்தம் உண்டாகிறது.''

ஆகவே அரசன் மறம் நிரம்பிய போர்த் தொழிலை விட்டு அன்பு முறையைக் கைக்கொண்டான். பகவான் புத்தர் காட்டிய நெறியைக் கைக்கொண்டான். இந்த அன்பு நெறியில் ருஷ்யா நீங்கிய ஐரோப்பா கண்டம் முழுதும் அடங்கக் கூடிய பெரிய ராஜ்யத்தையே ஸ்தாபித்தான். அது மட்டுமா? அவன் தான் புத்தமதக் கொள்கைகளைப் பரப்ப, மேற்கே பாரசீகம், ஸிரியா, எகிப்து வரை தூதர்களை அனுப்பினான். தெற்கே இலங்கைக்குத் தனது புதல்வியையே அனுப்பி வைத்தான். இவற்றின் பயனாகச் சீனா, பர்மா, இலங்கை ஆகிய நாடுகளில் இன்றுவரை புத்த மதம் நிலைத்து நிற்கிறது.

புத்தமதக் கொள்கைகளை, அன்பு மதத்தை அசோகனே தனது வாழ்க்கையிலேயே கடைப்பிடிக்கத் தொடங்கினான்.

நாட்டு மக்களுக்கு என்று அரசன் எத்தனையோ உபகாரங்கள் செய்திருக்கிறான். வைத்தியசாலைகள், போக்குவரத்துக்கான சாலைகள், நிழல் தரும் மரங்கள் இப்படி எத்தனையோ காரியங்கள் செய்திருக்கிறான். இவை அத்தனையையும்விட மக்களின் குற்றங் குறைகளைக் கேட்பதற்கும், நாட்டு நடப்பு விஷயங்களை அவ்வப்போது தெரிந்து கொள்வதற்கும் அவன் விதித்திருந்த விதி முறையைக் காணும்போது மெய்சிலிர்க்கிறது!

''நான் அந்தப்புரத்தில் இருந்தாலும், சாப்பிட்டுக் கொண்டிருந்தாலும், படுக்கையறையிலிருந்தாலும், வண்டியில் போய்க் கொண்டிருந்தாலும், நந்தவனத்திலிருந்தாலும் எங்கிருந்தாலும் எந்த வேளையானாலும் அரசாங்கத் தூதர்கள் எனக்கு அவ்வப்போது மக்களின் விவகாரங்களைப் பற்றி உணர்த்திக்கொண்டேயிருக்க வேண்டும். மக்களின் அக்குறைகளைக் கேட்ட நிமிஷமே நிவர்த்திசெய்யத் தயாராகவே இருக்கிறேன்.''

ஒரு அதிகாரியைப் பேட்டி காணவோ, ஒரு குறையைச் சர்க்காருக்கு எழுதி அதற்குத் தருந்த பதில் கிடைக்கவோ ஆறுமாதம் தவம் கிடப்பது முறை என்பது நியதியாகி விட்ட இந்நாளில் இப்படியொரு பேரரசன் பாரத நாட்டை ஆண்டு வந்தான் என்பதை யாவரும் நினைவுபடுத்திக் கொள்வோமாக.

ஆயுத பலந்தான் பலம்; அணுகுண்டுகளைத் துறந்துவிட்டு எப்படி வாழ்வது என்று மலைப்பவர்களுக்கு ''அசோகனைச் சற்றுக் கூர்ந்து பாருங்கள்'' என்றுதான் பாரதக் கொடியிலுள்ள அசோகச் சக்கரம் கூறுகிறது.

அன்னம் இட்ட கை



பிலஹரி

"இராப் பிச்சை!...அம்மா!...தாயே... அன்னப் பிச்சை போடுங்க அம்மா!"

தொண்டைத் தண்ணீரை யெல்லாம் குரலாக மாற்றி, அவன் கூவியதுதான் மிச்சம். ஒரு கவளம் சோறுக்கு வழி பிறக்கவில்லை.

ஏழரை மணி சுமாருக்கு, தன்னுடைய வழக்கமான வீதிவலம் வருவதைத் தொடர்ந்தான் அவன். மணி ஒன்பது ஆகிவிட்டது. சித்திரை வீதிகள் நான்கையும் சுற்றி விட்டான். அவன் எழுப்பிய அபயக்குரல் உலகத்தின் செவிகளில் புகவில்லையோ அல்லது காலத்தின் கொடுமை, இரக்கம், பச்சாத்தாபம் என்ற சொற்களை யெல்லாம் கட்டுப் போகக்கி விட்டதோ, தெரியவில்லை! அவனை எவருமே அழைத்து ஒரு பிடி அன்னம் இடவில்லை.

புறப்பட்ட இடத்துக்கே, இறுதியில் வந்து நின்றான் அவன். அதாவது—தேரடிக்கு. கால்கள் தேய்ந்தன, களைப்பின் மிகுதியால்.

வானத்தை நிமிர்ந்து நோக்கினான். நிர்மலமான ஆகாயத்தில், பூர்ண சந்திரனின் தனி ஆட்சி நடந்து கொண்டிருந்தது. பௌர்ணமி நிலவில், தெருவெல்லாம் குளுமையின் வெள்ளக் காடாகக் காட்சி அளித்தது. உண்ணும் உணவு விஷயத்தில் வேண்டுமானால், தான் ஈன்றெடுத்த உயிர்களுக்கு இடையே பட்சபாதம் ஆண்டவன் காட்டிவிட்டானே தவிர, இயற்கை அன்னையின் எழிலை அள்ளிப் பருக எல்லோருக்கும் உரிமை என்னவோ அளித்து விட்டான். உள்ளம், அழகோடு உறவாடலாம். ஆனால், பாழும் வயிறு கேட்கிறதா! அதை நிரப்புவதற்கு, உணவைத் தவிர வேறு எதாலும் முடியவில்லையே!



"பூச்சாண்டி!......இந்தப் பாப்பாவைப் பிடிச்சக்கோ!" அவன் திடுக்கிட்டான்.

குரல் கொடுத்த இடத்தை அவன் நோக்கினான். அங்கே—

ஒரு தாய் தன் வீட்டு வாசலில் நின்று கொண்டு குழந்தைக்குச் சாதம் ஊட்டிக் கொண்டிருந்தாள். அது பச்சைக் குழந்தை இல்லை என்பது உண்மைதான்: ஒருவேளை, அவ்வீட்டின் செல்லக் குழந்தையாக இருக்கலாம் அல்லவா? தேரடிக்கு எதிரேதான் அமைந்திருந்தது அந்த வீடு.

அவனையும் அறியாமல், அவன் அவ்வீட்டை நோக்கி நடந்தான்.

ஒரு சிறிய வெள்ளித் தாம்பாளத்தில் சாதத்தை வைத்துக் கொண்டு, மன்றாடிக் கொண்டிருந்தாள் தாயார். குழந்தை பிடிவாதம் பிடித்தது.

"நீ இப்போ சாப்பிடப் போறியா, இல்லியா?" தாயார் அதட்டினாள்.

"மாட்டேன், போ!"

"சொல்றதைக் கேளுடா!"

"மாட்டேன், போ!"

"உதைப்பேன், ராஸ்கல்!"

"மாட்டேன், போ!"

"அப்பாவிடம் சொல்லுவேன்!"

"மாட்டேன், போ!"

"பிஸ்கோத்து வாங்கித் தருகிறேன். சாப்பிடுடா, கண்ணு!"

"மாட்டேன், போ!"

"இந்தப் பூச்சாண்டியிடம் உன்னைப் பிடித்துக் கொடுத்து விடுவேன்! பேசாமல் சமர்த்தாகச் சாப்பிடு!"

"மாட்டேன், போ!"

தன்னையும் அறியாமல் 'களுக்' கென்று சிரித்து விட்டாள் அவள். மைந்தனின் மழலைச் சொற்கள், அன்னையின் ஆத்திரத்துக்கு அணை போட்டு விட்டன.

அவனும் சிரித்தான். ஒரு வாய்ச் சோற்றுக்கு இதோ அவன் அலைந்து திரிந்து சோர்ந்திருக்க, மற்றொரு ஆத்மாவுக்கு ஆகாரத்தைத் 'திணிக்க' முற்படுகின்ற அன்னையை நோக்கிச் சிரித்தான். ஒன்று முதிர்ந்த ஜீவன். மற்றொன்று பச்சிளம் குருத்து. அவ்வளவுதான் வித்தியாசம்.

"அப்போ, இந்தச் சாதத்தை என்னடா பண்ணச் சொல்றாய்?" தாயார் கேட்டாள்.

அவனை நோக்கிக் கை காட்டியது குழந்தை. அவள் கையிலிருந்த தட்டை வாங்கி, தன் குஞ்சுக் கைகளால் சாதத்தை, அவன் இரண்டடி முன்னால் வந்து நீட்டிய துணியில் அள்ளிப் போட்டு விட்டது குழந்தை.

அவனுக்கு முழுசாக, இரண்டு வாய்க்குக் கூடப் பற்றவில்லை அந்தக் குழந்தை இட்ட பிச்சை. ஆனால், அக் குழந்தைக்காக அதன் தாயார் வார்த்திருந்த நெய்யும் பருப்பும், அவன் வாய்க்கு அமிர்தம் போல் ருசித்தன. அவன் பசி போன இடம் தெரியவில்லை.

அருகிலுள்ள குழாயை நோக்கி வேகமாக நடந்தான் அவன்.

தாயும் சேயும் உள்ளே சென்றனர்.

மறு தினம் இரவு. அதே நேரம்.

வழக்கமான தொழிலை முடித்துக் கொண்டு, தேரடிக்கு வந்து உட்கார்ந்து கொண்டான். இன்று, நேற்று போல் அவ்வளவு மோசமில்லை. ஏதோ இரண்டொரு இல்லங்களில், அவனை ஓரளவு ஆதரித்தனர். அரை வயிற்றை ஆகாரம் ஆக்கிரமித்துக் கொண்டிருந்தது.

''ஏய், பூச்சாண்டி! இந்தக் குழந்தையைப் பிடிச்சுக்கோ!''

தலை நிமிர்ந்தான் அவன். முதல் நாள் கண்ட தாயும் குழந்தையும்தான்!

பின்னே சிரித்தான் — புரிந்துகொள்ளாமல். பிச்சைக்காரன் சிரித்தான் - புரிந்துகொண்டு.

மறுநாள்... அதற்கும் மறுநாள்...

நாட்கள் வளர்ந்து, உருண்டு வேகமாக ஓடிக் கொண்டிருந்தன.

ஒரு வாய்ச்சோற்றிலே உதயமான அவர்கள் நட்பும் வலுவடைந்து கொண்டே வந்தது.

தினந்தோறும், அதே வேளையில் அவன் வீட்டுக்கு வர, அக்குழந்தையும் தன் கடைசி வாய் அன்னத்தை அவனுக்கு இட்டுக் கொண்டே இருந்தது. வாய் திறந்து அவனும் அதிகம் பேசவில்லை. ஒரு வேளை, இதை ஒரு விளையாட்டாக அந்தக் குழந்தை கருதிக் கொண்டிருந்ததோ என்னவோ!



மெதுவாகச் சிரித்தவாறே இருந்த இடத்தை விட்டு எழுந்து, அவர்களை நோக்கி நடந்து சென்றான்.

குழந்தைக்கும் பெற்றவளுக்கும் நேற்றுப் போலவே இன்றும் கால்மணி நேரம் வரையில் தர்க்கம் நடந்தது. கடைசியில் —

தான் சாப்பிட்டது போக, மீதியுள்ளதை அவனுக்கு அளித்தது குழந்தை.

அவன் உள்ளம் களித்தது. அன்னமிட்ட அந்தக் கையை முத்தமிடத் துடித்தான் அவன். ஆனால், ஒரு பிச்சைக்காரன் அப்படிச் செய்தால் உலகம் தவறாக நினைத்து விடாதா?


'' நல்ல குழந்தையடா நீ! இந்தப் பிச்சைக்காரனுக்கும் சேர்த்து, இனி மேல் உன் அப்பாவைச் சம்பாதிக்கச் சொல்லு!'' என்று சிரித்தபடியே கூறினான் அவன்.

''இந்தமட்டும் குழந்தை பிடிவாதம் செய்யாமல் சாப்பிடுகிறதே!'' என்ற திருப்தி அவளுக்கு.

''சொந்தமும் பந்தமும் இல்லாத அக்குழந்தை ஒன்றுவது தினமும் தனக்கு ஒரு பிடி அன்னம் ஒதுக்குகிறதே!'' என்ற நன்றி கலந்த உணர்ச்சி அவனுக்கு.

மார்கழி மாதம்.

திருவரங்கத்தின் திருவீதிகளெல்லாம் விழாக் கோலம் பூண்டிருக்கும் காலம். 'இராப் பத்து — பகல் பத்து' என்று இருபது நாட்கள், இரவு பகல் என்று இல்லாமல், அரங்கப் பெருமானுக்கு ஆராதனையும் அபிஷேகமும் நடக்கும் புண்ணிய காலம். பக்த கோடிகளின் கூட்டம்



வந்தாலும் வராவிட்டாலும், சுற்று வட்டாரத்திலுள்ள பிச்சைக்காரர்கள் அங்கு கூடுவதற்கு மறப்பது கிடையாது. காரணம் இரண்டு மாதங்கள் அவர்கள் வயிற்றைக் கழுவுவதற்குத் தேவையான பணம் கிடைப்பதுதான்.

உற்சவத்தின் கடைசி நாள்.

வழக்கமாக, தான் உட்கார்ந்து தொழில் நடத்தும் இடத்தைப் பிடிப்பதற்காக, அவன் விரைந்து கொண்டிருந்தான்.

கோவிலின் பிரதான வாயிலாகிய வெள்ளைக் கோபுரத்தில் நுழைந்து, உற்சவம் நடக்கும் மணல் வெளியைக் கடந்து கடைகள் நிரம்பிய ரங்க விலாசம் என்ற பகுதியை நோக்கி நடந்து கொண்டிருந்தான்.

சட்டென்று அவன் நடையின் வேகம் குறைந்தது. காரணம் —

அக் குழந்தை — தான் தவறாமல் இரவு தோறும் அவனுக்கு ஒரு கவளம் அன்னமிடும் அப் பச்சிளம் பாலகன் — மதில் ஓரத்தில் நின்று கொண்டிருந்தான்.

அந்தக் குழந்தையின் தாயார், அந்தப் புண்ணியவதி எங்கே? அருகில் இல்லையே! ஒரு வேளை, குழந்தை தனியாக வந்து விட்டதோ? அப்படி வருவதற்கும் அதற்கு வயதாகவில்லையே!

குழந்தைக்குப் பின்னால் அவன் பார்வை விழுந்தது. ஒரு துள்ளுத் துள்ளினான் அவன். ஊரின் பெயர் பெற்ற 'ரௌடி' ஒருவன் அல்லவா, அக்குழந்தையின் அருகில் நிற்கிறான்! அந்தக் கேடியின் கை குழந்தையின் கையைப் பற்றுகிறதே! ஏன்?

கேவலம், அக் குழந்தையின் கையிலுள்ள அரைப் பவுன் மோதிரத்துக்காகவா இப்படி?

அந்த இடத்தை நோக்கி ஓடினான், அவன்.

பகலில் அவனைப் பார்த்தறியாத குழந்தைக்கு, ஆள் அடையாளம் தெரியவில்லை.

"டேய்! ...... என்ன வேலையடா, இது?" என்று அவன் குரல் கொடுத்தது தான் தாமதம், குழந்தை புரிந்துகொண்டு விட்டது.

"பூச்சாண்டி!" என்று கூறிக் கொண்டே, அவனிடம் வேகமாக ஓடி வந்தது, மிரண்டு போயிருந்த அந்தக் குழந்தை.

உணர்ச்சி மிகுதியால் அவன் கை கால்கள் ஆடின. கண்களில் நீர்க் கசிவு. உள்ளம் உருகியது. குழந்தையை ஒரு கையால், கெட்டியாகப் பிடித்துக் கொண்டான்.

ரௌடி திடுக்கிட்டான். இரண்டு விநாடிகளில் சமாளித்துக் கொண்டான்.

"டேய்! உன் வேலையைப் பார்த்துக்கொண்டு போடா! குழந்தைகிட்டே வரதுக்கு நீ யாருடா?" என்று உறுமினான் கேடி.

"யாரா இருந்தால் உனக்கென்னடா?"

"சீ! ஏண்டா இந்தப் பிழைப்பு! இப்படிப் பிழைக்கிறதை விட, காவேரியிலே விழுந்து உயிரை விடலாமே!" அவன் காரித் துப்பினான்.

"சரிதான்! சும்மா இருப்பா! நான் அந்தப் பக்கம் போனதும், நீ கைவரிசையைக் காண்பிக்க மாட்டே! உனக்கும் பங்கு தரேன்!"

அவ்வளவுதான்; மறு விநாடி, அந்தப் பிச்சைக்காரனின் வலுவான கை, அந்தக் கேடியின் கன்னத்தைப் பதம் பார்த்தது.

"மறுபடியும் அந்தக் கையைத் தொட்டாயோ, உன் கையை முறித்து விடுவேன்! சாதாரணக் கை அல்லடா அது! எனக்கு அன்னமிடும் கை! அன்னையின் கைக்குச் சமமான கையடா அது!"

சடாரென்று, தன் இடுப்பைத் துழாவினான் அந்த ரௌடி. மறுகணம் —

அந்தப் பிச்சைக்காரன் மார்பின் அருகில், ஏதோ ஒன்று சுரீர் என்று பாய்ந்தது. குருதி வெள்ளம் குதிபோட்டு வெளிக் கிளம்பியது.

"ஐயோ! அம்மா!" மார்பைப் பிடித்துக் கொண்டே, அவன் சாய்ந்தான்.

குத்தியவன் ஓடினான். கூட்டம் கூடிவிட்டது.

மறுநாள் இரவு. பௌர்ணமி தினம்.

தேரடிக்கு எதிரேயுள்ள வீட்டில், அன்னை அந்தக் குழந்தைக்கு அன்னமிட்டுக் கொண்டிருந்தாள், வழக்கம்போல்.

கொண்டு வந்த சாதத்தில் பெரும் பகுதியை விழுங்கி விட்டது குழந்தை. கடைசியில் ஒரு பிடி அன்னத்தைத் தன் கையில் எடுத்துக் கொண்டு, தெருவை எட்டிப் பார்த்தது.

அம்மா புரிந்துகொண்டு விட்டாள். அவள் கண்களில் ஒரு சொட்டு நீர் ரூடியது.

"இனி அந்த பூச்சாண்டி வரமாட்டாண்டா கண்ணு! நீயே இதையும் சாப்பிடு!"

"ஹஹும்!" என்று தலையை ஆட்டியது அந்தக் குழந்தை. பழுத்துப் போனது, அதன் கையில் ஒரு கவளம் அன்னம் இருந்தது. ஆனால், அதைப் பெற வேண்டியவன் அங்கே வரவேயில்லை. இனிமேல் அவன் வரவே மாட்டான் என்ற உணர்வை, அந்தப் பச்சைக் குழந்தை என்றைக்கு அடையப் போகிறதோ?


ஜனவரி 24ஃ முதல்
சென்னை பிளாஸாவிலும்
மதுரை லக்ஷ்மியிலும்
பிரசாத் புரொடக்ஷன்ஸ்
சாரதா
டைரக்ஷன்...பிரசாத்
சங்கீதம்..C.ராமச்சந்திரா
BALU BROS



மலாக்காவின் மாண்பு

சிங்கப்பூர், கோலாலம்பூர், ஈப்போ, பினாங்கு இந்த வரிசையில் எங்கள் கலை உலா நடைபெற வேண்டும் என்பது ஏற்பாடு. இந்த உலாவை முடித்துக் கொண்டு ஜூலை மாதம் பன்னிரண்டாம் தேதி பினாங்கில் கப்பலேறிக் கலைக் குழுவினர் அனைவரும் சென்னைக்குப் புறப்பட வேண்டும் என்று முடிவு செய்யப்பட்டிருந்தது.

ஆனால் ஆசிய நாட்டையே கதிகலங்கச் செய்யும் புயல் போல வீசிய சளிக் காய்ச்சலின் களியாட்டம் எங்கள் பயணத் திட்டத்தையும் பலமாகத் தாக்கியது. மலேயாவுக்கும் இந்தியாவுக்கும் இடையே கப்பல் போக்குவரத்து தடைப்படும் அளவுக்குக் காய்ச்சலின் வேகம் உச்ச நிலை அடைந்தது.

''ஜூன், ஜூலை மாதங்களில் ஸ்டேட்-ஆப் மதராஸ் கப்பல் சென்னைக்குப் புறப்படாது!'' என்று கப்பல் கம்பெனியார் மிகத் தெளிவாக அறிவித்து விட்டனர்.

கம்பெனியார் இந்த அறிவிப்போடு மட்டும் நிறுத்திக் கொள்ள வில்லை. இன்னொரு செய்தியையும் வெளியிட்டார்கள்.

எதிர்பாராமல் கிடைத்த ஓய்வைப் பயன்படுத்திக் கொண்டு கப்பலைக் கல்கத்தாவுக்கு அனுப்பிப் பழுது பார்ப்பதென்ற முடிவுக்கும் கம்பெனியார் வந்து விட்டனர்.

கப்பல் கல்கத்தாவுக்குப் போய்ப் பழுது பார்க்கப்பட்டுத் திரும்பும் வரை எல்லோரும் மலேயாவிலேயே தங்க வேண்டியதுதானா? நமது பயணம் காலவரையறையின்றி ஒத்தி வைக்கப்படுமா? இவ்வாறெல்லாம் எங்களில் பலருக்கு ஏக்கம் எழுந்தது.

ஆயினும் கப்பல் கம்பெனியின் கோலாலம்பூர் நிலையப் பொறுப்பாளரான நண்பர் திரு எஸ். ஓ. கே. உபயதுல்லா அவர்கள் அளித்த வாக்குறுதி என்னும் மருந்து எங்கள் ஏக்கத்தைப் போக்கி ஊக்கத்தைத் தந்தது.

கே. சண்முகம் புத்தகசாலை சுப்பிரமணியம்

எதிர்பாராத நிலையில் எங்கள் சுற்றுப் பயணக் காலம் நீடிக்கப்பட்டதும் ஒரு வகையில் நல்லதாகத்தான் பட்டது. எங்கள் முதல் திட்டத்திலே இப்படி ஒரு மாற்றம் ஏற்படாமல் போயிருந்தால், நாங்கள் மூவாருக்குப் புறப்பட்டிருக்க முடியாது. நண்பர் திரு சித. நாராயணன் செட்டியார் அவர்களின் அன்பு வரவேற்பை ஏற்றிருக்க முடியாது; இந்திய சன்மார்க்க சங்கப் பள்ளிக் கூடக் கட்டட நிதிக்கு உதவி செய்திருக்க முடியாது; எல்லாவற்றுக்கும் மேலாக மலாயாவின் சரித்திரப் புகழ் பெற்ற பழைய நகரமான மலாக்காவின் மாண்பைக் கண்டு மகிழ்ந்திருக்கவும் முடியாது.

சிங்கப்பூரிலிருந்து இருநூற்றைம்பது மைல்கள் முன்னேறிச் சென்று கோலாலம்பூரில் சுமார் ஒரு மாத காலம் தங்கிய நாங்கள் மூவார் நகரத்தை நாடி நூற்றிருபது மைல்கள் பின்னோக்கிப் பிரயாணம் செய்ய வேண்டியதாக இருந்தது.

ஜூன் மாதம் இருபத்தோராம் தேதி மாலை குழுவினர் அனைவரும் மூவார் படகுத் துறையை அடைந்தோம். நதிக்கு அக்கரையில் மூவார் நகரம் கம்பீரமாகக் காட்சியளித்தது. அக்கரைக்குச் செல்ல நதியின் குறுக்கே பாலம் ஒன்றும் கிடையாது. படகுகளில்தான் ஆற்றைக் கடக்க வேண்டும். படகுகள் மனிதர்களை மட்டுமல்லாமல் கார்களையும் லாரிகளையும்கூட ஏற்றிச் செல்லும் வசதி வாய்ந்தவை. படகு ஒன்றில் ஒரே சமயத்தில் ஆறு கார்களையாவது மூன்று பெரிய லாரிகளையாவது ஏற்றிச் செல்ல முடியும். மனிதர்களை ஏற்றிச் செல்லும் படகு ஒன்றில் ஒரே சமயத்தில் முப்பத்தைந்து பேர்கள் அமர்ந்து செல்ல முடியும்.

அன்னம் போல நீந்திச் செல்லும் படகுகளில் நாங்களும் எங்களை ஏற்றி வந்த கார்களும் ஆற்றைக் கடந்தபோது மிகவும் உல்லாசமாக இருந்தது. அக்கரையில் ஆற்றங்கரையாகத் தோற்றமளிக்கும் ஜாலன் மகாராணி என்ற வீதியில் படகுத் துறைக்கு எதிராகவே அமைந்துள்ளது திரு நாராயணன் செட்டியார் அவர்களின் இல்லம்.

அக்கரையில் இறங்கிய எங்களைத் திருவாளர்கள் நாராயணன் செட்டியார், காசியா பிள்ளை, வி. க. திருநாவுக்கரசு முதலியோரும் சன்மார்க்க சங்கத்தின் ஏனைய அன்பர்கள் பலரும் எதிர்கொண்டு அழைத்துச்சென்றனர். நெடுந் தூரம் கார்ப் பயணம் செய்து வந்த எங்களது அலுப்புத் தீரச் சற்று நேரமேனும் அமர்வதற்குக்கூட அவகாசம் இல்லாமல் எங்களை நேராக ஒரு மண்டபத்துக்கு அழைத்துச் சென்று வரவேற்புத் தேநீர் விருந்து

பாய்கள் பின்னும் மலாய்ச் சிறுமிகள், மலாக்காவுக்கே உரித்தான அபூர்வமான மாட்டு வண்டி.

அளித்ததுடன் தங்கள் அன்புப் பாராட்டுரைகளால் திணறச் செய்தனர்.

மறுநாள் அதாவது ஜூன் மாதம் இருபத்திரண்டாம் தேதி காலையில் திரு எஸ். வி. ராமன் ஜே. பி. அவர்கள் எங்கள் அனைவரையும் மூவாரிலிருந்து சுமார் இருபத்தைந்து மைல் தொலைவில் உள்ள மலாக்கா என்னும் மூதூருக்கு அழைத்துச் சென்றார். மலாக்காவை அடுத்துள்ள அலோர் காஜா என்ற ஊரில் ஒரு ரப்பர் எஸ்டேட் மானேஜராகப் பொறுப்பு வகிக்கிறார் திரு ராமன்.

மலாக்காவைப் பற்றிய பெருமைகளை எங்களுக்கு எடுத்துச் சொல்வதிலே அவர் மிகுந்த உற்சாகமாக இருந்தார்.

ஏழு வேட்டை நாய்களை முயல் ஒன்று எதிர்த்து விரட்டிய வீரம் செறிந்த மண் என்று நமது பாஞ்சாலங் குறிச்சி மண்ணின் சக்தி பாராட்டப்பட்டது போல் மலாக்கா மண்ணிலும் வீரம் கலந்திருப்பதாக மலாய் வரலாறு ஒன்று கூறுகிறது. மலாக்கா ராஜ்யத்தை நிறுவிய பரமேஸ்வரன் என்னும் இந்து அரசன் முதன் முதலில் இதே மண்ணில் அடியெடுத்து வைத்ததும் ஒரு விந்தையைக் கண்டு சிந்தனையைப் பறி கொடுத்தானாம். சுங்கை போட்டம் என்னும் ஆற்றங்கரையிலே மான் ஒன்று தன்னைத் துரத்தி வந்த ஒரு வேட்டைநாயை எதிர்த்துக் காலால் உதைத்து ஆற்றிலே தள்ளி விட்டதாம்.

பரமேஸ்வரன் சீனாவோடு தொடர்பு கொண்டு யூங்-லி என்ற சீனச் சக்கரவர்த்தி ஒருவரின் உதவியினால்தான் மலாக்காவின் அரசனானான். கி. பி. 1403 முதல் 1414 வரை மலாக்காவின் முன்னேற்றத்துக்குக் காரணமாக இருந்து அரசாண்டான். பரமேஸ்வரனுடைய மகனான ராஜா புசார் மூடா என்பவன் இஸ்லாம் மதத்தைச் சேர்ந்த ஓர் அரச குமாரியைத் திருமணம் செய்து கொள்ள நேர்ந்தது. அந்த மனைவியின் ஆசையை நிறைவேற்றும் பொருட்டு அவனும் இஸ்லாம் மதத்தைப் பின்பற்றித் தன் பெயரை மூகமது இஸ்கந்தர்ஷா என்று மாற்றிக் கொண்டான். மலேயாவின் முதல் முஸ்லீம் சுல்தானாக விளங்கினான் இஸ்கந்தர் ஷா.

இஸ்கந்தர் ஷாவுக்குப்பின் முஸ்லிம் அரசர்களின் ஆதிக்கத்தில் மலாக்கா இருந்தது. கி. பி. 1511ல் போர்ச்சுகீசியர்கள் மலாக்காவைக் கைப்பற்றினர். 1641ல் மலாக்கா டச்சுக்காரர்களின் ஆதிக்கத்துக்கு வந்தது. 1795ல் ஆங்கிலேயர்கள் மலாக்காவின் ஆட்சிப் பொறுப்பை ஏற்றனர்.

மலாக்காவில் இந்தியர், சீனர், மலாய்க்காரர், போர்ச்சுகீசியர், டச்சுக்காரர், ஆங்கிலேயர் முதலிய பல இனத்தவரின் கலாசாரச் சின்னங்களைக் காண முடிகிறது.

தமிழன் வகுத்த நிலப் பாகுபாட்டின்படி கவனித்தால் மலாக்காவை நெய்தலும், குறிஞ்சியும், மருதமும் இணைந்து காணும் புதுமை தவழும் பழம் பெரும்பதி என்றுதான் சொல்லத் தோன்றுகிறது.

சாலையிலே நாங்கள் சென்று கொண்டிருந்த போது இருமருங்கிலும் தென்பட்ட பசுமையான வயல்கள் திருநெல்வேலி மாவட்டத்தையும் தஞ்சை மாவட்டத்தையும் எங்கள் நினைவுக்குக் கொண்டு வந்தன. தலைக்கூடை அணிந்து வயலிலே வேலை செய்த மலாய்க்கார மக்களைக் கண்ட பிறகுதான் 'மலாக்காவையே காணுகிறோம்' என்ற உணர்ச்சி எங்களுக்கு ஏற்பட்டது.

'மலாக்கா வண்டி' என்ற சிறப்புப் பெயர் பெற்ற பழமையான மாட்டு வண்டிகள் கிராமப்புறங்களிலிருந்து விளை பொருள்களை ஏற்றிவரும் அழகு எங்களை மிகவும் கவர்ந்தது.

நகருக்கு நடுவே மலாக்கா நதி ஓடிக்கொண்டிருக்கிறது. நதியைத் தொட்டு முத்தமிட்டுக் கொண்டிருக்கும் கட்டடங்கள் ஏராளம். மலாக்கா என்னும் முக்கிய வர்த்தகக் கேந்திரத்தைக் கைப்பற்றுவதற்காக நடைபெற்ற எத்தனையோ போர்களைக் கண்டிருக்கிறது இந்த மகத்தான நதி.

மலாக்காவில் புக்கிட் சீனக் குன்றில் மிகப் பழமையான கிணறு ஒன்று அரசாங்கத்தாரால் பாதுகாக்கப்பட்டு வருகிறது. அதற்கு "பீரிகி ராஜா" கிணறு என்று பெயர். அந்தக் கிணற்றை ஒட்டிச் சீனர் கோயில் ஒன்றும் உள்ளது. அந்தக் கிணற்றுக்கு ஒரு மகத்துவம் உண்டென்று மக்கள் நம்புகின்றனர். மலாக்காவுக்கு வரும் வெளிநாட்டார் அந்தக் கிணற்று நீரில் ஒரு குவளை அருந்தினால் கட்டாயமாக மீண்டும் ஒருமுறை மலேயாவுக்கு வரக்கூடிய வாய்ப்பு ஏற்பட்டே தீரும் என்பதுதான் அந்த நம்பிக்கை. கர்ண பரம்



ரப்பர் மரத்தில் பால் வெட்டும் தொழிலாளி

பரையாக வளர்ந்து வரும் அந்த நம்பிக்கையைப் பற்றிக் கேள்விப்பட்டவுடன் நமது குழுவைச் சேர்ந்த நடிகநடிகைகள் ஒவ்வொருவரும் அந்தத் தொன்மையான ஊற்று நீரை அள்ளிப் பருகுவதற்கு முந்திக் கொண்டனர்.

பின்னர் சீன, பௌத்த, சீக்கிய தேவாலயங்கள் சிலவற்றுக்குச் சென்று கண்டு மகிழ்ந்தோம்.

நண்பகலில் நகருக்குப் புறத்தே சுமார் நான்கு மைல் தொலைவில் உள்ள சன்னாசி மலைக்கு அனைவரும் அழைத்துச் செல்லப் பட்டோம். பொதுநலப் பணியாற்றிய சன்னாசி ஒருவர் சமாதி அடைந்த இடம் அது. அந்த மலையில் செட்டியார் சமூகத்தினருக்குச் சொந்தமான தண்டபாணி கோயில் ஒன்று உள்ளது. சுற்று மதிலும் மண்டபமும் அமைந்த அந்தக் கோயிலில் மிகப் பெரிய மடப்பள்ளி அதாவது சமையல் விடுதி ஒன்றும் உள்ளது.

ஜப்பானியப் போர் நிகழ்ந்த காலத்தில் மலாக்காவில் வதியும் செட்டிமார் அனைவருக்கும் புகலிடமாக விளங்கியது சன்னாசிமலைக் கோயில்தான் என்றும், அவர்களுடைய செல்வங்க ளெல்லாம் கோயிலிலேதான் அந்தரங்கமாகப் பத்திரப் படுத்தப்பட்டன என்றும் நண்பர்கள் தெரிவித்தனர்.

சன்னாசி மலைக் கோயிலில் அன்பர்களின் வரவேற்பும் நண்பகல் விருந்தும் உள்ளத்துக்கும் உடலுக்கும் ஊக்கத்தைத் தந்தன. பெருமித விருந்தின் பின்னர் சிறிது நேரம் ஓய்வு பெறுவதற்காக நகரத்தின் மத்தியில் சிங்கைத் தமிழன்பர் திரு பொ. கோவிந்தசாமிப் பிள்ளை அவர்களுக்குச் சொந்தமாக விளங்கும் புதிய விருந்து மாளிகைக்குச் சென்றோம். மிக ஒடுக்கமான மூன்று அடுக்கு நிலையமாக எழுந்துள்ளது ஒப்பற்ற அந்த விருந்து மாளிகை.

ஓய்வு நேரத்தைக் குறைத்துக் கொண்டு பிற்பகலில் செயின்ட் ஜான் குன்றிலுள்ள கோட்டையைக் காணச் சென்றோம். டச்சுக் காரர்களால் கட்டப்பட்ட இந்தக் கோட்டையில் பாழடைந்த மதில் சுவர்கள் மட்டுமே இப்போது காணப்படுகின்றன.

போர்ச்சுகீசியரால் கட்டப்பட்ட புராதனமான கோட்டை வாசலையும் கண்டோம். பின்னர் வனப்பு மிகுந்த கடற்கரைப் பூங்காவில் சற்று இளைப்பாறினோம்.

மாலை ஆறு மணியளவில் சுப்பிரமணியர்—திரௌபதி அம்மன் கோயில் மண்டபத்துக்கு வந்து சேர்ந்தோம். வெள்ளம்போல் கலை அன்பர்கள் திரண்டு குழுமி இருந்தனர். சமய வகுப்பு மாணவிகள் பதின்மூன்று வயலின்களைக் கொண்டு கூட்டிசை முழக்கினர். வரவேற்புக் கூட்டத்துக்குத் திரு எஸ். வி. ராமன் அவர்களே தலைமை தாங்கி முத்தமிழ்ச் சிறப்பைப் பற்றி நீண்டதொரு சொற்பொழிவு நிகழ்த்தினர். டாக்டர் தம்பிப் பிள்ளை, இரத்தினம் செட்டியார், இளங்கோ கலை மன்றத் தலைவர் டி. சி. தங்கவேல், கிருஷ்ண பாகவதர், அ. பொன்னம்பலனார் முதலியோர் பாராட்டுரை கூறினர்கள்.

தென்னாட்டிலிருந்து பல்லாண்டுகளுக்குமுன் மலாக்காவுக்கு வந்து குடியேறிய செட்டிமார் வகுப்பினர் மலாக்காப் பெண்மணிகளைத் திருமணம் செய்து கொண்டார்களாம். இக் கலப்பு மணத்தின் காரணமாக 'மலாக்காச் செட்டியார்' என்ற தனி இனமே உருவாகி விட்டது. இந்த இனத்தார் தமிழ் மொழியை மறந்து விட்டாலும் தமிழ் வழியை மறந்து விடவில்லை. திருமணச் சடங்குகள், வழிபாட்டு முறைகள் முதலியன நமது தென்னாட்டு மரபிலேயே நிகழ்த்தப் பெறுகின்றன.

கூடை முடைதல், பாய் பின்னுதல் முதலான கைத்தொழில்களும் மலாக்காவில் தனிச் சிறப்போடு மிளிர்கின்றன.

சில மணி நேரங்களில் மலாக்காவின் கலாசாரத்தை ஓரளவு புரிந்து கொண்டோம் என்ற மன நிறைவுடன் இரவோடு இரவாக மூவாருக்குத் திரும்பி விட்டோம்.

26 மூவார் முகாம்

மூவாரில் 'பாரடைஸ் பார்க்' என்னும் களியாட்டப் பூங்காவில் அமைந்துள்ள கலையரங்கில் இராஜராஜ சோழன், கள்வனின் காதலி ஆகிய நாடகங்கள் மிகச் சிறப்பாக நடைபெற்றன. சிறிய நகரமாக இருந்தாலும் தமிழ் நாடக விழாவுக்குக் கிடைத்த ஆதரவு மிகப் பெரிது. பொது மக்கள் காட்டிய பேராதரவு காரணமாக 'இராஜராஜ சோழன்' நாடகத்தை மீண்டும் ஒரு நாள்

நீடிக்க வேண்டியதாகவும் இருந்தது. நாடக விழா நடைபெற்ற மூன்று நாட்களும் மூவார் நகரம் திருவிழாக் கோலத்தோடு காட்சி யளித்தது. சுற்றுவட்டார ரப்பர் தோட்டங்களிலிருந்தும், மலாக்கா, தம்பின் போன்ற ஊர்களிலிருந்தும் ஏராளமான கலையன்பர்கள் கூட்டங்கூட்டமாகப் படகுகளிலேவந்து இறங்கிய காட்சி கண்கொள்ளாதது. சிங்கப்பூர்த் தமிழர் பிரதிநிதித்துவ சபைத் தலைவர் திரு கோ. சாரங்கபாணி, செயலாளர் திரு எம். எம். மாலே ஆகியோர் நாடக விழாவில் கலந்து கொண்டு, சன்மார்க்க சங்கத் தமிழ்ப் பள்ளி நிதிக்கு மக்கள் அளித்த ஆதரவைப் பாராட்டினர்.

மலேயாவுக்குள் நுழைந்தது முதல் ரப்பர்த் தோட்டம் ஒன்றுக்குச் சென்று ரப்பர் உற்பத்தியையும், தோட்டத் தொழிலாளர்களின் அயராத உழைப்பையும் கண்ணாரக் காண வேண்டும் என்று ஆவல்.

மூவார் முகாமின்போது எங்களது இந்த ஆவலை நிறைவேற்றி வைத்தார் நண்பர் திரு நாராயணன் செட்டியார் அவர்கள். ஜெயங் கொண்டார் ரப்பர்த் தோட்டம் செட்டியார் அவர்களின் பொறுப்பில் இயங்குவது.எனவே, அவர் எங்களைத் தோட்டத்துக்கு அழைத்துச் சென்று ரப்பர் உற்பத்தி பற்றிய விவரங்களை யெல்லாம் தெளிவாகக் கூறினார்.

மலேயாவின் செழிப்புக்குக் காரணமான இரு பெருஞ் செல்வங்கள் ஈயமும் ரப்பரும்.

'மண்ணிலே ஈயம்
பிறக்கும்— பச்சை
மரத்திலே ரப்பரோ
பாலாய்ச் சுரக்கும்'

மலேயாவில் ஏறக்குறைய முப்பத்தேழரை லட்சம் ஏக்கரா நிலப்பரப்பில் ரப்பர் பயிராகிறது. சிங்கப்பூர்—மலேயாவில் சுமார் பதினைந்து லட்சம் பேர்களுக்கு வாழ்வளிக்கும் தொழிலாக ரப்பர் இலங்குகிறது. ஆண்டு ஒன்றுக்குச் சுமார் ஆறரை லட்சம் டன் முதல் ஏழு லட்சம் டன் வரை மலேயாவிலிருந்து ரப்பர் ஏற்றுமதியாகிறது.

ரப்பர் வளம் மலைநாட்டிலே பெருகத் தொடங்கி நூறு ஆண்டுகள் கூட நிரம்பவில்லையாம். அதற்குள் மலேயாவின் வளப்பத்துக்கு ஆதாரமான மாபெரும் தொழிலாக ரப்பர் உற்பத்தி வளர்ந்துள்ளது மகத்தான சாதனை என்றுதான் சொல்ல வேண்டும்.

மலை முகடு, மலைச் சரிவு, அடிவாரம், பள்ளத்தாக்கு முதலான இடங்களில் காடு முரடாக ரப்பர்த் தோட்டங்கள் வியாபித்திருக்கின்றன. இவற்றை ரப்பர்த் தோட்டங்கள் என்பதைவிட ரப்பர்க் காடுகள் என்று சொல்வது கூடப் பொருத்தமாக இருக்கும். இத்தகைய காடுகளில் புகுந்து ரப்பர் பால் வெட்டும் தொழிலாளர்களின் அயராத உழைப்பை எவ்வளவு போற்றினாலும் தகும். இவ்வாறு காடு திருத்திப் பாடுபடும் தமிழ்த் தொழிலாளர்கள் பலரை ரப்பர்த் தோட்டங்களிலே கண்டு மகிழ்ந்து பாராட்டினேம். கடல் கடந்து, உடல் உழைப்பால் காலம் தள்ளும் அந்தத் தொழிலாளர்கள் நமது தமிழகக் கலைஞர்களைப் பற்றிய விவரங்களைத் தெரிந்து கொண்டிருக்கிற அருமையை வியந்தோம்.

27 ஈப்போவில் அன்புத் தொல்லை

ஜூன் மாதம் இருபத்தேழாந் தேதி பொழுதுபுலரா முன்னமே எழுந்து அனைவரும் ஈப்போ நகரை நோக்கிப் புறப்பட்டோம். தம்பின் என்ற ஊர் வரையிலும் காரிலே சென்றோம். தம்பினில் வாழும் தமிழ்ப்பெருமக்கள் ரயிலடியில் திரளாகக் கூடிக் காலை விருந்துடன் மாபெரும் வரவேற்பு அளித்தனர். காலை எட்டு மணிக்குத் தம்பின் நிலையத்தில் ரயிலேறி மாலை ஆறு மணிக்கு ஈப்போ நகரை அடைந்தோம். வழி நெடுக சிரம்பான், கோலாலம்பூர், கம்பார் முதலான ரயில் நிலையங்களில் கலையன்பர்கள் ஆவலோடு கூடி விருந்துபசாரங்கள் செய்து பயணத்தின் அலுப்பு பறந்தோடும்படி செய்தனர்.

ஈப்போ புகைவண்டி நிலையத்தில் மலேயன் இந்தியர் காங்கிரஸ், அகில மலேயா தமிழர் சங்கம் முதலிய நிறுவனங்களின் பிரதிநிதிகளும், ஏ. எம். எஸ். பெரியசாமி, வி. மீனாட்சி சுந்தரம், கே. டி. நாகராஜ செட்டியார், ஆர். எஸ். சிவம் முதலிய பிரமுகர்களும், ஆயிரக்கணக்கான கலையன்பர்களும் கூடி நின்று நெஞ்சுகந்த வரவேற்பு அளித்தனர்.


ஈப்போ பேரா மாகாணத்தின் தலைநகரம். மலேயாவில் நாங்கள் கண்ட நகரங்கள் எல்லாவற்றிலும் ஈப்போ நகரம் மிகவும் எழில் வாய்ந்ததாக இலங்கக் கண்டோம். அகன்ற நெடுஞ்சாலைகளின் ஒழுங்கும், சுத்தமும், நெருக்கடி அதிகமில்லாத வீடுகளின் அமைப்பும் நகரத்துக்குக் கவர்ச்சி அளித்தன.

கோலாலம்பூரிலிருந்து பினங்குக்குச் செல்லும் நெடுஞ்சாலையில் நூற்றிநாற்பத்தி ஆறாவது மைலில் உள்ளது ஈப்போ.

ஈப்போவில் வாழும் இந்தியப் பெருமக்களின் கலையார்வம் கொஞ்சம் அதிகம் மீறியதாகக் கூடத் தோன்றியது! ஆயிரக்கணக்கான அன்பர்கள் கலைக் குழுவினரைக் காணும் ஆர்வத்தில் நாள்தோறும் கூட்டம் கூட்டமாக வந்து முற்றுகையிட்டு வந்தனர். ஞாயிற்றுக்கிழமைகளில் மக்கள் வெள்ளத்தைச் சமாளிக்க முடியாமல் திணறினேம்.

கூட்டத்தைச் சமாளிப்பதற்காக ஒலி பெருக்கி ஏற்பாடு செய்து, "கலைக் குழுவினர் ஓய்வெடுத்துக் கொண்டிருக்கின்றனர். மாலையில் அவர்கள் கலை அரங்குக்குச் செல்ல வேண்டும். எனவே அன்பர்கள் அனைவரும் அமைதியாகக் கலைந்து செல்லும்படி மிகத் தாழ்மையாக வேண்டிக் கொள்கிறேம்!" என்றெல்லாம் முழக்கம் செய்ய வேண்டியிருந்தது.

அவ்வளவு கூட்டம் வந்தபோதிலும் அசம்பாவிதமான நிகழ்ச்சி எதுவுமே நிகழவில்லை; குழப்பம் சிறிதுகூட விளையவில்லை! கலை அன்பர்களின் கட்டுப்பாடு மிகவும் வியக்கத்தக்கதாக இருந்தது. எனவே அன்பர்களின் ஆவலை நிறைவேற்றும் துணிவுடன் நடிக நடிகையர் தத்தம் அறைக்கு வெளியே வந்து கைகூப்பி வணங்கியும், கையெழுத்து வழங்கியும் மக்களுக்கு மகிழ்ச்சியூட்ட முடிந்தது. ரசிகர்களின் அன்புத் தொல்லையையும் அகமகிழ்ந்து வரவேற்கும் ஆவலும் ஆர்வமும் பொங்கி யெழுந்தன. (அடுத்த இதழில் முடியும்)



யுனிவர்சல் ஜீப்

இன்றைய மிகப் பிரசித்தி பெற்ற ஜீப் வண்டி

மிகத் துரிதமான


நான்கு சக்கர ஜீப்

யுடிலிட்டி வான்

பன்முறை பரிசோதனை செய்து திருப்திகரமாக சேவையளிக்கிறதென நிரூபிக்கப்பட்டுள்ளது



நம்பகமான



ஜீப் டிரெய்லர்

உறுதியானது. நன்கு உழைக்கக்கூடியது. பண்டங்களையும் உபகரணங்களையும் எளிதில் எடுத்துச் செல்ல மிகவும் உபயோகமானது

வாகனங்களுக்கு


படிப்படியாக இந்தியாவில் தயாரிப்பவர்கள்

மஹேந்திரா & மஹேந்திரா லிமிடெட்

பம்பாய் • டில்லி • கல்கத்தா • சென்னை

சென்னை காங்கிரஸ் பொருட்காட்சியிலுள்ள எமது ஸ்டாலுக்கு விஜயம் செய்யுங்கள்

பாவை விளக்கு



அகிலன்

அத்தியாயம் 10

உணர்வும் அறிவும்

உமாவின் அழுகுரல் சிறிது சிறிதாகத் தேய்ந்து, அறைக்கும் அப்பால், மாடிப்படிகளின் பக்கம் சென்று மறைந்தது. மறையும் வரையில் அதன் ஒலி தணிகாசலத்தின் காதுகளில் விழவில்லை. மறைந்த பிறகுதான் அந்த ஒலி இழவிருந்து புத்துயிர்பெற்று, சிறிது சிறிதாக வளர்ந்துகொண்டே வந்து அவன் காதுகளில் அலைமோதியது. 'அவளிடம் வாய் திறந்து ஒரு வார்த்தையாவது பேசியிருக்கலாம்; வாய் திறவாமல் மௌனம் என்ற கடுமையான தண்டனையை அவளால் பொறுத்துக் கொள்ள முடியவில்லை. மனம் உடைந்து திரும்புகிறாள்!'

தன்னுடைய முன் கோபத்துக்காகவும் முரட்டுத்தனத்துக்காகவும் தணிகாசலம் வருத்தப்பட்டுக் கொண்டான். அவள்தான் அப்படி என்ன மிகப் பெருந் தவறைச் செய்து விட்டாள்? 'சொல்லாவிட்டால் கழுத்தை நெரித்துக் கொன்று விடுவேன்!' என்று நேற்று அவளை அவன் பயமுறுத்தியதை நினைக்கும்போது அவனுக்கே சிரிப்பு வந்தது. வெளி மனிதர்களிடம் நாகரிகமாகப் பழகத் தெரிந்தவர்கள் எல்லோரும் இப்படித்தான் உள் வட்டத்தில் காட்டுமிராண்டிகளாக நடந்து கொள்வார்களா? அல்லது ஆண் பிள்ளைகள் என்றாலே காட்டுமிராண்டிகள் என்றே பொருளா?

தணிகாசலம் யோசனையில் ஆழ்ந்தான். எட்டு மணி அடித்த சுவர்க் கடிகாரம் ஒன்பது மணிக்கு நகரும் வரையில் அவன் தன்னுடைய கன்னத்தில் இருந்த கையை எடுக்கவில்லை.

ஒன்பது மணிக்குத் திரும்பவும் உமா அவனுடைய அறைக்கு வந்தாள்; அவனை ஏறிட்டுப் பார்க்காமல் ஒரு துண்டுக் காகிதத்தை மேசைமேல் வைத்து விட்டு விரைந்து சென்றாள். அடுத்த நிமிடத்தில் அவளும் கௌரியும் தாழ்வாரத்தில் கலகலப்பாகச் சிரித்துப் பேசும் சத்தம் கேட்டது. திரும்பவும் தன்னைத் தேடிக் கொண்டு வருவாள் என்று எதிர்பார்த்தான் தணிகாசலம். அவனிடம் வராமலே படிகளில் இறங்கி மறைந்தாள்: வெளியில் வந்து எட்டிப் பார்த்தான்; சின்னஞ் சிறு குடையை விரித்துப் பிடித்தபடி அவள் தெருவில் நடந்து கல்லூரிக்குச் செல்வது தெரிந்தது.

மேசையில் கிடந்த துண்டுக் காகிதத்தைக் கையில் எடுத்தான்:—

''மாமா! எனக்கு உங்களிடம் நேரில் பேசுவதற்குப் பயமாக இருக்கிறது. நீங்கள் நான் நேரில் சொன்னால் நம்ப மாட்டீர்கள். சொல்வதற்காகத்தான் வந்தேன்; உங்கள்



மூகத்தைப் பார்த்தவுடன் எனக்குப் பயமாக இருந்தது. — என் அம்மா சாட்சியாக இதில் நான் பொய் எழுத வில்லே. இனி மேலாவது என்னே நீங்கள் நம்புவீர்களா ?'

எனக்கு ஏன் அப்படி நடந்துகொண்டேன் என்று தெரியவில்லே. ஆயிரம் முறை என்னேயே நான், 'ஏன் ? ஏன் ?' என்று கேட்டுக் கொண்டேன். அப்படியும் எனக்குத் தெரியவில்லே. இரவெல்லாம் எனக்குத் தூக்கம் கிடையாது. இன்னும் என் நெஞ்சுக்குள் ஒரு மூலேயில் மெதுவாக வலித்துக் கொண்டேதான் இருக்கிறது. காரணம் விளங்கவில்லே ; ஒரு வேளே, காரணமே இல்லாமல் நான் அப்படித் தப்பாக நடந்து கொண்டிருப்பேன்.

நீங்கள் எழுதச் சொன்ன வார்த்தைகள் தப்பான வார்த்தைகள் அல்ல. உங்களுடைய முதல் கதை 'ஏமாற்ற'த்திலும் இதே வரிகள் வந்திருக்கின்றன. உங்களேப் போலவே மற்றவர்களும் இப்படி யெல்லாம் கதைகளில் எழுதி யிருக்கிருர்கள். அதற்காகக் கோபித்துக் கொண்டது என்னுடைய அறியாத்தனம். தயவுசெய்து உங்களே நான் அலட்சியப்படுத்தி விட்டேன் என்று நினேக்காதீர்கள். நீங்கள் பெரியவர்; நான் சிறியவள். இந்த எண்ணம் என்னிடம் என்றைக்கும் உண்டு.

நீங்கள் நான் செய்த தவறை மன்னித்து விட வேண்டும். உங்கள் மன்னிப்பு உண்மையானுல் உங்கள் வேலேயில் எனக்குப் பங்கு கொடுக்க வேண்டும். அந்த வேலே என்னுடைய வேலே; எப்போதும் என் நினேவில் உள்ள வேலே ; நான் எழுதி விட்டு வந்த பிறகு தண்ணீரில் சுற்றி வந்த மீன்குஞ்சின் உற்சாகம் எனக்கு ஏற்படுகிறது. தயவுசெய்து இந்தச் சிறு மீனே நீரை விட்டு வெளியில் தூக்கி எறிந்து விடாதீர்கள். தாயில்லாப் பெண்ணுக்கு அநியாயம் செய்து விடாதீர்கள். உங்கள் எழுத்து என் உயிர் மூச்சு.


சாயங்காலம் நான் எழுதுவதற்காக வருவேன். என்னே உங்கள் மனங் கொண்ட மட்டும் திட்டுங்கள். திட்டி விட்டுத் தயவு செய்து எழுதச் சொல்லுங்கள்; பிறகுதான் நான் சாப்பிடுவேன்.''

கடிதத்தைப் படித்து விட்டுக் குப்பைக் கூடையில் கிழித்துப் போட்டான் தணிகாசலம். தன் தாயின்மேல் ஆணே வைத்து அவள் குறிப்பிட்ட காரணத்தை அவன் நம்ப வேண்டியிருந்தது: 'எனக்கு



ஏன் அப்படி நடந்து கொண்டேன் என்று என்னேயே கேட்டுக் கொண்டேன். அப்படியும் எனக்குத் தெரியவில்லே.'

உமாவின் வெகுளித்தனம் இந்த வரிகளில் தெரிந்தது. குழந்தைத்தனம் வெளிப்பட்டது. எவ்வளவு வயதானுல் என்ன ? படித்தால் என்ன ? வேலே பார்த்



தால் என்ன? — வயல் வரப்பில் வேலை செய்யும் படிக்காத பதினைந்து வயதுக் கிராமப் பெண்ணுக்குத் தெரியும் சில அபூர்வமான உண்மைகள் இந்தப் பட்டதாரிகளுக்குத் தெரிவதில்லை. ஆண் பிள்ளைகளிலும் சிலர் இப்படித்தான்.


முதல் நாள் இரவில் தான் செய்த முடிவு சரியான முடிவல்ல என்பதை இப்போது அறிந்தான் தணிகாசலம். 'நான் ஒரு பெண் என்பதை அவள் உணர்ந்து கொண்டாள்; ஆனால் இன்னும் அறிந்து கொள்ள வில்லை. உணர்வும் அறிவும் வேறுபட்டவைகளல்லவா? அறிந்து கொண்டவன் நான்; உணர்ந்து கொண்டவள் அவள். அவளுடைய உள்ளுணர்வு என்ன என்பது இன்னும் அவளுக்கு விளங்கவில்லை. இப்போதைக்கு விளங்காமலே இருக்கட்டும். இதைப்பற்றி அவளிடம் பேச்செடுக்க வேண்டாம்.'

'பேச்செடுத்தால் அவள் புரிந்து கொள்வாள். புரிந்து கொண்ட பிறகு விளகத் திரை போட்டுத் தன்னை மறைத்துக் கொண்டு பழக முயற்சி செய்வாள். இந்த வேற்றுமை வந்து விட்டால் பிறகு விகற்பமின்றி எழுத்தில் உழைக்க முடியாது. வாசமறுவற்ற மனம் வெள்ளையாகவே இருக்கட்டும்.'

மனத்தின் பருவ மாறுதல்களது விசித்திரப் போக்கை நினைத்துத் தனக்குள் வியந்து கொண்டான் தணிகாசலம். குழந்தை தனக்குப் பசித்தாலும், தன்னை எறும்பு கடித்தாலும், தனக்குத் தூக்கம் வந்தாலும் கூட வீறிட்டு அழுகிறது. எதற்காக இந்த அழுகை என்று அதற்குத் தெரிகிறதா? உமாவுக்கும் தெரியவில்லை.

தணிகாசலம் தான் எழுதிய கதையின் காதல் கட்டத்தை நினைத்துப்பார்த்தான்: காதல் இல்லாமல் கதைகள் ஏது. கவிதைகள் ஏது. இசை, நடனம், சித்திரம், சிற்பம் — கடவுள் தான் ஏது! மனிதர்கள் வானத்திலிருந்து குதித்து வந்து விடவில்லை; தரையிலிருந்து முளைத்தும் வந்து விடவில்லை. இவளுக்குப் பயந்து கொண்டு காதலை எழுதாமல் இருக்க முடியுமா. என்ன? — வந்தவுடன் அவளிடம் சொல்லிவிட வேண்டியது தான்; 'உனக்காக நான் என் எழுத்தை மாற்றிக் கொள்ள முடியாது; குல்லாய்க்குத் தக்கபடி தலையை வெட்டிக் கொள்ளுகிற மனிதனல்ல நான்.'

மாலையில் உமா வந்தவுடன் அவளிடம் தன் கொள்கையை வலியுறுத்த விரும்பினான். அவளுக்கா



வும், வேறு யாருக்காகவும் தன்கொள்கையில் இம்மி அளவுகூட விட்டுக் கொடுக்க முடியாது! அவனைப் பொறுத்தவரையில் காதல் இந்த நாட்டின் வேற்றுமைக்கு அருமருந்து; அன்புப் போர் புரிவதற்குக் கூர்மையான மலர்க் கணை அது.

வழக்கமான நேரத்துக்கு முன்பு, சரியாக நான்கு மணிக்கெல்லாம் உமா வந்து சேர்ந்தாள். முகம் வாடியிருந்தது; என்றைக்கும் தென்படும் புதுமையை அதில் காணோம்; பசி, களைப்பு, சோர்வு, —இத்தனைக்கும் மேலாக ஏதோ குற்றம் புரிந்துவிட்ட உணர்ச்சி — இவ்வளவும்



அதில் காணப்பட்டது. ஆனால் இவ்வளவிலும் அவள் களங்கமற்ற கண்களுக்குரிய தனிக் களை குறையவில்லை.

தன்பாட்டில் தலையைக் குனிந்து கொண்டே வந்து எதிரில் கிடந்த நாற்காலியில் உட்கார்ந்தாள். வெள்ளைக் காகிதங்களை எடுத்து வைத்துக் கொண்டு பேனாவின் மேல் மூடியைக் கழற்றினாள். தணிகாசலம் சிரித்தான்.

"சொல்லுங்கள்" என்றாள் குனிந்த தலை நிமிராமல்.

"என்ன சொல்லச் சொல்கிறாய்?"

"கதை சொல்லுங்கள்!"

"ஒரே ஒரு ஊரில், ஒரே ஒரு உமா என்ற பெண் இருந்தாளாம். அவளுக்குத் திமுர் திமுரென்று கோபம் வருமாம்; திமுர் திமுர் என்று கும்மாளம் வருமாம். எது எப்போது வரும் என்று அவளுக்கே தெரியாதாம். ஏன் வருகிறதென்றும் அவளுக்குத் தெரியாதாம்!—என்ன? ஏன், எழுதாமல் உட்கார்ந்திருக்கிறாய்?" என்று கேட்டுத் தணிகாசலம் விழுந்து விழுந்து சிரித்தான்.

உமாவுக்குச் சிரிப்பும் அழுகையும் சேர்ந்தாற்போல் வந்தன. நாணத்தால் சிவந்த முகத்தை இன்னும் நன்றாக மறைத்துக் கொண்டு தனக்குள் மெதுவாகச் சிரித்துக் கொண்டாள்.

"முதலில் உன் கதையைச் சொல்; நீ எப்போது சாப்பிட்டாய்?" என்று கேட்டான் தணிகாசலம்.

அவள் பதில் சொல்லவில்லை.

"நேற்றிலிருந்து நீ இன்னும் சாப்பிடவில்லையா?" என்று கேட்டான்.

'இல்லை' என்று தலையாட்டினாள்.

"வீட்டில் உன்னை ஏன் என்று கேட்கவில்லையா? உன் அத்தை கேட்கவில்லை?"

"அத்தைக்குத் தெரியாது. ருக்மிணி தான் கேட்டாள். உடம்பு சரியில்லை என்று சொல்லி விட்டேன்."

"போ! சாப்பிட்டால்தான் உடம்பு சரியாகும். உன் வீட்டில் இல்லாவிட்டால் கௌரியிடம் கேட்டுப் போடச் சொல். நீ சாப்பிட்டு வந்தவுடன் உன்னிடம் கொஞ்சம் பேச வேண்டும். பிறகு தான் நம்முடைய எழுத்து வேலை."

"எழுதிவிட்டு...அப்புறம்..." என்று மென்று விழுங்கினாள் உமா.

"ஊஹூம்! முதலில் சாப்பாடு; அடுத்தாற்போல் நமக்குள் ஒரு சமாதான உடன்படிக்கை; அதற்கும் அடுத்தாற்போல்தான் எழுத்து."

கௌரியிடம் கேட்டு, ஆறிப்போயிருந்த மத்தியானச் சாப்பாட்டை இரண்டு வாய் அள்ளிப் போட்டுக் கொண்டு வந்தாள் உமா. நாற்காலியில் வந்து உட்கார்ந்து ஐந்து நிமிஷங்கள் சென்றன. அவன் மௌனமாக ஏதோ சிந்தனையில் இருந்தான். 'என்ன சொல்லப் போகிறீர்கள்?' என்று கேட்பது போல் உமா அவனுடைய முகத்தை ஒரு தடவை ஏறிட்டுப் பார்த்தாள்.

'கதைகளில் காதல்' என்ற தலைப்பில் சொல்மாரி பொழிவதாக நினைத்துக் கொண்டு, அவளிடம் நீண்டதோர் பேச்சுப் பேசினான் தணிகாசலம். அந்தப் பேச்சின் சுருக்கம் இது: கதைகளில் காதல் வரத்தான் செய்யும்; காதல் என்பது இன்னுக்கீரையல்ல.

"மாணவர்களுக்குக் கல்லூரிகளில் சொல்லிக்கொடுக்கும் 'இலக்கியப்பாடங்களில்கூடக் காதல் இருக்கிறதல்லவா?"

"ஆமாம்."

"காதலைப் பற்றி எல்லாரும் உயர்வாகத்தானே சொல்லியிருக்கிறார்கள்? அது தாழ்ந்த உணர்ச்சியோ, அல்லது மலிந்த சரக்கோ அல்லவே?"

"இல்லை."

"நான் இரண்டுவகைக் காதல் கதை எழுதுகிறவன்; கல்யாணத்துக்கு முன்புள்ள காதலை எழுதி இந்த நாட்டில் உள்ள சாதி, சமயம், குலம், கோத்திரம் பணம்—இவற்றால் ஏற்படும் வேற்றுமைகளைக் குறைக்க விரும்புகிறேன். கல்யாணத்துக்குப் பின்பு உள்ள காதலை எழுதிக் குடும்பங்களின் கட்டுக்கோப்பை வளர்க்க விரும்புகிறேன். வெட்டிப் பொழுது போக்கும் வீணர்களுக்காக நான் என்னுடைய பொன்னான நேரத்தைச் செலவு செய்வதில்லை."

உமா அவனை வியப்புடன் நோக்கினாள்.

"நீ படித்தவள்; வயது வந்த பெண். கதைகளும் வாழ்க்கையும் ஒன்று என எண்ணி மயங்கக்கூடாது என்பதற்காக உனக்கு இதைச் சொல்கிறேன். வாழ்க்கையில் காதல் என்பது வெறும் கவர்ச்சியோ, அழகுக் கவர்ச்சியோ, இளமைக் கவர்ச்சியோ, கலைக் கவர்ச்சியோ, அறிவுக் கவர்ச்சியோ அல்ல. அவைகள் காதலருக்கான சில வெளிப்பூச்சுக்கள். கலைஞர்கள் தங்கள் நோக்கத்தின் வெற்றிக்குக் கையாளும் நியாயமான தந்திரங்கள். தாஜ்மஹால் என்ற அழகு மாளிகையை எழுப்பிய ஷாஜஹானின் கதை உனக்குத் தெரியுமா? அதை எழுப்பச் சொன்னபோது அவர் வயதான முகம் சுருங்கிய கிழவர். அவளும் அப்படியொன்றும் பேரழகி அல்ல; அவரைப் போலவே தள்ளாமை பெற்ற கிழவி—புரிந்ததா உனக்கு?"

'புரிந்தது' என்று தலை ஆட்டி வைத்தாள் உமா. அவளுக்குப் புரிந்ததெல்லாம் 'காதல் என்பது பயங்கரமான கரடிக் குட்டி' என்பதுதான். அவன் என்ன சொன்னாலும் எதைச் சொன்னாலும் அவள் அப்போது 'ஆமாம்' போடும் நிலைமையில்தான் இருந்தாள்.

உமா நினைத்தாள்: 'கதை எழுதும்போது இவர் ஒழுங்காகக் காதலைப் பற்றி எழுதுகிறார். பேசும்போதோ அதன் மென்மையை அறியாதவர்போல் முரட்டுத்தனமாய்ப் பயமுறுத்துகிறாரே! என்னிடம் இவருக்கென்ன பயமா? யாரும் யாரையும் இப்போது காதலிக்கப் போவதில்லை. காதலும் கல்யாணமும் இங்கு யாருக்கு வேண்டிக்கிடக்கிறது? கதைகள் இருந்தால் போதும் எனக்கு.'

"சரி, நேரமாகிறது, தொடங்கலாம்" என்று சொல்லி விட்டு, அறைக்குள் குறுக்கு நடைபோட்டான் தணிகாசலம்.

அதற்குள் குறுக்கே ஒரு எண்ணம் முளைத்தது. எழுத்து வேலையில் அவளுக்கு இருந்த் பற்றுதல் பைத்தியமாக முற்றி விடக் கூடாதென்று நினைத்தான். எழுத்துப் பைத்தியம் தன்னோடு நிற்கட்டும். அவளுக்கு அது வேண்டாம்.

"இந்த வேலைக்கு நீ உதவி செய்யாவிட்டால் உனக்குத் தூக்கம் வராதென எழுதியிருந்தாய். இப்படி நீ நினைப்பது வடிகட்டின முட்டாள்தனம். இது அப்படி ஒன்றும் பிரமாதமான வேலையில்லை; மனிதர்கள் பார்க்கும் மற்ற வேலைகளைப் போல் இதுவும் ஒருவேலை; அவ்வளவுதான். குமாஸ்தா வேலை, கணக்கு வேலை, பள்ளிக்கூட வேலை இப்படிப்பட்டது தான் எழுத்து— —"



'இப்படிச் சொல்லி என்னை ஏமாற்றுகிறீர்கள், மாமா!' என்று கெஞ்சுவது போல் விழித்தாள் உமா.

தணிகாசலம் தொடர்ந்து பேசினான்:

"வயல் வரப்பில் கிடைக்கும் களிமண்ணை எடுத்துக் குயவன் சட்டிப்பானை செய்கிறான். வேறு சிலர் அதே மண்ணைக் கொண்டு பொம்மைகள் செய்கிறார்கள். நானும் எனக்குத் தெரிந்த அறிவையும் உணர்ச்சியையும் குழைத்துக் கதைப் பொம்மைகள் செய்கிறேன். கடைசியில் இந்த உடலும் மண்ணுக்குத்தான்; கதைகளும் மண்ணுக்குத்தான்."

"பொய் சொல்லாதீர்கள்!" என்று கத்தினாள் உமா. கண்களில் அந்தப் பழைய கோப வெறி; —அதே புலிக் கண்கள்! அழுகை வெடிக்கப் பார்த்தது. அதை அவள் அடக்கப் பார்த்தாள்.

"என்ன, உமா! வேதாளம் முருக்க மரம் ஏறிக் கொண்டதே?"

"கதைகள் மண்ணுக்கென்று சொல்லாதீர்கள்., 'சாகாத' கதை, சாகாத கதை' என்று, எனக்கு முன்னால் நேற்றுவரையில் கதறிவிட்டு இப்போது ஏன் வேஷம் போடுகிறீர்கள்? தரையில் கிடக்கும் போது அது களிமண்; பொம்மையாய்ச் செய்தவுடன் அது சக்தி பெற்ற கடவுள். நான் கும்பிடும் கடவுள்!"

தணிகாசலத்துக்குச் சிலீரென்று புல்லரித்தது. உணர்ச்சிக்கும் அறிவுக்கும் இடையில் கிடந்து அவன் சில விநாடிகள் தடுமாறினான். கடவுள்! கடவுள் என்ற தத்துவமே உண்மையா பொய்யா என்று இன்னும் மூளையைப் போட்டுக் குழப்பிக் கொண்டிருக்கிறார்கள் அறிவாளிகள். ஆனால் உணரக்கூடியவர்களுக்கோ உணரக்கூடிய பொருள்களில் எல்லாம் ஊடாடி நிற்கிறது அந்தத் தத்துவம். எவ்வளவு கடினமானது! எவ்வளவு எளிமையானது! ஆராய்ச்சிக்கு அகப்படாத ஒன்று; உணர்ச்சிக்கு உள்ளடங்கும் நன்று. அறிவு அழிந்து, அகந்தை சிதறி, மனிதர் தம் நிலையை மறந்த போதுதானே பக்தி என்ற உன்னத உணர்ச்சி உருவாகிறது? உமாவுக்கும் கதைகளிடம் அத்தகைய பக்தியா!

சற்று நேரம் வேப்ப மரக் காற்றை மனங்கொண்ட மட்டும் உள்ளிழுத்து விட்டுத் திரும்பி வந்து அவள் எதிரில் நின்றான் தணிகாசலம்.

"இனிமேல் எழுதும் வேளையில் உன்னை ஒரு 'டைப்' இயந்திரம் என்று நினைத்துக் கொள்ள வேண்டும். நீ ஒரு அச்சுப் பொறி—சரிதானா? எழுது...."

"சரி, சொல்லுங்கள்" என்று சிரித்தது அந்த மனித இயந்திரம். ஆனால் அந்த மனித இயந்திரத்தின் இடது பக்கத்து எலும்புக் கூட்டுக்குள், பிறந்ததிலிருந்து சாகும் வரையில் துடிக்கக் கூடிய, இருதயம் என்ற மற்றொரு விசை இயந்திரம் இயங்கிக் கொண்டு இருந்ததே.

அத்தியாயம் 11

நினைவும் நிழலும்

தணிகாசலம் உமாவுக்கு விதித்த கட்டுப்பாடுகள் நீண்ட நாட்கள் நிலைத்திருக்கவில்லை. அதற்காக உமாவையும் குறைகூற முடியாது. கூடியவரையில் அவள் தன்னை அடிமை வேலைக்காரி என்றுதான் நினைத்துக்கொள்ளப் பார்த்தாள். அடிமையாக இருந்தால் என்ன? வேலைக்காரியாக இருந்தால் என்ன? மனித உணர்ச்சிகளை அடிமைக்கு ஒருவிதமாகவும் ஆள்வோருக்கு வேறொருவிதமாகவும் கடவுள் படைக்கவில்லையே!

கூடியவரையில் தன்னை அடக்கிக் கொள்ளப் பார்த்தாள் உமா. சிரிப்பு, சிந்தனை, கோபதாப உணர்ச்சிகளை அவனுடைய எழுத்துக்கள் கிளறிவிட்ட போதெல்லாம், அவனுக்குத் தெரியாமல் முகத்தை அவள் வேறு பக்கம் திருப்பிக் கொள்ளுவாள். தணிகாசலத்துக்கும் அவள் படும் சிரமங்கள் நன்றாகத் தெரிந்தன. கதிரொளியில் கலகலவென்று சிரித்துக் கொண்டிருந்த மல்லிகைக் கொடியைப் பிடுங்கி வந்து இருட்டறையின் முள் வேலிக்குள் முடக்கிவிட்டது போல் அவனுக்குத் தோன்றியது. அவனுடைய கண்டிப்பும் கட்டுப்பாடும் அவனையே பரிகாசம் செய்தன. முகத்தை 'உம்'மென்று வைத்துக் கொண்டு, எந்த நேரமும் இரும்புபோல் இருக்கும் ஒரு மனிதப் பிராணியின் முன்னால் நின்று எப்படி உற்சாகமாய்க் கதை சொல்வது?

கால்களை நீட்டிப் போட்டுக் கொண்டு பழங் கதைகளைச் சொல்லும் பாட்டிக் கிழவிக்குக்கூடப் பேரக் குழந்தைகள் தங்கள் உணர்ச்சிகளை வெளிப்படுத்தி, 'உம், அப்புறம் என்ன?' என்று கேட்க வேண்டியிருக்கிறது. இசைக் கலைஞர்களுக்குத் தலையாட்ட நான்கு பேர், கை தட்ட நான்கு பேர் தேவையாக இருக்கிறது. இருக்கும் ஒரு ரசிகையிடமும், "நீ ரசிக்க வேண்டாம்; கல்லுப்பிள்ளையார்போல் காட்சி கொடு!" என்றால் யாருக்கு அதனால் நஷ்டம்!

சட்டம் போட்டவனையே அந்தச் சட்டம் திருப்பித் தாக்கியது.

ஒரு நாள் கதை சொல்லும்போது இடையில் இந்த வரிகள் அவனை அறியாமல் வெளிவந்தன:—

"சட்டம் போடுகிறவர்கள் மனிதர்களால் பின்பற்றி நடக்கக்கூடிய சட்டங்களைப் போட வேண்டும். மனிதர்கள் ஆட்டுமந்தைக் கூட்டமல்ல; முடுக்கிவிடக்கூடிய உணர்ச்சியற்ற இயந்திரங்களல்ல; மனித சுதந்திரங்களைக் கட்டுப்படுத்தி, சட்டங்களால் அவர்களை அடக்கி நொறுக்கிவிட முடியாது."

உமா 'குபீ'ரென்று சிரித்து விட்டு, "கோபித்துக் கொள்ளாதீர்கள், மாமா!" என்று தயவாக அவனைக் கேட்டுக்கொண்டாள். 'யாருக்கு உபதேசம்! உனக்


சகிக்க முடியாத உபாதை: தூக்கமும் கிடையாது: சுகமான நித்திரைக்கும் உபாதை நிவர்த்திக்கும்
எப்ரிலிம்
EPHRILIME
U.D
நீண்ட நாள்பட்டதும், மிக்க உபாதை தரக்கூடியதுமான மார்ச்சளி, ஆஸ்த்மா முதலிய நோய்களுக்கு ஓர் சிறந்த ஹானியற்ற மருந்து.
யூனியன் டிரக் கம்பெனி லிட்.
மதராஸ் டிப்போ:
2, ஜோன்ஸ் லேன் :: மதராஸ்-1


FOR BRIGHTNESS & DURABILITY
Pearl
STAINLESS STEEL
UTENSILS
They are the Best..
மிகப் பெரிய அளவில் ஸ்டெயின்லெஸ் ஸ்டீல் பாத்திரங்கள் தயாரிப்பவர்கள்
Pearl
பேர்ல் மெட்டல் ஒர்க்ஸ்
20, வாடி பந்தர், மஸகான், பம்பாய்-10
ஏக ரெப்ரசென்டேடிவ்:
C.L. அகஸ்டின், மனக்கோடி போஸ்டு, திருச்சூர் ஜில்லா


தேனா பாங்க்
தேவகரன் நான்ஜி பாங்கிங் கம்பெனி லிட்.
ஸ்தாபிதம்: 1938
அங்கீகரிக்கப்பட்ட மூலதனம் ரூ. ஒரு கோடி
வாக்களிக்கப்பட்ட & செலுத்தப்பட்ட மூலதனம் ரூ. 50 லக்ஷம்
ரிஸர்வ் நிதிகள் ரூ. 40 லக்ஷம்
டிபாஸிட்டுகள் (31-12-57) ரூ. 23 கோடிக்கு மேல்
அமுலில் உள்ள நிதிகள் ரூ. 28 கோடிக்கு மேல்
மொத்த அகௌண்டுகள் ... 1,32,000க்கு மேல்
வருங்கால நலனை உத்தேசித்து எமது பாங்க் மூலம் சேமியுங்கள்
விசேஷ சேமிப்பு அகௌண்ட்ஸ்
வட்டி விகிதம்
3%
5 ஆண்டு கேஷ் சர்டிபிகேட்டுகள்
வட்டி விகிதம்
4¼%
70 காரியாலயங்களும் 15 ஸேப் டிபாஸிட் வால்ட்களும்
பொது பாங்கிங் அலுவல்கள் நடத்தப்படுகின்றன
பிரவீன் சந்திர வி. காந்தி மானேஜிங் டைரக்டர்



காஸ்ட்ரால்

ஆராய்ச்சி

எப்பொழுதும் முன்னணியில் நிற்கிறது

★ ஸிலிண்டர் தேய்மானத்தைக் குறைப்பதில், 1935-ல் முதல் ஸ்தானம் பெற்றது.

★ இயந்திரங்களை சுத்தப்படுத்துவதற்கு ஒரு சிறந்த எண்ணெயாக 1935-ல் முதல் ஸ்தானம் அடைந்தது.

★ பெட்ரோல் சிக்கனம் மிக எளிதான இயக்கம், துரிதமான-ஓட்டம் ஆகிய அனுகூலங்களைப் பெற ஒரு இலேசான எண்ணெயை அறிமுகப்படுத்தி 1938-ல் முதன்மை ஸ்தானம் பெற்றது.

★ எண்ணெய் கெட்டுப் போகாது பாதுகாக்கக்கூடிய நூதன வழிகளைக் கையாளுவதினால் 1949-ல் முதன்மை ஸ்தானம் அடைந்தது.

★ துரு பிடிக்காமலும், அமிலங்களால் இயந்திர பாகங்கள் தேய்வு ஏற்படாமலும், பாதுகாக்கக்கூடிய ஹைபாய்ட் ஆக்ஸில் எண்ணெயை அறிமுகப்படுத்தியதால் 1951-ல் முதன்மை யடைந்தது.

இப்பொழுது


""ஸிங்க் டையால்கில்டி தியோபாஸ்பேட்"" மிகச் சிறந்த முறையில் ""காம்"" மற்றும் ""டாபெட்"" உறுப்புக்கள் தேயாது பாதுகாக்கிறது என்று யு. எஸ். ஏ.-கோ-ஆர்டினேடிங் ரிசர்ச் கவுன்ஸிலின் 1957ம் ஆண்டு அறிக்கை தெளிவாக கூறுகிறது. காஸ்ட்ராலில் இந்த அடிடிவ் 1949ம் ஆண்டிலிருந்தே சேர்க்கப்பட்டு இருக்கிறது.

★ ஈடு இணையற்றது! 1958ல் உலகிலேயே மிகச் சிறந்த நவீன மோட்டார் எண்ணெய்

காஸ்ட்ரால் என்ற பெயரை

குறித்தே எப்பொழுதும் கேளுங்கள்

1-50



மதனபள்ளிக்கு அருகே உள்ள ரிஷிவேலி பள்ளிக்கூடத்தின் பிரின்ஸிபல் ஸ்ரீ பியர்ஸ் அவர்களது புதல்வர் ஸ்ரீ ஜெய் அவர்களுக்கும் குமாரி உஷாவுக்கும் சென்றமாதம் 15-ந் தேதி ஜம்ஷெட்பூரில் திருமணம் மிகச் சிறப்பாக நடந்தேறியது. இம்மாதம் 10-ந் தேதியன்று ரிஷிவேலி பள்ளிக்கூடத்தில் நடைபெற்ற வரவேற்பு உபசாரத்தில் ஏராளமான நண்பர்களும், பள்ளிக்கூட ஆசிரியர்களும், மாணவர்களும் கலந்து கொண்டு மணமக்கள் பல்லாண்டு வாழ்ந்து சீரும் சிறப்பும் பெற வாழ்த்தினார்கள்.

கல்லடி பெண்ணே!' என்றானும் ஒரு பிறநலவாதி. அவனுடைய நினைவு இப்போது உமாவுக்கு வந்தது.

"எதற்குச் சிரித்தாய்?" என்று சிரித்துக் கொண்டே கேட்டான் தணிகாசலம்.

உமா அவன் சொல்லியதைப் படித்துக் காட்டினாள். அவனுடைய கண்களின் குறும்புத் தனத்தை அவனால் ரசிக்காமல் இருக்க முடியவில்லை.

"தனி மனிதர் சுதந்திரம் பிறர் விஷயத்தில் குறுக்கிடக் கூடாது" என்று அவனே மறுபடியும் அதற்கு விளக்கமும் கூறினான். "நம்முடைய உடன்படிக் கைச்சட்டத்துக்கு இப்போது ஒரு திருத்தம் கொண்டு வரப் போகிறேன். அதன்படி நீ உன் முகத்தை இனிமேல் 'உர்'ரென்று வைத்துக் கொண்டு எழுத வேண்டியதில்லை. உன் இஷ்டப்படி நீ சிரிக்கவோ, அழவோ செய்து கொள்ளலாம். திடீரென்று என்மீது எரிந்து விழாமல் இருந்தால் போதும்."

"என்னைச் சண்டைக்கு இழுக்காதீர்கள்" என்றாள் உமா.

"நான் சமாதானத்துக்கல்லவோ வருகிறேன்?" என்று சொல்லி விட்டு, "பனங்காட்டு நரி இடதுபக்கம் போனாலும் சரி, வலது பக்கம் போனாலும் சரி; மேலே விழுந்து பிடுங்காமல் போக வேண்டும். — என்னுடைய வேண்டுகோள் இதுதான்!" என்றான்.

சட்டத்துக்குத் திருத்தம் கொண்டு வந்தாலே எப்போதும் அந்தச் சட்டத்துக்கு ஆபத்துத்தான். திருத்தம் கொண்டுவராத சட்டத்துக்குள்ளாகவே இளைத்து விளையாடுகிற பேர்வழிகள் பலர் இருக்கிறார்கள். தணிகாசலம் கொண்டு வந்த திருத்தத்தை உமா உடும்புப் பிடியாகப் பிடித்துக் கொண்டு, அன்றிலிருந்து பட்டம் பெறாத பெண் வக்கீலாக மாறி விட்டாள். தணிகாசலம் பணிந்து போக வேண்டி இருந்தது. தொழிலாளிகளிடம் அகப்பட்டுக் கொண்டு விழிக்கும் முதலாளிகளைப் போல. இது அடக்கப்பட்டவர்களின் காலம்; பெண்களின் காலம்.

கூடுமான வரையில் பெருஞ் சண்டைகள் வரவில்லை; சிறு சண்டைகளுக்கும் குறைவில்லை. இதனால் எழுத்தின் வேகம் தடைப்பட வில்லையாதலால் தணிகாசலம் தாராளமாக அவளுக்கு விட்டுக் கொடுத்தான். எழுத்தைப் பொறுத்த மட்டில் அவன் காரியவாதி.

மத்தியில் ஒரு நாள் மாலை அவன் திரைப்படத்துக்குப் போய் வந்தான்! குமாரசாமி எடுத்த முதல் படம் அது. 'அந்திரபுரத்து மந்திர மங்கை' என்ற அந்தப் படத்தில் பகபதியின் கைவண்ணம் சுத்தமாகத் தெரிந்தது. — அவருடைய கை சுத்தமில்லை என்பது.

திரையிடப்பட்ட முதல் நாளாதலால் கூட்டமான கூட்டம் கட்டுக்கு அடங்கவில்லை. சட்டைகளைக் கிழித்துக் கொள்வோரும், தொண்டைகளைக் கிழித்துக் கொள்வோரும், இடம் கிடைக்காதென்று திரும்பி வருவோரும் கொட்டகைக்கு முன்னால் திரண்டிருந்தனர். தணிகாசலம் முண்டியடித்துக் கொண்டு எப்படியோ முதல் வகுப்புக்கு ஒரு சீட்டு வாங்கிக் கொண்டு நுழைந்தான்.

படம் தொடங்கப்போகும் நேரத்துக்கு முன்னால் பின் வரிசையில் சிறிது சலசலப்பு ஏற்பட்டது. 'கசமுச'வென்று சிலர் தங்களுக்குள் பேசிக்கொண்டு, கடைசி வரிசைக்குப் பின்னால் சற்று



உயர்வான இடத்திலிருந்த 'பாக்ஸை'த் திரும்பிப் பார்த்தார்கள். தணிகாசலமும் திரும்பினன்; திரும்பிய பக்கத்தில் கண்கள் நிலைத்து விட்டன. திருவாளர் குமாரசாமியும் செங்கமலமும்! செங்கமலத்தின் மடியில் மொழுமொழுவென்று நான்கு வயதுப் பையன் ஒருவன் உட்கார்ந்து கொண்டிருந்தான். கொட்டகை முதலாளி திரைப்பட முதலாளிக்கு ஏகப்பட்ட உபசாரங்கள் செய்து கொண்டிருந்தார். சோடாப்புட்டி, சிகரெட்டு, வெற்றிலைப் பாக்கு, பையனுக்குச் சாக்லெட்....

ஒரே ஒரு கணம் தணிகாசலத்தின் தொண்டைக் குழியை யாரோ இறுக்கிப் பிடிப்பது போல் தோன்றியது. ஒரு கணந்தான். பிறகு அவன், தன்னைச் சமாளித்துக் கொண்டு விட்டான்.

வழக்கத்துக்கு விரோதமாகத் தணிகாசலம் அன்றைக்கு மேல் துண்டு கொண்டு வந்திருந்தான். அதுவும் நல்லதாகப் போய் விட்டது. தலையில் அதைச் சுற்றித் தன்னை மறைத்துக் கொண்டு செங்கமலத்தின் மடியில் ஒய்யாரமாக உட்கார்ந்து கொண்டிருந்த பையனைக் கண்கொட்டாமல் கவனித்தான். அவனுக்கு அந்தக் காட்சி பெருமையாக இருந்தது; பொறாமை ஏற்படவில்லை; பதிலுக்கு மனத்தின் எங்கோ ஒரு மூலையில் சிறு கொசு கடிப்பது போல் வலித்தது. 'செங்கமலம் அதிர்ஷ்டக்காரிதான்! பையன் அவளைப் போலவே சுருட்டை மயிரும் உருண்ட விழிகளுமாய்க் காட்சியளிக்கிறன்! பெற்றோரின் மூச்சுக்காற்று மேலே பட்டுக் கொண்டிருப்பதால் அந்தச் சிறுவனுக்கு இந்த உலகமே அலட்சியமாய்க் காண வேண்டியதொரு திரைக்காட்சி.

'தன் மகனை ஒரு கணம்—ஒரே ஒரு கணம்—என்னிடம் கொடுத்துத் திருப்பி வாங்கிக் கொள்ள மாட்டாளா, செங்கமலம்?'

படம் தொடங்கியது. காசு கொடுத்துத் திரும்பத் திரும்பப் படம் பார்க்க வரும் தரைப் பெருமக்களை நினைவில் வைத்துக் கொண்டு எடுத்த படந்தான் அது. அவர்கள் பல முறை கை தட்டினர்கள்; பல முறை சீட்டி யடித்தார்கள். 'பரவாயில்லை; தேவலாம்; பார்ப்பவர்களின் மனத்தைக் கெடுக்காத முறையில் உற்சாகமளிக்க முயன்றிருக்கிறர்கள்' என்று படத்துக்கு மதிப்புப்போட்டான்.

இடைவேளைக்கு முன்னுல் வந்த ஒரு கட்டம் மட்டிலும் அவனை அப்படியே குலுக்கி எடுத்து விட்டது. பசுபதி அவனுடைய முதல் சிறுகதையை எவ்வளவு ஊன்றிப் படித்திருக்கிறர்! எவ்வளவு அற்புதமாகப் பயன்படுத்திக் கொண்டிருக்கிறர்! புதுப்பட்டிக் குளத்தங்கரை, தணிகாசலம், செங்கமலம்—வெவ்வேறு பெயர்களுடன் அங்கு திரைக் காட்சி விரிந்தது. தணிகாசலத்துக்கு இப்போது பசுபதியிடம் கோபமில்லை. முதல்நாள் அன்று படம் பார்க்க வந்த தன்னையே நொந்து கொண்டான். கதாபாத்திரங்கள் உயிருள்ள பாத்திரங்கள் என்றும், அவைகள் இரண்டும் சூழ்நிலைக்கு இரையாகித் தனித்தனியே பிரிந்து போய், இப்போது ஒரே இடத்தில் அமர்ந்து படம் பார்க்கின்றன என்றும் அவருக்குத் தெரியுமா?—செங்கமலத்தின் நெஞ்சுத் திரையில் இப்போது என்ன படம் ஓடிக்கொண்டிருக்குமோ!

திரையில் கதை பிறகு பலவித மாற்றங்களுக்குள்ளாகி, எங்கெல்லாமோ அலைந்து, இனிதாகக் கல்யாணத்தில் முடிவடைந்தது. தணிகாசலம் அதற்கப்பால் படத்தையே பின்பற்றவில்லை. எங்கும் நிறைந்த இருளில் மெதுவாகப் பின்னுல் திரும்பிப் பார்த்தான். செங்கமலம் தன் தலைக்கு மேல் சுழன்ற மின் விசிறியை அண்ணாந்து பார்த்துக் கொண்டிருந்தாள். 'விதி' ஒன்றில் மனிதன் நம்பிக்கை வைக்க வேண்டுமா? அது இப்படித்தான் தலைக்குமேல் ஆகாயத்திலிருந்து கொண்டு விசிறிபோல் வேகமாய்ச் சுற்றிச் சுழலுமா? — சே! என்ன, தேவையற்ற எண்ணங்கள்.

கடைசிக் காட்சியின் ஆரம்பத்தில் கொட்டகையை விட்டு வெளியில் வந்து சேர்ந்தான் தணிகாசலம்.

மறுநாள் கௌரியிடம் செங்கமலத்துக்கு ஆண் குழந்தை பிறந்திருக்கும் செய்தியைச் சொல்ல வேண்டும்போல் தோன்றியது. சொன்னால் பிறகு கேள்வி மேல் கேள்வி கேட்க முற்படுவாள்: 'எங்கே பார்த்தீர்கள்? எப்படிப் பார்த்தீர்கள்? என்ன பேசினீர்கள்? ஏன் பேசவில்லை? வீட்டுக்கு வரச் சொல்லிக் கூப்பிட்டால் என்ன?—கௌரி இப்போதெல்லாம் உமாவுடன் பழகிக் கொஞ்சம் புத்திசாலியாக மாறிக் கொண்டு வந்தாள். நடந்ததைச் சொல்லி அவன் அவளிடம் அகப்பட்டுக்கொள்ள விரும்பவில்லை. மனைவியின் புத்திசாலித்தனம் சில வேளைகளில் கணவனுக்கு மிகவும் நெருக்கடியான நிலைமையைக் கொண்டு வந்து விடுகிறது!

அந்த நெருக்கடியான கட்டத்திலிருந்து அவன் அப்போதைக்குத் தன்னை விடுவித்துக் கொண்டான். ஆனால் அவனால் கௌரியிடமிருந்து உண்மையை மறைக்க முடிந்ததே தவிர, உமாவிடமிருந்து மறைக்க முடியவில்லை. பத்து நாட்கள் சென்ற பின்பு எதிர்பாராதவிதமாக அவன் இரும்பவும் செங்கமலத்தைச் சந்திக்கும்படியாக நேர்ந்தது.

நாவலை முடித்துக் கந்தசாமியிடம் கொடுத்துவிட்டுத் தனியாகக் கடற்கரையோரமாக நடந்து வந்தான் தணிகாசலம். தலைச் சுமையை இறக்கி வைத்த உல்லாசத்தைவிட, நெஞ்சச் சுமையை இறக்கி வைத்த உல்லாசம் எழுத்தாளனுக்கு மிகவும் அருமையானது. அதைக் கடற்கரைத் தனிமையில் காசு செலவில்லாமல் கொண்டாட விரும்பினான்.

வழவழப்பான தார் ரோட்டின் மூலையில் சோம்பல் நடை போட்டான் தணிகாசலம். என்றைக்கும் இருந்த அழகைவிட அன்றைக்கு உலகம் அவன் கண்களுக்குப் பசுமையாய் விளங்கியது. சாலையோரத்தில் நின்ற வாகைமரங்கள் சிவப்பும் மஞ்சளுமாகத் தங்கள் மலர்களைத் தென்றலில் உதிர்த்துக் கொண்டிருந்தன. அவனை ஒட்டினாற்போல் ஒரு கார் அவனைத் தாண்டிக்கொண்டுபோய், பத்து கஜ தூரத்தில் நின்றது. பிறகு நின்ற இடத்திலிருந்தபடியே பின்னால் நகர்ந்து வந்தது. அதற்குள் செங்கமலம் அவளுடைய பையனுடன் உட்கார்ந்து கொண்டு கண்ணாடி வழியே தணிகாசலத்தைத் திரும்பிப் பார்த்தாள்.

"இதோ பார், உன் மாமா!" என்று பையனைத் தணிகாசலத்திடம் கொடுத்தாள் செங்கமலம்.

பத்து நாட்களுக்கு முன்பு திரைப்படக் கொட்டகையில் எழுந்த தணிகாசலத்தின் ஆசை அப்போது நிறைவேறியது. பையனைத் தூக்கி வைத்துக் கொண்டு அவனுடைய நெளிநெளியான கிராப்புத் தலையில் தன் விரல்களை விட்டு விளையாடினான். இரண்டு நிமிஷங்களுக்கு எந்தப் பேச்சும் அவன் வாயிலிருந்து வரவில்லை. பிறகு மிகுந்த சிரமத்துடன் உதட்டைக் கடித்துக்கொண்டு "பையனிடம் உங்கள் இரண்டு பேர் சாயலும் இருக்கிறது" என்று சொல்லி வைத்தான். உடனே அவனுடைய இதயம் விம்மிக் கண்களில் உடைந்துவிடப் பார்த்தது. வெறிபிடித்த உணர்ச்சியுடன் அந்தப் பையனின் நெற்றியை முத்தமிட நினைத்தான். அடுத்த கணத்தில் அந்த நினைவு கூட அவனுக்குத் தவறாகத் தோன்றியது. கீழே இறக்கி விட்டுவிட்டான்.



பையன் ஓடிப் போய்க் காரில் ஏறி உட்கார்ந்து கொண்டவுடன், தணிகாசலம் தன் கண்களைத் துடைத்துக் கொள்ள வேண்டியிருந்தது. 'உடனே இவள் திரும்பி விடமாட்டாளா?'

"காற்று கண்களில் மண்ணை வாரி வீசுகிறது" என்று அவன் தடுமாறினான்

அவள் சிரித்த சோகச் சிரிப்பையும் அந்தக் காற்று ஒன்றாகத்தான் வாரிக் கொண்டு போயிற்று.

தெருவில் நின்றபடியே அவனைப் பற்றிய எல்லா விவரங்களையும் அவன்

கேட்டுத் தெரிந்து கொண்டாள். "பட்டணத்தில் ஒரு வேலையிலும் இல்லாமலா காலம் கழிக்கிறீர்கள்?"

"எழுதுவதும் ஒரு வேலைதான்."—'நீதான் என்னை இந்த வேலைக்குப் பழக்கப் படுத்தி விட்டாயே?' என்ற கேள்வி அவனுக்குள் எழும்பி, வளர்ந்து, அவனுக்குள்ளேயே விழ்ந்து மறைந்தது.

"பகபதியிடம் இருந்தீர்களா?"

"ஆமாம்."



"படம் பார்க்க வந்தால் நீங்கள் தலையில் துணியைப் போட்டு மறைத்துக் கொள்வதுதான் வழக்கமோ? ஏன் படம் முடிவதற்குள் எழுந்து போய் விட்டீர்கள்? அவளையும் என்னையும் நீங்கள் அன்றைக்குப் பார்த்திருக்கலாம்."

தணிகாசலம் அவளிடம் பதில் பேசவில்லை. அவன் பேச விரும்பாத விஷயத்தையும் அவளே சேர்த்துப் பேசி விட்டாள்: "பகபதியிடம் ஏதும் நம்மைப் பற்றிச் சொன்னீர்களா?" என்றாள்.

"நான் யாரிடமும் சொல்லவில்லை."

"படத்தைப் பார்த்தபோது நான் நினைத்துக் கொண்டேன்."

'நானும் நினைத்தேன்' என்று அவன் ஒப்புக் கொள்ளவில்லை. அவனுக்குத் தன்னுடைய பலவீனம் அன்றைக்கு விசுவரூபம் எடுத்து விட்டது போல் தோன்றியது. எல்லாம் அந்தத் திரைப் படம் பார்க்கப் போனதால் வந்த வினை. கால்கடுக்கத் தெருவில் நின்று கொண்டு பேசிய செங்கமலம், சட்டென்று தன் கடமையை நினைத்துக் கொண்டவள் போல் காரைத் திரும்பிப் பார்த்தாள். கண்ணாடி வழியே அவள் பையனின் தலை தெரிந்தது. விடை பெற்றுக் கொண்டு விரைந்து சென்றாள். காருக்கு வெளியில் அவள் சிரித்தபடியே தலையை ஆட்டுவது தெரிந்தது. தணிகாசலம் சிரித்தபடியே நின்றான்.

"மாமா, மாமா!" என்ற உமாவின் குரல் அருகில் இருந்து ஒலித்தது அவன் காதுகளில் விழவில்லை. மூன்றாவது முறையாக உமா அவனை அதட்டிக் கூப்பிட்டுவிட்டு, "உங்களுக்கு ஏன் இந்த நேரத்தில் காது கேட்கப் போகிறது?" என்று சலித்துக் கொண்டாள். அவள் முகத்தில் கோபம் கூத்தாடியது.

"நீங்கள் அவளோடு பேசிக் கொண்டிருந்ததை யெல்லாம் நான் பார்த்துக்கொண்டுதான் இருந்தேன். — யார் அவள்?" என்று கேட்டாள் உமா.

"உன்னைப்போல் அவளும் ஒரு பெண்."

"'என்னைப்போல்' என்று இன்னொரு தரம் சொல்லாதீர்கள். நான் ஒன்றும் இப்படி...."

அதற்கு மேல் அவளுக்கே என்ன பேசுவதென்று தெரியவில்லை. விரும்பாத சொற்கள் வந்துவிடப் போகின்றனவே என்று தன்னைக் கட்டுப்படுத்திக் கொண்டாள். ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டு சிறிது நேரம் நின்றார்கள். தணிகாசலத்தின் சிரிப்பு அவள் ஆத்திரத்தைக் கிளறி விட்டது. "வாருங்கள் வீட்டுக்குப் போய்ப் பேசிக் கொள்வோம்; அங்கு வந்தவுடன் என் கேள்விகளுக்கெல்லாம் நீங்கள் பதில் சொல்லித்தான் ஆக வேண்டும்."


இருவரும் மாம்பலத்தை நோக்கிச் சென்றார்கள். வழி நெடுகிலும் அவள் அவனைப் பார்த்த பார்வையில் சந்தேகம் பொங்கி வழிந்தது. (தொடரும்)


மோகன இனிமை
TSR
மட்டிப் பால்
மேனகா
ஜகன்மோகன்
கோதல் மாலா ஊதுபத்திகள்
டி.எஸ்.ஆர் & கம்பெனி,
கும்பகோணம், தென்னிந்தியா.


COLGATE
TOOTH POWDER

டிசம்பர் மாதப் போட்டியில் நூறு ரூபாய் பரிசு பெற்ற கதை

சந்திரகாந்தக் கல்



ராஜஸ்தானத்தின் வடமேற்கில் அமைந்திருந்த ராஜ பாதையில் ஒரு கிழக் குதிரை ஆடி அசைந்துவந்துகொண்டிருந்தது. வெகு தூரம் பிரயாணம் செய்ததால் அதன் வாயில் நுரை தள்ளிக்கொண்டிருந்தது. புழுதி படிந்த அதன் கால்கள் மடிந்து விழுவது போல் தள்ளாடின. அதன் மீது அமர்ந்திருந்த வயோதிகனோ அதைவிடக் களைத்துக் காணப்பட்டான். குதிரை லகானைப் பிடித்து நிறுத்தக்கூட முடியாதவன் போன்று களைப்படைந்திருந்தான். அவன் கையிலிருக்க வேண்டிய லகான் நழுவித் தரையில் விழுந்து மணலில் புரண்டு கொண்டு வந்தது. தொடர்ந்தெழும் பெருமூச்சால் தோல் மூடிய அவன் விலா புடைத்தெழுந்து தாழ்ந்தது. மண்டிக் கிடந்த தலையும், வளர்ந்து நரைத்திருந்த தாடியும், கிழிந்து அழுக்கடைந்த குல்லாவும் அவனைப் பக்கிரியாகக் காட்டியது.

அவன் நீண்டு வளைந்தோடும் ரஸ்தாவைக் கண்களை உயர்த்திப் பார்த்தான். அவனையும் அறியாமல் நீண்டதொரு பெருமூச்சு அவன் இதயத்தைக் கிழித்துக் கொண்டு வெளிப்பட்டது.

தோல் சுருக்கத்துக்குள் புதைந்துள்ள அவன் கண்கள் எதையோ ஆவலுடன் தேடின; வறண்டு கிடந்த உதடுகளை நாவால் ஒரு முறை ஈரமாக்கிக் கொண்டான். புழுதி ஏறிய முகம் வறவற வென்றிருந்தது. சற்றுத் தூரத்தில் சலசலவென்று ஓடும் வாய்க்காலைக் கண்டவுடன் அவன் முகம் மலர்ந்தது. அந்தக் கண்கள் மகிழ்ச்சியால் விரிந்தன. அவன் குதிரையிடம் என்னமோ முணுமுணுத்தான். தன் கிழ எஜமானனின் சொல்லுக்குக் கீழ்ப்படிவது போன்று அது வாய்க்கால் அருகில் நின்றது. ஆவலுடன் தள்ளாடிக் குதித்த வண்ணம் நீரை நோக்கி ஓடினான் அவன். நீரில் முகத்தைப் புதைத்த வண்ணம் நீண்ட நேரம் கிடந்தான். தலையிலும், முகத்திலும் நீரை வாரி வாரி இறைத்துக் கொண்டான். நீரைப் பார்த்த ஆவலில் குதிரையும் வயிறு முட்ட நீரைக் குடித்தது.

"ஐயா!" என்ற குரல் கேட்டு அவன் தலை நிமிர்ந்து பார்த்தான். வாய்மூடிய கஞ்சிக் குவளையுடன் ஒரு வாலிபன் நின்று கொண்டிருந்தான். கிழவன் அவனை வியப்புடன் பார்த்தான்.

"மிகவும் பசியோடிருக்கிறீர்கள் போலிருக்கிறது! வேண்டுமானால் இந்தக் கஞ்சியைக் குடித்துப் பசி ஆறுங்கள்!" என்று ஆதுரத்துடன் சொன்னான்.

கிழவன் கலகலவென்று சிரித்தான்!

என். சம்பந்தம்



"ஏன் ஐயா சிரிக்கிறீர்கள்? வேடிக்கைக்குச் சொல்லுகிறேன் என்று நினைக்கிறீர்களா?" என்று கேட்டான் அவன்.

"அதற்காக நான் சிரிக்கவில்லை; நான் யாரென்று உனக்குத் தெரிந்தால் நீண்ட கரம் முடங்கி விடுமே என்பதை நினைத்துத் தான் சிரித்தேன்" என்று சொல்லிப் பெருமூச்சு விட்டான்.

"நீங்கள் யாரா யிருந்தால் என்ன? பசித்தவருக்கு அன்னமிடு வதுதான் மனித தர்மம்!" என்று கஞ்சிக் குவளையைக் கிழவ னிடம் நீட்டினான். அவனும் ஆவலுடன் கஞ்சியைக் குடித்தான். அவன் கண்களில் நன்றி கனிந்தது.

"நீ எங்கேயப்பா போகிறாய்?" என்று கிழவன் கேட்டபடியே குவளையை அவனிடம் நீட்டினான்.

"சோமநாதபுரத்துக்கு......!"

"சோமநாதபுரத்துக்கா ...... ஏன்...?"

"சோமநாதர் ஆலயத்தைத் திருப்பணி செய்வதற்காக. முஸ்லிம் கொள்ளையன் கஜினி முகமது நாசமாக்கிவிட்ட ஆலயத் தைப் புதுப்பிக்கும் வேலையில் காசிடபட்டர் ஈடுபட்டிருக்கிறார். அங்குதான் நானும் கல் வேலை செய்கிறேன். அது போகட்டும்! நீங்கள் இப்பொழுது எங்கிருந்து வருகிறீர்கள்?"

"அப்கானிஸ்தானத்திலிருந்து......"

"ஆப்கானிஸ்தானத்திலிருந்தா வருகி றீர்கள்?" என்று ஆச்சரியப்பட்டவன், "எங்கே போகிறீர்கள்?" என்று மிகுந்த ஆவலுடன் கேட்டான்.

"சோமநாதபுரத்துக்கு......!"

"ஏன்!" அவன் கேள்வியில் கட்டுக் கடங்காத ஆர்வம் வழிந்தது.

"அந்தக் கேள்விக்கு நான் ஒரு கதையையே சொல்ல வேண்டும்!" என்றான் கிழவன் பெருமூச்சு விட் டுக் கொண்டே. தொடர்ந்து அவனே பேசினான்.

"உங்கள் யாருக்குமே அந்த நாள் மறந்து போயிருக்காது. சரித்திரத்திலேயே அழியாத இடத் தைப் பெறப் போகிற அந்தச் சம் பவம் உங்களுக்கு எப்படி மறந்து போகும்? ஒவ்வொரு இந்துவி னுடைய உள்ளத்தையும் திக்கலாக்கும் அந் நிகழ்ச்சியை யார் தான் மறக்க முடியும்?" என்ற கிழவன் கதையைக் கூறத் தொடங்கினான்.

சோமநாத புரத்து மேற்கு வானம் இரத்

தச் செப்பாகக் காணப்பட்டது; சூரியனைச் சூல் கொண்ட வானம் செந்நிற மெருகுடன் திகழ்ந்தது. வரப்போகும் இரத்தக் களறிக்கு அறிகுறியாக வானமெங்கும் சிவந்திருந்தது. பொழில் சூழ்ந்த நகரத்திடையே சோமநாதர் ஆலயம் தலை நிமிர்ந்து நின்றது. தங்கக் கலசமிட்ட அதன் கோபுரம் அந்தி வெய்யிலில் பளபளத்துக் கண்டவர் கண்ணைப் பறித்தது; அந்த அமைதியைக் குலைப்பதற்கென்றே சோமநாதபுரத்துக்கு வெளியே பெரும் புயலே வந்து கொண்டிருந்தது.



அந்தப்புயலின் தலைவனாகக் கஜினி முகமது வந்து கொண்டிருந்தான்.

பரந்து கிடந்த ராஜஸ்தானத்தில் முகலாயப் பெரும் படை மடை உடைந்த வெள்ளம் போன்று சீறிப் பாய்ந்தபொழுது இரத்த வெறி கொண்ட அவ் வெம்படைக்குச் சோமநாதபுரத்தின் கொழிக்கும் ஐசுவரியங்கள் நினைவுக்கு வந்தன. சோமநாதபுரத்தை நோக்கி முன்னேறியது அக் கொடும் படை. அடுத்த சில மணி நேரத்தில் சோமநாதபுரமே தீக்காடாயிற்று! கறுத்துப் புகைந்து சுருண்டெழும் புகை மண்டலத்தின் ஊடே உயிரைக் காப்பாற்றிக் கொள்ள ஆண்களும், பெண்களும், குழந்தைகளும் வேகமாக ஓடிக் கொண்டிருந்தார்கள்.

"அலிபாஷா!" என்று கூச்சலிட்டான் கஜினி முகமது. சேனைத் தலைவன் அலிபாஷா வணக்கத்துடன் வந்து நின்றான்.

"அலி! நீ சோமநாதர் ஆலயத்தைக் கொள்ளையிடு. அதற்குள் நான் நகரத்தைத் தீக்காடாக்கி விட்டு வருகிறேன்......" என்று கூறிக் கஜினி முகமது சிறிது படையுடன் நகரின் உட்பகுதியை நோக்கி நடந்தான். கஜினி முகமதுவின் முகத்தில் கண்ட வெறி அலிபாஷாவின் முகத்தில் காணப்பட்டதை விடக் குறைந்ததல்ல.

அலிபாஷாவின் சிம்மக்குரல் கேட்டுப் புற்றீசலெனக் கிளம்பிய முகலாயப் படை நகரத்துக்கே நடுநாயகமாக விளங்கிய சோமநாதர் ஆலயத்தில் புகுந்தது. புராதனமான அவ்வாலயம் சின்னா பின்னமாக்கப்பட்டது.

அலிபாஷா வெறி கொண்டவன் போல் பலமாகச் சிரித்தான்.

பிறகு மூலவர் வீற்றிருந்த கர்ப்பக்கிரகத்துக்கு ஓடிவந்தான் அவன்; வெளிக்கதவு சாத்திக் கிடந்தது; எட்டி அதை உதைத்தான்! அந்தப் பெரிய கதவு அவன் உதைக்குச் சற்றும் ஆடிக் கொடுக்கவில்லை.

"உம்...கதவை உடையுங்கள்!" என்று அருகிலிருந்த வீரரைப் பார்த்து அவன் கூச்சலிட்டான்; கதவு உடைக்கப் பட்டது. எல்லோருக்கும் முன்னால் அவன் வேகமாகப் பாய்ந்தோடிச் சென்றான்.

விளக்கு அங்கு மெல்லியதாக எரிந்து கொண்டிருந்தது. அகில் மணமும், சந்தன மணமும் மெல்ல இழைந்து வீசிக்கொண்டிருந்தன. மனோரஞ்சிதத்தின் மணத்தை வேறு புகைந்து கொண்டிருந்த வாசனை வத்திகள் பரப்பின; சோமநாதரே வைர வைடூரியங்களால் தகதக வென்று மின்னிக் கொண்டிருந்தார்! எல்லாவற்றுக்கும் எடுப்பாக அவர் நெற்றிப் பட்டத்தில் அமைந்திருந்த சந்திரகாந்தக் கல் தன்னைச் சுற்றிலும் இருந்த பொருள்களைத் தன் வசமாக்கிக் கொண்டிருந்தது. அதனிடமிருந்து சிதறிய நீல ஒளியைப்பார்க்கமுடியாதவன் போன்று அலிபாஷா கண்களை மூடிக் கொண்டான்; கண்களைத்திறந்துபார்த்தான் அலிபாஷா! விளக்

ஒளியில் சாந்தம் தவழும் சோமநாதருடைய முகம் தென்பட்டது. அந்த முகத்தில் தவழ்ந்த தெய்வீக ஒளி அவனை ஒரு விநாடி தயங்கச் செய்தது. அடுத்த விநாடி அவன் தன்னைத் திடப்படுத்திக் கொண்டு மூலவரை நோக்கிப் பாய்ந்தான்! பாத்திரங்கள் உருண்டன. படைத்திருந்த பிரசாதங்களை எட்டி உதைத்தான். பெருத்த ஓசையை எழுப்பிய வண்ணம் மூலைக்கொன்றாகச் சிதறின! சோமநாதருடைய கழுத்தில் கைவைத்து வைரமாலைகளையும், பொன்னாபரணங்களையும் பறித்து இழுத்தான் அவன். சோமநாதருடைய தலைக்கு மேல் ஏதோ அசைவது அவனுக்குத் தெரிந்தது. இடையிலிருந்த உடைவாளை அவன் உருவினான். சோமநாதருடைய கழுத்தைச் சுற்றிக் கொண்டு முடிமீது படத்தை வைத்துக் கொண்டிருந்த கருநாகம் தன்னுடைய அகன்ற படத்தை விரித்து, 'புஸ்' என்று சீறியது. அதனுடைய கண்களிரண்டும் இரண்டு வைரங்கள் போன்று விளக்கொளியில் பிரகாசித்தன. க்ஷணநேரம் அலிபாக்ஷா எதுவும் செய்யத் தோன்றாமல் மயங்கி நின்றுவிட்டான். அந்த நேரத்தைப் பயன்படுத்திக் கொண்டே அது எங்கோ மறைந்து விட்டது!

அலிபாக்ஷா வாய் வலிக்கும் வரை சிரித்தான்! அவன் கண்களில் சீற்றம் குறையாமலே இருந்தது!

சிலை பீடத்தோடு பெயர்த்தெடுத்து உடைக்கப் பட்டது! அதன் ஒலியோடு அவன் சிரிப்பொலியும் தொடர்ந்து இணைந்து கேட்டது. சோமநாதர் சிலைக்குள் கொட்டிக் கிடந்த வைரங்களும், முத்துக்களும், மாணிக்கங்களும் மூகலாயச் சிப்பாய்களின் கண்களைப்பறித்தன. அதன் ஜ்வலிப்பில் கண்கள் பிதுங்கி விடுவதைப் போல் பார்த்த அவ் வெறியர்கள் அகப்பட்டதைச் சுருட்டிக் கொள்ள முயன்றனர். சிலையை உடைத்ததோடு வெறி தணிந்தவன் போல் அலிபாக்ஷா வெளியில் ஓடி வந்தான். அவன் கையில் சந்திரக்காந்தக் கல் தீவட்டியொளியில் சுடர் விட்டது.

* * *

“பாபா! எப்படி ஜ்வலிக்கிறது. பாருங்கள்! உலகத்திலேயே இது ஒன்றுதான் இருக்கிறது!” என்று கூறிச் சந்திரகாந்தக் கல்லைத் தன் தந்தையிடம் கொடுத்தான் அலிபாக்ஷா. நடுங்கும் கரங்களுடன் அந்தக் கல்லை வாங்கிப் பார்த்தான் கிழவன். சுருக்கம் விழுந்த அவன் முகத்தில் நீலநிற ஒளியை வீசி அவன் கண்களிலிருந்த ஒளியையும் பறிக்க முயன்றது சந்திரகாந்தக் கல்.

“ஏது அலி? அரசர் பெருமான் கஜினி முகமது கொடுத்தாரா?” என்று கேட்டான் கிழவன் காசிம்கான். அலிபாக்ஷா சிரித்தான்:

“கஜினி முகமதாவது கொடுப்பதாவது...! அவருக்கு எவ்வளவு கொள்ளையடித்துக் குவித்தாலும் ஆசை குறையாதே! சோமநாதர் ஆலயத்தைக் கொள்ளையடித்தபோது பாதுஷாவுக்குத் தெரியாமல் நானே எடுத்துக் கொண்டது, பாபா!” என்றான் அவன்.

காசிம்கான் திடுக்கிட்டான்!

“என்னது! ஆலயத்தைக் கொள்ளையடித்தாயா? அடபாவி......! அல்லாவுக்கே உன் செய்கை பொறுக்காதே! வழி வேறுபட்டாலும் தெய்வம் எல்லோருக்கும் ஒன்றுதானே? அரசருக்குத் தெரியாமல் வேறு எடுத்துக் கொண்டிருக்கிறாய்...பாதுஷாவுக்குத் தெரிந்தால் என்னாவது? வேட்டை நாயைப்போல் உன்னைக் கடித்துக் குதறி விடுவாரே! மேலும் கோயில் சொத்து; நமக்கு வேண்டாம். எங்கேயாவது வீசி யெறிந்துவிடு” என்றான் காசிம்கான். அவன் கரங்கள் பயத்தால் நடுங்கின. அந்தக் கல்லைப் பார்க்கவே அவன் உள்ளம் நடுங்கியது!

“பாபா! நீங்கள் ரொம்பவும் பயந்தாங் கொள்ளி!” என்று உரக்கச் சிரித்தான் அவன்.

“நான் சொல்வதைக் கேள்... இந்தக் கல்லை எங்காவது வீசி யெறிந்துவிடு. இந்தக் கல்லால் நம் குடும்பமே நாசமாகிவிடும்போல் எனக்குத் தோன்றுகிறது” என்றான் கிழவன் மிகுந்த திகிலுடன்.

“நீங்கள் பேசாமல் ஓய்வெடுத்துக் கொள்ளுங்கள், பாபா!” என்று சிரித்த வண்ணம் கூறிவிட்டுப் போய் விட்டான் அலிபாக்ஷா.

* * *

“ஜரினா!” அவள் திரும்பிப் பார்த்தாள்: கஜினி முகமதுவின் செல்லப்பிள்ளை அன்வார் பஷா நின்று கொண்டிருந்தான். தெளியும் அழகு விரல்களில் அவள் அணிபல அணிந்திருந்தாள். முகத் திரையை நீக்கியவுடன் அன்வார் அவளுடைய முழுமதி போன்ற முகத்தைக் கண்டான். அவள் கொவ்வை இதழ்கள் சற்று விரிந்து குவிந்தபோது வெண்முத்துக்கள் பல ஒளிர்ந்து இதழ்பின் ஒளிந்தன.

“நீ அழகு ஓவியம்; படிக்கப் படிக்கத் தெவிட்டாத காதல் காவியம்!” என்றான் அவன். ஜரினா வேலைப்பாடமைந்த காபூல் பட்டாடையை விரலில் சுற்றியவண்ணம்: அவனுக்கு ஊர்ப் பெண்களை வர்ணிப்பது தான் வேலை.

அவள் கலகல வென்று சிரித்தாள்:

“ஏன் சிரிக்கிறாய், ஜரினா? இளமங்கையர் சிரிப்பு வாலிபரின் உணர்வை மயக்கும் மது என்று உனக்குத் தெரியாதா?”

“புவியாளும் சக்ரவர்த்தி கஜினி முகமதுவின் மகன் அன்வார் பஷா அமீர் எங்கே? இந்த ஏழை நாட்டியக்காரி எங்கே? எனக்கும் உங்களுக்கும் எப்படிப் பொருந்தும்? ஜரினாவை மறந்து விடுங்கள், மேன்மை தங்கிய உலோர்!” என்றாள் வணக்கத்துடன்.

“தெரியும், ஜரினா! எனக்கு எல்லாம் தெரியும்! படைத் தலைவன் பேட்டா அஹமத்திடம் நீ கொண்டுள்ள காதல்தான் என்னை உதறித் தள்ளுவதற்குக் காரணம். என்னை விட அவன் எந்தவிதத்தில் உயர்ந்தவன்?” என்று கோபத்துடன் கேட்டான்.

“ஆமாம். அவர் உங்களைவிட உயர்ந்தவர் தான். உலகத்தில் யாரிடமும் இல்லாத சந்திரகாந்தக் கல் அவருடைய தந்தை அலிபாக்ஷாவிடம் இருக்கிறது. அதை எனக்குத் திருமணப் பரிசாகத் தரவும் இசைந்திருக்கிறார்” என்றாள் ஜரினா கம்பீரத்துடன்.

“புவியாளும் கஜினி முகமதுவிடம் இல்லாத சந்திரகாந்தக்கல் அடிமை வேலை செய்யும் அலிபாக்ஷாவிடம் இருக்கிறது. ஆச்சரியமாக இருக்கிறது நீ சொல்வது! அதையும்





ரேடியோ சிலோன் :—41·72 மீட்டரில் "இசை விருந்து"
வெள்ளிக்கிழமைதோறும் மாலை 6-30லிருந்து 6-45 வரை

நான் பார்த்து விடுகிறேன்...'' என்று கறுவிக் கொண்டே போனான்.

அவள் வாயில் விரலை வைத்துக் கடித்துக் கொண்டாள். 'யாரிடமும் சொல்லாதே' என்ற ரகசியத்தை வாய் தவறிப் பேச்சின் போக்கால் அவள் உளறிக் கொட்டி விட்டாள். அதனால்தான் எத்தனை விபரீதங்கள்?

* * *

''சோமநாதரின் தங்கை புலியரசர் கஜினி முகமதுவிடம் இல்லாத சந்திரகாந்தக் கல் கேவலம், அரசரிடம் அடிமைவேலை செய்யும் அலி பாகூரவிடம் இருக்கிறது! என்ன அவமானம்!'' என்ற அன்வாரின் குரல் கேட்டு அந்தப்புரத்துக்குப் போய்க் கொண்டிருந்த கஜினி முகமது ஒரு நிமிடம் தயங்கி நின்றான். அவன் முகத்தில் சிந்தனைபடர்ந்தது.

''என்ன பேசுகிறாய் மகனே?'' என்று ஆச்சரியத்துடன் கேட்டான் கஜினி. விலை உயர்ந்த காபூல் பட்டாடை அவனுடைய உடலை அழகுற அலங்கரித்துக் கொண்டிருந்தது. காஷ்மீரத்தின் சித்திரச் சால்வை தோளிலிருந்து சரிந்து பூமியில் புரண்டு கொண்டிருந்தது. அந்தக் காலத்தில் பேர் போன வாசனைத் திரவியங்களை உடலெங்கும் வாரி இறைத்திருந்தான். இந்தியாவிலிருந்து கொள்ளை யடிக்கப்பட்ட வைரங்களும், முத்துக்களும் அவன் மார்பிலும் கழுத்திலும் பிரகாசித்துக் கண்களைக் கூசச் செய்தன.

''ஆமாம் பாபா! நான் உண்மையைத்தான் பேசுகிறேன். விலை மதிப்பற்றதாம் அது! உலகத்தில் அது ஒன்றுதான் இருக்கிறதாம். எத்தனையோ லட்சக்கணக்கான தங்க மொகராக்கள் பெறுமாம் அது!''



கஜினி முகமதுவின் கண்களில் பேராசையின் ஜுவாலை படிந்தது. அவன் முகத்தில் குரூரமான புன்னகை அரும்பியது.

''அலிபாகூராவுக்கு எப்படிக் கிடைத்ததாம் அது?'' அவன் குரலில் படபடப்பும் அவசரமும் போட்டியிட்டன.

''சோமநாதர் ஆலயத்தைக் கொள்ளையடித்த போது உங்களுக்குத் தெரியாமல் திருடிக் கொண்டதாக இருக்கலாமென்று சொல்லுகிறார்கள்.''

கஜினி முகமதுவின் கண்கள் ஆக்ரோத்தால் சிவந்தன! அவன் பற்கள் நறநறவென்று சப்தமிட்டன. புருவங்கள் உயர்ந்து அவனுடைய பரந்த நெற்றியைச் சுருக்கின. கோபத்தால் துடித்துக் கொண்டிருந்த உதடுகளிடையே சொற்கள் வெடித்துச் சிதறின.

''கொண்டு வாருங்கள் அந்தத் துரோகியை'' என்று கர்ஜித்தான்.

சங்கிலியால் பிணித்த கைகளுடன் அலிபாகூரா கஜினி முகமதுவின் முன் நிறுத்தப்பட்டான். எந்த அரசனுக்கு லாடமாகத் தேய்ந்தானோ அவன் வெறி நாயைப் போல் அவனைப் பார்த்துக் கொண்டிருந்தான். இரத்த வெறி கொண்ட அந்தக் கண்களில் கொலை வெறியும் தாண்டவமாடியது.

''அலி!'' என்று கஜினி முகமது உறுமினான். அலிபாகூரா தலையை உயர்த்தி அவனை ஏறிட்டுப் பார்த்தவன் அடுத்த நிமிடம் தலையைக் கவிழ்த்துக் கொண்டான்.

''உனக்கு ஏது அத்தகைய கல்? கஜினி முகமதுவின் ஒளி பொருந்திய மஹாலில் இல்லாத கல் உன்னுடைய இருண்ட வீட்டில் எப்படி இருக்க முடியும்? உலகத்தின் ஐசுவரியத்தையே குவித்துப் பார்த்த என்னிடமில்லாத சந்திரகாந்தக் கல், சில ஆயிரம் மொகராக்கள் கூலியாகப் பெறும் உன்னிடம் எப்படி இருக்க முடியும்? கஜினி முகமது முதன் முதலாக இப்பொழுதுதான் ஆச்சரியப்படுகிறான். பதினெட்டு முறை இந்தியாவைக் கொள்ளையிட்டு, கொண்டு வந்த பொருள்களைக் குவித்துப் பார்த்த பொழுது கூட அவனுடைய கண்கள் வியப்பில் விரிந்தது கிடையாது! புலியானும் மன்னனிடம் இல்லாத கல் அவனிடம் கூலி பெறும் தளபதியிடம் இருக்கிறது என்பதைக் கேட்டுத்தான் அவன் கண்கள் ஆச்சரியத்தால் மலர்கின்றன.''

''மன்னிக்க வேண்டும், உமாரிர்! தவறான கருத்துக்களால் உங்கள் தளபதியைச் சந்தேகிக்கிறீர்கள். எனக்கு அத்தகைய கல்லைப்பற்றி ஒன்றுமே தெரியாது. அதைக் கண்ணால் பார்த்ததுமில்லை.''

கஜினி முகமது அாண்மனையே அதிர்ந்திடச் சிரித்தான்!

''கஜினி முகமதுவிடம் பழகியும் நீ அவனுடைய சாமர்த்தியங்களைத் தெரிந்து கொள்ள வில்லை. ஆளைப் பார்த்தாலே அவர்களுடைய உள்ளத்தில் ஓடும் எண்ணங்களைப் புரிந்து கொள்ளக் கூடியவன் அவன்! மறைக்காதே அலி, உண்மையைச் சொல்லி விடு!''

''எனக்கு உண்மையிலேயே அந்தக் கல்லைப் பற்றி ஒன்றுமே தெரியாது!''

''உனக்கு அந்தக் கல்லைப் பற்றி ஒன்றுமே தெரியாதா?'' என்று அதட்டிக் கேட்டான் அவன். பிறகு அருகில் வந்து அவன் தோளைப் பலமாக உலுக்கினான்.

''உண்மையாகவே தெரியாது......!''

''தெரியாதா!'' என்றவன் அவன் கன்னத்தில் 'பளார்' என்று அறைந்தான். அறையின் வேகத்தால் கலங்கிய கண்களுடன் கஜினி முகமதுவை ஏறிட்டுப் பார்த்தான் அலிபாகூரா. அவன் உள்ளம் வேதனையால் கூம்பி விட்டது.

''இடையிலே பேசுவதற்கு மன்னிக்க வேண்டும், பாபா! அலிபாகூரா சாதாரண

மனிதனல்ல: அவன் வைரம் பாய்ந்த நெஞ்சை நாம் பிழிந்தெறிந்தால் கூட அவனிடமிருந்து நாம் உண்மையைப் பெற முடியாது!" என்றான் அன்வார்.

"அதையும்தான் பார்த்து விடுகிறேன். இந்தக் கஜினி முகமது முயன்று எதிலும் தோல்வி கண்டதில்லை! சந்திரகாந்தக் கல் எனக்குக் கிடைக்கவில்லையென்றால் உண்மையிலேயே நான் சோமநாதர் ஆலயத்தைத் தூளாக்கியதன் பயனைப் பெறமாட்டேன். யார் அங்கே? அலிபாஷாவின் பொக்கிஷத்தைக் கைப்பற்றிக் கொண்டு அவன் குடும்பத்தையும் கைது செய்து வாருங்கள்! அதுவரையில் இந்த அடிமை நாய் சிறையிலேயே கிடக்கட்டும்!"

* * *

அன்று சோமநாதபுரத்தில் வீசிய அதே புயல் அலிபாஷாவின் குடும்பத்திலும் வீசியது. கஜினி முகமதுவின் தீராத பகையை அவன் சம்பாதித்துக் கொண்டான். விதியும் அவனுடன் விளையாடியது! முகலாயப் பேரரசின் பொக்கிஷத்தை எந்த அலிபாஷா கொள்ளையடித்து நிரப்பினானோ அவனுடைய பொக்கிஷமே கஜினி முகமதுவால் கொள்ளையடிக்கப்பட்டது!

"பாபா! நாம் தவறி விட்டோம்!" என்று ஓடி வந்தான் அன்வார்.

"தவறி விட்டோமா?...எப்படி?" என்று கேட்டான் கஜினி முகமது.

"நாம் அலிபாஷாவினுடைய வீட்டை நெருங்குவதற்குள் அவன் மகன் அஹமத் சந்திரகாந்தக் கல்லுடன் தப்பி விட்டான். அவனுடன் அந்த நாட்டியக்காரியும் உடன் சென்றிருக்கிறாள்!" என்றான் அன்வார்.

"எந்த நாட்டியக்காரி?"

"ஜரினா பேகம்! அரண்மனை நாட்டியக்காரி; அதோடு அஹமத்தின் காதலியும் கூட! அவளுக்குத்தான் தன் திருமணப் பரிசாகச் சந்திரகாந்தக் கல்லைத் தருவதாக அஹமத் கூறி இருந்தான்!"

கஜினி முகமது சிறிது நேரம் சிந்தனையில் ஆழ்ந்தான். சிந்தனை அவன் முகத்தில் பலவித நெளிவுகளை ஓடவிட்டுக் கொண்டிருந்தது. அவன் கண்கள் குறுகின; நெற்றி சுருங்கியது. புருவங்கள் உயர்ந்து நெற்றி முகட்டைத் தொட்டன. அன்வார் தன் தந்தையையே பார்த்துக் கொண்டிருந்தான்.

"அன்வார்!" என்று திடீரென்று கூப்பிட்டான் கஜினி முகமது. அன்வார் ஆவலுடன் தன் தந்தையை நிமிர்ந்து பார்த்தான்.

"இன்னும் ஏழு நாட்களில் அஹமத் சந்திரகாந்தக் கல்லுடன் சரணடையா விட்டால் அவனுடைய ஒரே தங்கை அழகி குல்சார் தெருத் தெருவாக அடித்துத் துரத்தப் படுவாள் என்று நாடெங்கும் பறைசாற்று! அதுவும் அவளுடைய தந்தை அலிபாஷாவே அவளை மானபங்கப் படுத்தி அடித்துத் துரத்துவான் என்றும் பறைசாற்று!"

"அவ்வளவு பெரிய தண்டனையா?"— அன்வாரின் வாய் அவனையும் அறியாமல் முணுமுணுத்தது.

"சொன்னதைச் செய்!" என்று கூறி விட்டுக் கஜினி முகமது வேகமாகப் போய்விட்-

டான்: அன்வார் சற்றுநேரம் ஒன்றும் புரியாமல் தயங்கி நின்றவன் பிறகு காவலரைத் தேடி ஓடினான்.

அலிபாஷா புழுப்போல் துடித்தான்! கஜினி முகமதுவின் அந்தப் பறை அறிவிப்பு அவன் இதயத்தையே குலுங்கச் செய்தது. கலங்காத அவன் நெஞ்சமும் குழம்பித் தவித்தது. தனியாக அழைத்துக் கேட்டிருந்தால் அலிபாஷா நிச்சயம் சந்திரகாந்தக் கல்லைப் பற்றிய எல்லா உண்மைகளையும் சொல்லிவிட்டிருப்பான். சபை நடுவே பலர் நடுவில் கைதியாக விசாரித்ததால்தான் அவனால் உண்மையை ஒத்துக் கொள்ள முடியவில்லை. கஜினி முகமது அதட்டிக் கேட்ட பொழுது கூட அவன் உண்மையை ஒப்புக்கொள்ளத்தான் நினைத்தான். ஆனால்...ஏதோ ஒரு சக்தி அவனைப் பொய் சொல்லத் தூண்டியது. அதைத்தான் விதி என்பதா? நினைவுப் பெருங்கடலில் செய்வதறியாது அவன் திகைத்தான்.

தனக்குத் துன்பம் வரும்பொழுதுதான் மனிதன் பிறர் துன்பத்தை அறியும் ஆற்றல் பெறுகிறான். அலிபாஷாவும் முதன்முதலாக மற்றவர்களுடைய துன்பங்களை எண்ணிப் பார்க்க ஆரம்பித்தான். எத்தனை குடும்பங்கள் அவனைத் தூற்றியிருக்கும்! அந்தத் தீவினையெல்லாம் அவனைச் சும்மா விடுமா? ஒருவேளை அவைதான் ஒன்று இரண்டு மூண்டெழுந்துள்ளனவா? இந்தப் பாழும் சந்திரகாந்தக் கல் வாழ்ந்த தன் குடும்பத்தைச் சரித்து விடுமென்று அவன் கனவிலும் எண்ணியதில்லை.

"பாபா!" என்று ஓடிவந்தாள் குல்சார். அவளை ஆதுரத்துடன் அணைத்துக் கொண்டான் அலிபாஷா. பொங்கி வரும் கண்ணீரை அடக்க முடியாமல் அவன் மார்பில் முகம் புதைத்து விம்மினாள் அவள். அவனுடைய மார்பு சட்டை முழுவதும் அவள் கண்ணீரால் நனைந்தது. வாராமலே நீண்டு கிடந்த கூந்தலைக் கோதினான் அலி. அவன் உள்ளமும் விண்டு விடுவதுபோல் விம்மியது!

"இன்னும் அழைத்து வரவில்லையே, பாபா! அப்படியானால் இன்று என்னை...!"—அவள் மலர் வாயைத் தன் கரத்தால் மூடினான் அலிபாஷா. அவன் கரம் அவனையும் அறியாமல் நடுங்கியது. ஒரே ஒரு வாரத்திலேயே அவன் முகம் இறுகு தட்டிப் போயிருந்தது.

"குல்சார்! அழாதே, அம்மா! அப்படியெல்லாம் ஒன்றும் நடக்காது!"

"எனக்கென்னவோ பயமாயிருக்கிறது, பாபா!" அதைச் சொல்லும் பொழுதே அவள் குரல் நடுங்கியது.

"உங்கள் தகப்பன் செய்த வினை உங்களையும் வாட்டுகிறது. என் ஆணவம் உன் மானத்துக்கும் காலனாகி விட்டது. சக்கரவர்த்தியிடம் மன்னிப்பு கேட்டுப் பார்க்கிறேன். குல்சார்! எதற்கும் இந்த விஷம் உன் கையில் இருக்கட்டும். அவசரத்துக்கு உதவும். அலிபாஷாவின் வாள் வலிமையைவிட இந்தக் கொடிய நஞ்சு உன் மானத்தைக் காப்பாற்றும்" என்று தன் மோதிரத்தைக் கழற்றி அவளிடம் கொடுத்தான்.

"அலி!" என்ற குரல் கேட்டு அவன் நிமிர்ந்து பார்த்தான். கஜினி முகமது நின்று

கொண்டிருந்தான்: அவனைப் பார்த்தவுடன் குல்சார் வீறிட்ட வண்ணம் முகத்தை மூடிக் கொண்டாள். கஜினி முகமதுவின் முகத்தில் கொடுமை தாண்டவமாடிக் கொண்டிருந்தது.

"சக்கரவர்த்தி! ஒரேயொரு வேண்டுகோள்: உங்களிடம் பல வருடம் விசுவாசமுள்ள அடிமையின் கடைசி விருப்பம். மறுத்து விடாதீர்கள், உஸைர்!" என்று மண்டியிட்டுக் கெஞ்சினான் அலிபாதுஷா;

"என்ன?"

"ஒரு வாரம் தவணை கொடுங்கள்: எப்படியாவது அனுமந்தைக் கண்டு பிடித்துச் சந்திரகாந்தக் கல்லுடன் திரும்பி விடுகிறேன்!"

"தவறினால்......?"

"என்னையும் குல்சாரையும் உங்கள் விருப்பம் போல் செய்து கொன்றுங்கள்!"

"ஊம்; அதையும் பார்க்கலாம்!"

தனக்கு விடுதலை கிடைத்தவுடன் அலிபாதுஷா தன் மாளிகைக்குத் தான் முதன்முதலில் ஓடினான். அவன் மனத்தில் மட்டும் ஒரு நப்பாசை, தான் வைத்த இடத்தில் சந்திரகாந்தக் கல் கிடைக்குமென்று. உண்மையில் அவன் யாருக்கும் தெரியாத மறைவிடத்தில் தான் அதைப் பதுக்கி வைத்திருந்தான். மாளிகையை அடைந்ததும் இரகசிய அலமாரியைத் திறந்து பார்த்தான். அவன் வைத்தது போலவே நகைப்பெட்டியிருந்தது. தணிக்க முடியாத ஆவலுடன் பெட்டியைத் திறந்து பார்த்தான். அவன் உள்ளம் திடுக்கிட்டது! சந்திரகாந்தக் கல் இருக்க இடத்தில் கருநாகத்தின் நீக்கிய தோல் சட்டைதானிருந்தது. அவனுக்கு ஒன்றுமே புரியவில்லை! துயரத்தோடு வெளியில் ஓடினான்.

காட்டிலும் மேட்டிலும் சுற்றி அலைந்தான் அலிபாதுஷா. உள்ளத்தின் உறுதி தேய்ந்து நம்பிக்கை குறையும் வரையில் அனுமந்தைத் தேடினான். கரடுமுரடான பாதையில் அவன் பாதங்கள் தேய்ந்து முடங்கின: உறுதி குலைந்த பித்தனைப் போல் ஆப்கானிஸ்தானத்தின் ஒவ்வொரு மூலையையும் குடைந்து கொண்டிருந்தான்: 'அனுமந்த் கிடைக்க வேண்டும்' என்று அல்லாவை வேண்டியபடி அலைந்தான்: கடைசியில் அவன் வேண்டுகோள் வீண் போகவில்லை! அனுமந்த் என்னமோ கிடைத்தான். ஆனால்......அனுமந்தும், துரினவும் கோரமாகக் கொலை செய்யப்பட்டுக் கிடந்தார்கள். சந்திரகாந்தக் கல்லுக்கு ஆசைப்பட்டு அவர்களை யாரோ கொலை செய்து விட்டார்கள். ஆப்கானிஸ்தானத்தின் எல்லையோரம் அவர்கள் சவம் கேட்பாரற்றுக் கிடந்தது: அலிபாதுஷா விம்மிக் கதறினான்!

ஒரு இடியோடு வானம் குமுறி அடங்குவதில்லை. உலகத்தையே அதிர வைக்கும் பூகம்பமும் ஒரு நடுக்கத்தோடு நின்று விடுவதில்லை: இடிமேல் இடி. நடுக்கத்துக்கு மேல் நடுக்கம். இதுதானே உலகத்தில் நடப்பவை! அவசரத்துக்காக அவன் குல்சாரிடம் கொடுத்து விட்டு வந்த நஞ்சை அவள் உபயோகப் படுத்திக் கொள்ளத் தவறவில்லை! அதை எதிரிலிருந்து பார்த்துக் கொண்டிருந்த காசிம்கானும் அந்த அதிர்ச்சியிலிருந்து மீளவில்லை. அல்லா தன்னை அழைப்பதாகக் கூறிக்கொண்டு அவனும் போய்ச் சேர்ந்தான்: தன் மேல் விழுந்த இத்தனை அடிகளையும் பொறுக்க முடியாமல் விம்மினான் அலிபாதுஷா! அவன் இனி யாருக்காக வாழ வேண்டும்? குல்சாரின் மானத்தையும் நஞ்சு காப்பாற்றி விட்டது. ஆப்கானிஸ்தானத்திலிருக்கவே அவனுக்குப் பிடிக்கவில்லை: அவன் ராஜ்ய எல்லையை நோக்கி ஓடிக் கொண்டிருந்தான்.

அப்பொழுதுதான் அந்த அதிசயம் நிகழ்ந்தது. களைத்து நலிந்து போயிருந்த அலிபாதுஷா ஒரு பாறையின் மீது உட்கார்ந்திருந்தான்: அவன் கண்கள் எங்கோ வெறித்தபடி இருந்தன. தன் நினைவையே அடக்கியாள முடியாத பித்தனைப் போல் அவன் அமர்ந்திருந்தான்:

"புஸ்!" என்று சீறும் பாம்பின் சீற்றத்தைக் கேட்டு அவன் திரும்பிப் பார்த்தான்: நீண்டு பருத்திருந்த கருநாகம் ஒன்று படமெடுத்து ஆடிக் கொண்டிருந்தது. ஒளி வீசும் அதன் கண்களை எங்கோ பார்த்தது போல் அவனுக்குத் தோன்றியது. வேறு சமயமாக இருந்தால் அலிபாதுஷா பயந்து நடுங்கி ஓடி ஒளிந்திருப்பான். இப்பொழுது அதைக் கண்டு அவன் நடுங்க வேண்டியதில்லை! அவன் எதற்காக நடுங்க வேண்டும்? உயிர் அவன் வரையில் மண்ணுக்குச் சமானம். அதைப் பார்த்த அவன் கைகொட்டிச் சிரித்தான். தன்னுடைய அகன்ற படத்தை விரித்துத் தரையில் மூன்று முறை ஓங்கியடித்தது நாகம்: அடுத்த நிமிடம் கண்ணைப் பறிக்கும் சந்திரகாந்தக் கல் அந்த இடத்தில் ஜ்வலித்தது! அலிபாதுஷா ஆச்சரியத்தால் வாயடைத்துப் போனான். அதைப் பார்க்கவே அவன் கண்கள் பயத்தால் கூசின. அவன் உள்ளம் நடுங்கி விதிர்த்தது!

முதலில் அந்த இடத்திலிருந்து ஓடிவிடத் தான் அலிபாதுஷா நினைத்தான். அந்தப் பாழும் சந்திரகாந்தக் கல்லிடமிருந்து தொலைதூரம் ஓடிவிட வேண்டுமென்று அவன் மனம் நினைத்தது. கீழே குனிந்து பார்த்தான். தலை சிதறி வீழ்ந்து இறந்து விட்டது அந்தக் கருநாகம்! அலிபாதுஷாவின் கண்கள் அப்பொழுது தான் திறந்தன. ஆண்டவன் அவனைப் பழி வாங்கிக் கொண்டதை அப்பொழுதுதான் அவன் உணர்ந்தான். எந்த இடத்திலிருந்து அந்தக் கல்லைக் கொள்ளையடித்து வந்தானோ அதே இடத்தில் அதைச் சேர்த்து விட அவன் மனம் விரும்பியது. அதுதான் தன் பாபங்களுக்குப் பிராயச்சித்தம் என்றும் அவன் கருதினான். அன்றே அலிபாதுஷா சோமநாதபுரத்தை நோக்கிப் பயணமானான்" என்று கதையை முடித்தான் கிழவன்.

இதுவரையில் திறந்த வாய்மூடாது கேட்டுக் கொண்டிருந்த வாலிபன், "நீங்கள்தான் அந்த அலிபாதுஷாவா?" என்று கேட்டான்: அவனுடைய குரலில் அடக்க முடியா ஆவல் வெளிப்பட்டது!

"ஆமாம்! சோமநாதர் ஆலயத்தைப் புனருத்தாரணம் செய்யும் கர்ப்பட்டரிடம் சந்திரகாந்தக் கல்லைச் சேர்க்கவே நான் போய்க் கொண்டிருக்கிறேன்" என்றவன் தட்டுத் தடுமாறிக் குதிரை மீதேறி உட்கார்ந்தான். அந்தக் கிழக்குதிரை மறுபடியும் தன் பயணத்தைச் சோமநாதபுரம் நோக்கித் தொடர்ந்தது.

உங்களுக்கு அதிக சக்தி அவசியம்



நீங்கள் சரீர தளர்ச்சியினால், சோர்வுற்று இருக்கிறீர்களா?
நீங்கள் சக்தியற்றவர்களாக இருக்கிறீர்களா? அப்படியென்றால், உங்களுக்கு க்ளுகோவிடா அவசியம். க்ளுகோவிடா உங்களுக்குத் சக்தியை ஊட்டுகிறது. க்ளுகோவிடாவில், ரத்தத்துடன் சீக்கிரமே கலந்துகொள்ளும், சர்க்கரை சேர்ந்துள்ளது. இதனால் க்ளுகோவிடா, உங்கள் தேகத்திற்கு அவசியமான சக்தியை உங்களுக்குத் தேவையான சமயத்தில் அளிக்கிறது. க்ளுகோவிடாவிலுள்ள விடமின்கள், உங்களை பலமுள்ளவர்களாக்கி, சுறுசுறுப்புடனும், ஆரோக்கியத்துடனும் இருக்கச்செய்கின்றன.




க்ளுகோவிடா


வெகு விரைவில்
சக்தியூட்டுகிறது


கார்ன் பிராடக்ட்ஸ் கோ (இந்தியா) பிரைவேட் லிட்.

பம்பாய்-1

ஏஜென்டுகள்: பாரி அண்டு கம்பெனி லிமிடெட்







பல விவசாயப் பொருள்களும், சுரங்கப் பொருள்களும் நேரடியாக மனித உபயோகத்துக்கு உதவமாட்டா. பருத்தியைக் கொட்டை வாங்கி, சுத்தமாக்கி, கொட்டி, நூலாக்கி, நெய்த பிறகே ஆடையாகும். சணலைப் பக்குவம் செய்து நாராகப் பிரித்து, நெசவு செய்து கோணியாக்க வேண்டும். இரும்பு மண்ணை உருக்கி, இரும்புத் துண்டாக்கி, எஃகு செய்து, கம்பியாகவும், தகடாகவும் பல விதங்களில் தயார் செய்ய வேண்டும். இவ்வாறு பண்டங்களை இயற்கைப் பொருள்களிலின்று தயார் செய்வது சமூகத்தின் பொருளாதாரத்தின் முக்கிய பாகமாகும். இருநூறு வருஷங்களுக்கு முன் இத் தொழில்களெல்லாம் குடிசைகளிலும், சிறிய தொழிற்சாலைகளிலும் செய்யப்பட்டன. நீராவி, மண்ணெண்ணெய், மின்சாரம் முதலிய சூக்ஷ்ம சக்திகளால் சுழற்றப்படும் யந்திரங்கள் கண்டு பிடிக்கப்பட்டபின், பெரிய தொழிற்சாலைகளில் மிகவும் சக்தியுள்ள யந்திரங்களைக் கொண்டு செய்யப்படும் தொழில்கள் பெருகி வருகின்றன. ஒரு மனிதன் தன் உடலின் வலிமையைக் கொண்டும், மிருகங்களின் பலத்தைக் கொண்டும் செய்வதை விடப் பன்மடங்கு அதிகமாக ஒரு யந்திரத்தைக் கொண்டு உற்பத்தி செய்யக்கூடும். மேலும், ரயில் எஞ்ஜின் முதலிய யந்திரங்கள் செய்யும் வேலையை எவ்வளவு மனிதர் கூடினாலும் தேகவலிமையால் செய்ய முடியாது. ஆனால் அதே சமயத்தில் குடிசைகளில் செய்யக்கூடிய பொருள்களைப் பெரிய தொழிற்சாலைகளில் யந்திர சக்தியால் மிகவும் மலிவாகவும், ஏராளமான அளவிலும் தயார் செய்யக் கூடும். இக்காரணங்களால் பெரும் தொழிற்சாலைகள் சமூகத்தின் செல்வ வளர்ச்சிக்கு இன்றியமையாத சாதனங்களாகி விட்டன. இது பின்வரும் புள்ளி விவரங்களிலிருந்து நன்கு விளங்கும்:

தேசம்	தொழிற்சாலைகள் எண்ணிக்கை	வேலைசெய்யும் தொழிலாளிகள் (லக்ஷம் பேர்கள்)	கூலி சம்பளம் கோடி ரூபாய்	சமூகத்துக்குக் கூடும் நிகர் செல்வம் கோடி ரூபாய்
அமெரிக்க ஐக்கிய நாடுகள்	288,000	161·4	33005	58000
பிரிட்டன்	58,044	75·8	4276	7442
ஜப்பான்	184,487	47·4	990	2514
பாரதம்	6,399	16·3	200	334

இதிலிருந்து நமது நாடு இயந்திரத் தொழிலில் அதிகம் பெருகவில்லை என்பது விளங்கும். இந்தப் புள்ளி விவரங்களின் தாரதம்மியத்தை நன்குணர, இந்த நாடுகளின் ஜனத் தொகையை மனத்தில் வைத்துக் கவனிக்க வேண்டும். அமெரிக்க ஐக்கிய நாடுகளின் ஜனத்தொகை 16.9 கோடி, பிரிட்டன் 5 கோடி, ஜப்பான் 8·5 கோடி, பாரதத்தின் ஜனத்தொகை 35·6 கோடி. அமெரிக்க ஐக்கிய நாட்டில் பத்தில் ஒருவனும், பிரிட்டனில் ஆறில் ஒருவனும், ஜப்பானில் 18ல் ஒருவனும், பாரதத்தில்

225ல் ஒருவனுமே யந்திரத் தொழிற்சாலையில் வேலை செய்கிறான். அப்படி வேலை செய்வோர்களின் சராசரி கூலி: அமெரிக்கனுக்கு மாதம் ரூ. 1600, ஆங்கிலேயனுக்கு ரூ. 450 ஜப்பானியனுக்கு ரூ. 175, இந்தியனுக்கு ரூ. 100. இந்தப் புள்ளி விவரங்களிலிருந்து மற்றொரு முக்கிய விஷயம் தெளிவாகிறது. அமெரிக்க ஐக்கிய நாட்டில் ஒரு தொழிற்சாலையில் வேலை செய்யும் தொழிலாளரின் சராசரி எண்ணிக்கை 55, பிரிட்டனில் 130, ஜப்பானில் 25, இந்தியாவில் 250. ஆதலால் இந்த நாட்டில் சிறிய தொழிற்சாலைகள் மிகவும் குறைவாக இருக்கின்றன. ஓர் பக்கம் அதிக மூதல் கொண்ட தொழிற்சாலைகளும் மற்றொரு பக்கம் குடிசைத் தொழில்களுமாக இருக்கின்றன. இது அவ்வளவு சரியான நிலைமையில்லை. நடுத்தரத் தொழிற்சாலைகளும், 25 லிருந்து 100 தொழிலாளிகள் உள்ள சிறிய தொழிற்சாலைகளும் அதிகரிப்பது மிகவும் அவசியம்.

மனிதனுடைய தேக உழைப்பின் வழியாக நிதமான கூலியே கிடைக்கும். பாரத மக்களின் வாழ்க்கைத் தரம் உயர்ந்து, கூலிகள் அதிகரிக்கும்பொழுது எல்லாத் தொழில்களும் கூடியவரையில் யந்திரங்கள் மூலம் நடைபெற வேண்டியிருக்கும். குடிசைத் தொழில்கள் மெதுவாக, கஷ்டமின்றிச் சிறிய தொழிற்சாலைகளாக மாறி வருமாயின் நமது பொருளாதாரத்தின் நிர்மாணம் சுலபமாகவும், சாந்தமாகவும் நடைபெறும். இல்லாவிடில், நகரங்களில் பெரிய தொழிற்சாலைகளில் வேலை செய்வோருக்கும், கிராமங்களிலும், சிறிய பட்டணங்களிலும் குடிசைத் தொழில்களால் ஜீவனம் செய்வோருக்கும் ஊதியத்தில் வித்தியாசம் பெருகி முடிவில் குடிசைத் தொழிலாளிகள் தாழ்ந்த வகுப்பினராய் விடுவார்கள். அல்லது, வேலையில்லாத் திண்டாட்டம் அதிகரிக்கும்.

இதற்கு நல்ல உதாரணம்: உணவுக்கு அடுத்தபடியாக முக்கியமானது துணி உற்பத்தித் தொழிலாகும். இருநூறு வருஷங்களுக்கு முன் கிழக்கு இந்திய கம்பெனியார் பாரதத்துக்கு வந்தபொழுது இங்கிருந்து துணி வாங்கி இங்கிலாந்தில் வியாபாரம் செய்யவேண்டுமென்ற முக்கிய நோக்கம் கொண்டிருந்தனர். இந் நாட்டில் கிராமந்தோறும் ராட்டையில் நூற்பதும், கைத்தறியில் நெய்வதும் பிரபலமான தொழில்களாக இருந்தன. குடியானவர்கள் கட்டும் முரட்டுத் துணியிலிருந்து மிகவும் மெல்லிய டாக்கா மஸ்லின் வரையில் பல விதத் துணிகள் தயார் செய்யப்பட்டன. நீராவி மூலம் யந்திரம் ஓட்டும் துணி ஆலைகள் இங்கிலாந்தில் அமைக்கப்பட்டதும், துணிக்குப் பதிலாகப் பஞ்சை எடுத்துச் சென்று ஆலைகளில் நூல் நூற்றுத் துணி நெய்து அதை இந்தியாவுக்கு மீண்டும் கொண்டு வந்து விற்பது லாபகரமாக இருந்தது. முதன் முதலில் ஆலைத் துணிகளை விற்பதற்கு ஆங்கில அரசாங்கத்தார் அக்கிரம முறைகளைக் கையாண்டது உண்மையே. ஆனால் இந்தியக் குடிசைத் தொழில் நசித்ததற்கு அதை முக்கிய காரணமாகக் கூறுவது தவறு. ஆலைத் துணி மலிவாக இருந்ததே பிரதான காரணமாகும். அறுபது வருஷங்க

குடிசைத் தொழில்களும், அவற்றால் ஜீவிப்பவர்களின் தொகைகளும் பின்வருமாறு.

ளுக்குமுன் இந்தியாவில் நூல் நூற்கும், துணி நெய்யும் ஆலைகள் ஏற்பட்டதும் பிரிட்டிஷ் துணியைவிட மலிவாக நம் ஆலைகள் உற்பத்தி செய்ய ஆரம்பித்தன. பிரிட்டிஷ் துணிகளுக்குப் பலவித சலுகைகள் காட்டியும் பயன்படவில்லை. இந்தியத் துணி ஆலைத் தொழில் வளர்ந்து இப்பொழுது உலகிலேயே இத்துறையில் முக்கியமாக விளங்குகின்றது. 1939 லிருந்து 1955 வரையில் பிரிட்டனில் நூல் ஆலைக்கதிர்களின் சங்கியை 450 லக்ஷத்திலிருந்து 350 லக்ஷத்துக்குக் குறைந்துவிட்டன. யுத்தத்தின் பலனாக ஜப்பானின் கதிர்களும் 230 லக்ஷத்திலிருந்து 160 லக்ஷமாகிவிட்டன. இந்தியாவின் கதிர்கள் 200 லக்ஷத்திலிருந்து 250 லக்ஷத்துக்கு அதிகரித்தன. தற்சமயம் இந்திய ஆலைகளில் உற்பத்தியாகும் துணி 510 கோடி சதுர கஜங்கள். கைத்தறிகளில் 145 கோடி சதுர கஜங்கள் நெய்யப்படுகின்றன. காந்தியடிகளின் பெரு முயற்சியால் கதர் உற்பத்தி சிறிதளவு தலைதூக்கியது. முதல் ஐந்தாண்டுத் திட்டத்தின் முடிவில் 5,57,000 நூற்போர்களும், 43,000 நெசவுக்காரர்களும் கதர் உற்பத்தியில் ஈடுபட்டிருந்தனர். ஆனால் கைத்தறிகளில் மில் நூலைக் கொண்டு உற்பத்தியாகும் துணியில் 100-க்கு 5 விதமே கதர் உற்பத்தியின் அளவு.

இந்தியாவின் முக்கிய யந்திரத் தொழில்களும் அவற்றில் வேலை செய்யும் தொழிலாளிகளின் எண்ணிக்கையும் பின்வருமாறு:—

(1952 புள்ளி விவரங்கள்)

தொழில்	ஆலைகளின் தொகை	தொழிலாளிகளின் சங்கியை
நூல் துணி	491	684517
சணல்	109	291323
சர்க்கரை	148	119801
இரும்பு, எஃகு	137	78466
வனஸ்பதி	1069	43580
ரசாயனப்பொருள்கள்	276	41455
கண்ணாடிச் சாமான்கள்	136	23073
சிமிண்ட்	19	18216
கம்பளி	45	15801
நெல்லறவை ஆலைகள்	1426	44232
கோதுமை ஆலைகள்	79	5668
வர்ணச் சாமான்கள்	48	5044
சோப்	53	5749
தோல் பதனிடுதல்	94	8181
சைனாமண்சாமான்கள்	67	16909
கள்ளிப்பெட்டி	45	4872
காகிதம்	43	19856
நெருப்புப் பெட்டி	38	12990
அலுமினியம் செம்பு வகையறா	235	20816
சைக்கிள்	43	4452
தையல் மிஷின்	9	2531
மின்சார விளக்கு	9	2016
,, விசிறி	9	4917
இதர மின்சார, இன்ஜினிரிங் சாமான்கள்	1930	143635

எவ்வளவு பேர்களுக்கு வருஷம் முழுதும் வேலை கிடைக்கிறது. அல்லது சில மாதங்கள் போதிய வேலையின்றிச் சும்மா இருக்கின்றனர் என்று கூற முடியாது.

தொழில்	தொழிலாளிகளின் தொகை
நூல், கைத்தறி	25,00,000
பட்டுத் தறி	2,50,000
கம்பளித் தறி	1,00,000
நெல்குத்தல் (சிலமாத வேலை)	10,00,000
தோல் வேலை	38,000
நெருப்புப் பெட்டி	1,10,000
கயிறு, நார் வேலைகள்	25,000
இதர குடிசைத் தொழில்கள்	4,00,000

தற்சமயம் குடிசைத் தொழில்களால் பிழைக்கும் குடும்பங்கள் ஆலைத் தொழில்களால் பிழைக்கும் குடும்பங்களைவிட மூன்று மடங்குக்கு அதிகமென்று கூறலாம். ஆகலால் குடிசைத் தொழில்களை அலட்சியம் செய்ய முடியாது. கூடியவரையில் அவைகளைப் பலப்படுத்த வேண்டும். ஆயினும் வருங்காலத்தில் பாரதத்தின் செல்வத்தைப் பெருக்கி வறுமையைப் போக்குவதற்கு யந்திரத் தொழில்களின் வளர்ச்சியையே நாம் நம்ப வேண்டியிருக்கிறது. பொதுவாக இந்தியாவில் யந்திரத் தொழில்கள் சில பிரதேசங்களில் பெருகினால் போதாது. எல்லாப் பிரதேசங்களிலும் பரவவேண்டும். சாத்தியமான அளவில் சிறிய தொழிற்சாலைகளாக ஒவ்வோர் பிரதேசத்தின் எல்லா ஜில்லாக்களிலும், தாலூக்காக்களிலும் படர்ந்து இருத்தல் நலம். புதிதாக அமைக்கப்பட்ட பிரதேசங்களைப் பற்றிய புள்ளி விவரங்கள் பிரசுரமாகவில்லை. 1-11-56க்கு முன்னிருந்த பிரதேசங்களில் ஆலைத் தொழிலாளிகளின் சங்கியை பின்வருமாறு:

(1953 புள்ளி விவரங்கள்)

பிரதேசம்	தொழிலாளர்
ஆந்திரா	95,443
அஸ்ஸாம்	63,707
பீகார்	169,604
பம்பாய்	741,897
மத்தியப்பிரதேசம்	108,067
மதராஸ்	293,942
ஒரிஸ்ஸா	18,292
பஞ்சாப்	44,324
உத்தரப்பிரதேசம்	206,740
மேற்கு வங்காளம்	607,968
ஹைதராபாத்	64,460
மத்தியபாரதம்	75,977
மைசூர்	54,284
பெப்சு	33,037
ராஜஸ்தானம்	25,049
சௌராஷ்டிரம்	35,357
திருவாங்கூர்	96,407

பம்பாய், வங்காளம் இரண்டு பிரதேசங்களிலும் ஆலைத் தொழில்கள் மிகுந்தும், இதர பிரதேசங்களில் குறைந்தும் இருப்பது குறிப்பிடத் தக்கது.



பாணை பிடித்தவள் பாக்கியசாலி

நீளமான தலைப்பு: அதற்கேற்ற நீளமான கதை. அடுத்து என்ன நிகழப் போகிறது என்று அறியும் ஆவலைத் தூண்டி விடும் நிகழ்ச்சிகள். இவைதான் இப்படத்தின் முக்கியமான அம்சங்கள்.

சுவையான கதை இருப்பதால், படம் மிகவும் சுவாரஸ்யமாயிருக்கிறது. கதை பானை பிடித்தவளைப் பற்றியதாயிருப்பதால் அவள் கணவனுக்கு இந்தப் படத்தில் அதிக வேலை இல்லை போலும்.

படத்தின் ஆரம்பமே ஒரு இருட்டுக் காட்சியில் விறுவிறுப்பாக ஆரம்பமாகிறது. ஒரு பிரபுவின் வீட்டில் கொள்ளையடித்த நகைப் பெட்டியைக் கொள்ளைக்காரர்கள் ஒரு காட்டில் புதைத்து வைக்கும் போது ஆடு மேய்க்கும் மீனாவைப் பார்த்து விடுகின்றனர். இருடன் தன் குட்டு வெளிப்பட்டு விடுமோ என்ற பயத்தினால் அவளைத் தீர்த்துவிடத் தீர்மானித்துத் துரத்துகிறான். அப்பொழுது பெரிய பண்ணை தேவகிரி முதலியாரின் மகன் நாகராஜன் அவளைக் காப்பாற்றுகிறான். உடனே அவர்களிடையே காதல் பிறந்து விடுகிறது. பிறந்த காதல், பெற்றோர்களின் எதிர்ப்புக் கிடையிலும் அதிக இடைஞ்சலின்றி விரைவில் வளர்ந்து, முன்னேறி, கல்யாணத்துக்குப் பரிசம் போட்ட பிறகு வழக்கம்போல் 'டக்'கென்று நின்றுபோய்விடுகிறது.

அவ்வளவுதான். இந்தப் படத்தில் கதாநாயகனுக்கு அப்புறம் வேலையில்லை. கதாநாயகியே திரைக் கதையின் திருப்பங்களுக்கெல்லாம் ஈடு கொடுக்கிறாள்: பட்டிக்காட்டு மீனாவும் அவள் அண்ணன் கருப்பையாவும் கல்யாண நிச்சயதார்த்தத்துக்காக மதுரைக்குப் புறப்பட்ட போது ரயில்வே ஸ்டேஷனில் மட்டும் பெட்டியை வைத்து மறந்து போகவில்லையென்றால், மீனாவின் கல்யாணம் தடையின்றி நடந்திருக்கும். மறந்த பெட்டியை எடுக்கப் போன கருப்பையா வண்டியைத் தவற விட்டுத் திரைக்கதையைச் சுவாரஸ்யமாகத் திருப்பி விடுகிறான்.

கருப்பையாவாக நடிக்கும் ஹாஸ்ய நடிகர் டி. எஸ். துரைராஜ் ஒரு சிறந்த நடிகர்; பல படங்களில் நடித்துப் புகழ் பெற்றவர்; "மலைக்கள்ள"னில் ஹெட்கான்ஸ்டபிளாக நடித்து அவர் எல்லோரையும் சிரிக்க வைத்ததை இதற்குள் யாரும் மறந்திருக்கமாட்டார்கள். துரைராஜ் இந்தப் படத்தில் சக்கைப்போடு போட்டிருக்கிறார். நடித்தது மட்டுமல்லாமல், படத்தை திறமையாக டைரக்டும் செய்திருக்கிறார்.


தங்கை மீனாவிடம் அன்புடன் பேசும் போதும், அசல் பட்டிக்காட்டு மனிதனாக நடிக்கும் போதும் அவருக்கு இணை அவர் தான் என்று சொல்லத் தோன்றுகிறது. 'புருஷன் வீட்டில் வாழப் போகும் பெண்ணே' என்ற பாட்டை அருமையான முகபாவங்களோடு பாடியிருப்பது குறிப்பிடத் தக்கது.

இரு டி. கே. சுந்தரவாத்தியார் இயற்றியிருக்கும் அந்த ஒரு பாட்டுத்தான் இந்தப் படத்திலேயே நன்றாயிருக்கிறது. அடுத்தபடியாக, குறிப்பிடக்கூடிய பாட்டு மகாகவி பாரதியாரின் 'திக்குத் தெரியாத காட்டில்...' என்ற அருமையான பாட்டு.

அந்தப் பாட்டுக்கும் பிடிக்கப்படும் அபிநயமே சிறப்பாயிருக்கிறது. தங்கம் கடைவிடுவதற்குக் கேட்பானேன்!

இந்தப் படத்தில் கதாநாயகிக்குத்தான் அதிக வேலை. கல்யாண நிச்சயதார்த்தத்துக்குப் புறப்பட்ட சில நிமிஷங்களுக்கெல்லாம், ரயிலில் அண்ணனைப் பிரிந்தாள். ரயிலில் ஒரு நயவஞ்சகனின் வலையில் சிக்கி அவனுடன் திருச்சி சென்றாள். திருச்சியில் ஒரு பணக்காரக் கயவனிடம் அகப்பட்டுக் கொண்டு தடுமாறினாள். அவனிடமிருந்து ஒரு டாக்டரால் கொண்டு செல்லப்பட்டு, வழியில் ஒரு வக்கீலிடம் அகப்பட்டுக் கொண்டு அவன் இல்லம் சென்று அங்கிருந்து சாமர்த்தியமாகத் தப்பி, வேதகிரி முதலியார் வீட்டுக்குச் செல்லுகிறாள். பிறகு இருடனிடம் பிடிபட்டு, கடைசியில் வெறுப்படைந்து உயிர்விடப் போன தருணத்தில் அண்ணன் கருப்பையாவைச் சந்திக்கிறாள்: இருடனுக்கும் கருப்பையாவுக்கும் சண்டை நடந்து, போலீஸ் குறுக்கிட்டு, இருடனைக் கைது செய்கிறது.

பட்டிக்காட்டு மீனாவாக மரத்திலேறிக் கொண்டு பேந்தப் பேந்த விழித்ததிலிருந்து கடைசி வரையில் சாவித்திரி மிகவும் சமத்



காரமாக நடித்திருக்கிறார்: சந்தர்ப்பங்களுக் கேற்ற முகபாவங்களை அவரால் எப்பொழுதும் கொண்டுவர முடிகிறது. இந்தப் படத்தில் நன்றாய் நடித்திருக்கும் பாக்கியசாலி அவர்தான்.

தமிழ்ப் படக் கதாநாயகர்களாக வேடம் தாங்கிப் பழக்கப்பட்ட 'ஆகிவந்த' நடிகர்களில் யாரையும் போடாமல் ஒரு புதுமுகமான பாலாஜியைக் கதாநாயகன் பாகத்துக்குத் தேர்ந்தெடுத்தது துணிச்சலான காரியம் தான். கதாநாயகன் வரும் சந்தர்ப்பங்கள் இந்தப் படத்தில் மிகவும் கொஞ்சம்தான். என்றாலும், பாலாஜி அந்தச் சந்தர்ப்பங்களில் சோடை போய்விடவில்லை: முன்னுக்கு வரக் கூடிய புள்ளி அவர்.

ஜெயிலூர் மீனு வீட்டை விட்டுப் புறப்பட்டதிலிருந்து கள்ளன் மாரப்பனும், செயற்கைச் சந்திரனைப் போல அவளையே சுற்றிவருகிறான். மாரப்பனை நடிக்கும் பி. எஸ். வீரப்பா குறை சொல்ல இடம் வைக்காமல் நடித்திருக்கிறார்.

மூனு செட்டியாராக நடிக்கும் வி. எஸ். ராகவன் அமெச்சூர் நாடகங்களில் நடித்துப் புகழ் பெற்றவர். தாம் ஏற்ற பாகத்தைச் சிறப்பாகச் செய்திருக்கிறார்.

தங்கையைக் காணாமல் தவிக்கும் கருப்பையாவின் வாழ்வில் காதல் ஒன்று குறுக்கிடுகிறது. அந்தக் காதலி பாகத்தை ஏற்று டி. பி. முத்துலக்ஷ்மி படத்தின் ஹாஸ்ய பாகத்தைச் சிறப்பிக்கிறார்.

திரைக் கதை, வசனம் மக்களன்பன் அவர்களால் சுவையுடன் அமைக்கப்பட்டிருக்கிறது:

''பானை பிடித்தவள் பாக்கியசாலி'' சுவாரஸ்யமான கதையைக் கொண்டிருந்தாலும், அழுத்தமான உணர்ச்சியைக் கொண்டதல்ல: முன்பு வெளியான ''மிஸ் மாலினி''யைப் போல் எல்லோருக்கும் களிப்பூட்டும் நோக்கத்தை மிகுதியாகக் கொண்ட படம்: சிறு சிறு வேடிக்கைச் சம்பவங்களைக் கொண்ட இது போன்ற படங்களுக்கு, மேல் நாடுகளில் நல்ல வரவேற்பு இருப்பதுண்டு. நம் நாட்டிலும் அத்தகைய படங்கள் ஆங்கிலத்தில் இருந்தால் பார்த்து ரஸிப்பார்கள். தமிழில் அதுபோன்ற படங்களுக்கு இருக்கும் வரவேற்பை இனிமேல்தான் பார்க்க வேண்டும்.

வெந்நீரில் குளிப்பதாக இருந்தால், நல்ல சூடாக விட்டுக்கொண்டு சுகமாகக் குளிக்க வேண்டும்; இல்லையென்றால், குளிர்ந்த ஜலத்திலேயே குளித்துவிட வேண்டும். அதை விட்டு, குளிர்ந்ததாயும் இல்லாமல், சூடாயும் இராமல் 'வெதவெத' வென்று இருக்கும் நீரில் குளிப்பதில் சுகமில்லை.

அதுமாதிரி, இந்தப் படத்தை முழு ஹாஸ்யமாகவும் செய்யாமல், உணர்ச்சிமயமாகவும் செய்யாமல் கொஞ்சம் கலப்படமாகச் செய்திருக்கிறார்கள். அதில் கொஞ்சம் கவனம் செலுத்தியிருக்கலாம்.

பெருங் குழு நடனங்களின் ஆர்ப்பாட்டம் அளவுக்கு மீறிப்போய்விடுகிறது. தலை, தாட்சண்யமில்லாமல் மேற்படி நடனங்களைக் குறைத்து, படத்துக்கு விறுவிறுப்பூட்டியிருக்கலாம். இருந்தாலும் இந்தப் படம் பார்ப்பவர்கள் பாக்கியசாலிகள்தான்.

'பிமல்ரா'யின் டைரக்ஷனில் அற்புதமாக உருவாகியிருக்கும் ''அப்ராதி கௌன்'' என்னும் ஹிந்திப் படம் பார்த்தேன். சுமார் பன்னிரண்டாயிரம் அடிகளுக்குள் அற்புதம் விளைவித்திருக்கிறார்கள் என்று கூறலாம். அது ஒரு துப்பறியும் கதை. குற்றவாளி யார் என்று தெரியாமல் திகைக்க வைத்துக் கடைசியில் திடுக்கிடும் வண்ணம் உண்மை புலனாகிறது. கதை மிகவும் ரஸமாகப் பின்னப்பட்டிருக்கிறது.

அந்தமாதிரி இந்தப் படத்தையும் சுருக்கி விறுவிறுப்பாக வெளியிட்டிருந்தால் இது ஒரு நல்ல படம் என்பதில் சந்தேகமில்லை.



பாரத் புரொடக்ஷன் ஸார் விக்கிரமாதித்தன் கதையைத் திரைப்படமாக உருவாக்கி வருகிறார்கள். இப்படத்தில் பத்மினி ரத்னமாலையின் பாகத்தை ஏற்று நடித்து வருகிறார். ரத்னமாலையின் ஒரு தோற்றம் இது.

★

பயங்கரமான சண்டைக்குத் தயாராக இருப்பவர்கள் வி. கே. ராமசாமியும் டி. எஸ். பாலையாவுந்தான். ஏழுமலையான் பிக்சர்ஸார் தயாரித்து வரும் மாதா பிதா குரு தெய்வம் என்ற படத்தில் சண்டைப் பிரியர்கள் இந்த யுத்தத்தைக் கண்டு களிக்கலாம்.







தென்னைமரத் தோப்பிலே சேனகர் ஜானகியைச் சுற்றிக் குதூகலமாகக் கொம்மாளம் போடுகிறார்கள் இந்தப் பெண்கள். ஸ்ரீலக்ஷ்மி பிக்சர்ஸாரின் நல்லிடத்து சம்பந்தம் என்ற திரைப் படத்தில் வரும் ஒரு காட்சி

*

வனவாசத்தையும் குதூகலமாகவே அநுபவிக்கும் ராமரும் சீதையும். எம். ஏ. வி. பிக்சர்ஸார் சம்பூர்ண ராமாயணத்தை மிகச் சிறப்பாகத் தயாரித்து வருகிறார்கள். அதில் என். டி. ராமராவும் பத்மினியும் தோன்றும் ஒரு கட்டம்.



1. பரோடா அலெம்பிக் ரசாயனப் பொருள்கள் உற்பத்தி சாலையின் ஐம்பதாம் ஆண்டு விழா சமீபத்தில் மிகச் சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. மத்திய அரசாங்கத் தொழில் மந்திரி ஸ்ரீ மனுபாய் எம். ஷா விழாவுக்குத் தலைமை வகித்துச் சிறப்பித்தார்.

2. விசாகப்பட்டினத்தில் கால்டெக்ஸ் கம்பெனியார் புதிதாக ஸ்தாபித்துள்ள கல் எண்ணெய் சுத்திகரிப்புத் தொழிற்சாலையை ஆந்திரா முதன், மந்திரி சஞ்சீவி ரெட்டி ஆரம்பித்து வைத்தார்.

3. பம்பாய் பிரீமியர் ஆட்டோமொபைல்ஸ் இதுவரை 55,000 மோட்டார் வண்டிகளைத் தயாரித்திருக்கின்றது. இந்த மாபெரும் சாதனையைக் கொண்டாடிய போது திரு லால்சந்த் ஹீராசந்த் வண்டியின் சக்கரத்தில் தேங்காய் உடைத்து அனுப்பினர்.






நீங்கள் செய்யும் தொழில் என்ன?


வியாபாரம் . . . தச்சுவேலை . . . எலக்ட்ரீஷியன் . . .

மெகானிக் . . . இஷ்டமான பொழுது போக்குத்தொழில்?

எதுவானாலும், இதுவரை விற்பனை செய்யப்படாததும், ஒவ்வொருவராலும் வாங்கக்கூடிய விலையில், கச்சிதமான, சக்திநிறைந்த 'உல்ப் கப்' ¼" எலக்ட்ரிக் டிரில், உங்களுக்கு மிகவும் அத்தியாவசியமாம்.
முதன் முதலில் 'உல்ப் கப் டிரிலுடன்' தொடங்கி, உங்கள் தொழிற்சாலை முழுவதையும், மின்சார சக்தியால் செலுத்தப்படும் ஆயுதங்களால் பூர்த்தி செய்யுங்கள்.
இதுவரை கை ஆயுதங்களால் செய்யப்பட்டு வரும், துவாரமிடுதல், பாலிஷ் செய்தல், ரம்ப அறுப்புபோன்ற ஜோலிகளிலுள்ள சிரமம், தாமதம், இவைகளை 'உல்ப் கப்' ஏற்றுக்கொண்டு, உங்களுக்கு சௌகரியத்தை அளிக்கும்.
இலகுவாய் திருப்பக்கூடியதுமட்டுமன்றி இலேசானதும் கூட. மிகவும் சுலபமாக வேலை செய்யலாம்.
சிரமமின்றி உங்களால் அதிகப்படியான வேலைகள் செய்ய முடியும்.



Wolf Cub



ராலிஸ் இண்டியா லிமிடெட்,

320, லிங்கச்செட்டித் தெரு, மதராஸ். பம்பாய் • கல்கத்தா • டெல்லி



விசித்திரச் சலங்கை
கதை... வாண்டுமாமா
படம்.... பாபு
6
போ, வெளியே! உனக்கு இந்த வீட்டிலே இடமில்லே. இன்னிக்கு எங்களைப் பட்டினி போட்டு விட்டாயே பாவி...
அட, இந்தப் பானையிலே எல்லாம் யாரு இப்படிக் கோலம் போட்டு வச்சிருக்கிறது?
நான் தான். தெரியாமல் செய்து விட்டேன் மன்னியுங்கள்!
நில்லு. போகாதே இந்தப் பூ வேலை எல்லாம் நல்லா இருக்கு இப்படி வா. சொல்கிறேன்.
சமைக்கத் தெரியாட்டிப் போனாலும் அற்புதமான சித்திர வேலைப்பாடெல்லாம் செய்யத் தெரியுது. மஞ்சுளா, இன்னிக்கு நீயும் எங்க கூடச் சந்தைக்கு வா, என்ன?
இந்தக் குடைப் பானை தான் எத்தனை அழகா இருக்கு... அம்மாடி!



என் ஆயுசிலே இந்த மாதிரி வியாபாரம் நடந்து நான் கண்டதில்லே. சட்டிபானை பூரா வித்துப் போச்சு. இதுக்குக் காரணம் நீதான் மஞ்சுளா
தேவதத்தனோட பானைகளுக்குத்தான் இன்று சந்தையில் என்ன கிராக்கி? என் பானை ஒன்று கூட விற்க வில்லையே. இதன் மர்மத்தை அறிய வேண்டும்
அதே கிராமத்தில் வசிக்கும் சசாங்கனும் நீண்ட காலமாகவே தேவதத்தனிடம் பொறாமை. அவன் நல்ல உழைப்புக்காக ஊரார் அவனைப் புகழுவது சசாங்கனுக்குப் பொறுக்கிறது. இப்போது மஞ்சுளாவின் கைத் திறமையினால் தேவதத்தனின் பானைகளுக்கு ஏற்பட்ட மவுசு அவன் பொறுமைத் தீயைக் கிளறி விட்டது.
மஞ்சுளா! அப்பா சொல்கிறார், நீ வந்ததிலிருந்து வீட்டில் லக்ஷ்மி வாசம் செய்கிறாளாம். அது உண்மைதான்.
நீங்கள் காட்டும் அன்புக்கு நான் கடமைப் பட்டிருக்கிறேன்
ம்... தேவதத்தனின் பானைகளுக்கு வந்துள்ள மவுசு இந்த அழகுப் பெண் மஞ்சுளாவால்தானா? இருக்கட்டும், அப்பனும் மகனும் இல்லாத சமயத்தில் நான் போய் அவளைச் சந்திக்கிறேன்.
மஞ்சுளா! அப்பா அடுத்த கிராமத்துக்குப் போயிருக்கிறார். நானும் காட்டில் எங்கோ வெள்ளைக் களிமண் கிடைக்கிறதாம். பார்த்து வரப்போகிறேன்.
எனக்கும் வேலை இருக்கிறது. இந்தப் பானைகளை எல்லாம் சிங்காரிக்க வேண்டாமா?
தொடரும்....
6



பொல்லாத சைக்கிள்

மித்யா தந்தையிடம் தனக்கூர் சைக்கிள் வாங்கித் தரும்படி நச்சரித்து வந்தான். ஆனால் அவன் தந்தை அவனிடம் ஏதாவது காரணத்தைக் கூறித் தட்டிக் கழித்து வந்தார். ஆனால் மித்யா சைக்கிள் வேண்டுமென்று பிடிவாதம் பிடித்தான்.

கடைசியில் அவன் தந்தை, "குழந்தை! நீ சிறியவன். உன்னால் சைக்கிளை மிதிப்பது கஷ்டம். நீ கொஞ்சம் வளர்ந்த பிறகு வாங்கித் தருகிறேன். அதற்குள் என்னிடம் பணமும் சேர்ந்து விடும்" என்றார்.

அடுத்த நாளிலிருந்து அவன் பார்வை அம்மா பக்கம் திரும்பியது. அம்மாவிடம் அடிக்கடி, "அம்மா! நான் வளர்ந்து விட்டேனா அம்மா! சொல்!" என்று கேட்டுத் தொந்தரவுபடுத்தினான்.

நாட்கள் சென்றன. மித்யாவுக்கு நாலு வயது வந்ததும் அவன் தகப்பனார் சைக்கிள் வாங்கிக் கொடுத்தார். அது அழகான மூன்று கால் சைக்கிள்.

சைக்கிள் வந்ததிலிருந்து வீட்டில் சச்சரவு மிகுந்தது.

"மித்யா! சீக்கிரம் வா!" என்று அவன் தாயார் அழைப்பாள். ஆனால் அது மித்யாவின் காதில் விழாது. அவன் சைக்கிளைத் தோட்டத்தின் மறு மூலைக்கு எடுத்துச் சென்று விடுவான்.

சைக்கிள் ஓட்டும் மகிழ்ச்சியில் அவன் வேளா வேளைக்கு உணவு அருந்தவில்லை; குளிக்கவில்லை. உச்சி வெய்யில் முழுதும் அவன் தலையில்தான் விழுந்தது.

அவன் தாயார் பல தடவைகள் கூப்பிட்டு அலுத்துப் போய், ஓடிவந்து அவனைக் கர கரவென்று இழுத்து வருவாள். அவன் விடாப்பிடியாக அழுதுகொண்டே நடந்து வருவதும், சைக்கிளை அவன் தாயார் தூக்கி வருவதும் வழக்கமாகி விட்டது.

ஒரு நாள் மித்யா தோட்டத்தில் சைக்கிள் விடச் சென்றான். வெகு நேரமாகியும் அவன் வராமல் போகவே, அவன் தாயார் வீட்டிலிருந்து வெளியே வந்து அவனை அழைத்தாள்.

"மித்யா! சாப்பிட வா!"

"இதோ ஒரு நிமிஷத்தில் வந்துடறேன், அம்மா!" என்று கூறிச் சைக்கிளை மிதித்துக் கொண்டே இருந்தான்.

மறுபடியும் தாயார் அவனை அழைத்தாள். ஆனால் அவன் தன் காரியத்தில்

கண்ணு யிருந்தானே தவிரத் திரும்ப வில்லை. பிறகு அவன் அப்பா வெளியே வந்தார். மித்யாவிடம் சென்று, "நீ ஏன் வீட்டுக்கு வரவில்லை ?" என்றார்.

மித்யா கொஞ்ச நேரம் திகைத்துத் திணறி விட்டு, "ஏனா ?......நான் வீட்டுக்கு வருவதை என் சைக்கிள் விரும்பவில்லை !" என்றான் சாமர்த்தியமாக.

"என்ன?" என்று திகைத்தார் அவனுடைய தகப்பனார்.

"நான் வீட்டுக்குத்தான் வர விரும்புகிறேன். ஆனால் என் சைக்கிள் வேறு பக்கம் திரும்புகிறது."

"ஓஹோ! அப்படியா ! இது பொல்லாத சைக்கிள். சொன்னதைக் கேட்காத சைக்கிள் போலிருக்கிறதே !"

"ஆமாம் !" என்று பலமாகத் தலை அசைத்தான் மித்யா.

"சரி ! உன்னுடைய போக்கிரி சைக்கிளுக்குச் சரியான தண்டனை அளிக்கிறேன். நீ வீட்டுக்குப் போ !" என்று கூறினார் அவன் தகப்பனார்.

வீட்டில் ஒரு அறையில் சைக்கிளைப் போட்டுப் பூட்டி விட்டார். அன்று முழுதும் மித்யா சைக்கிளைத் தொடவே முடியவில்லை. மித்யாவின் தகப்பனார் ஆபீசுக்குப் போய் விட்டார். அவன் தாயாரை அணுகினான். "போக்கிரி சைக்கிளுக்கு அப்பாதான் தண்டனை கொடுத்திருக்கிறாரே !" என்று கூறி விட்டான்.

மாலையில் அவன் தகப்பனார் வந்தார். மித்யா வாய்மூடி மௌனியாக ஓரத்தில் தொங்கிய முகத்துடன் நின்று கொண்டிருந்தான். அவரிடம் சைக்கிளைக் கேட்க அவனுக்கு நாவெழவில்லை.

சைக்கிள் இருந்தபோது அவன் தோட்டமே கதியென்று கிடந்தான். சைக்கிள் இல்லாததால் அவன் அறையின் மூலையில் சோகமே உருவமாக அமர்ந்திருந்தான்.

"உன் சைக்கிள் எப்படி யிருக்கிறது ?" என்று கேட்டபடியே மித்யா அமர்ந்திருந்த இடத்துக்கு வந்தார் அவன் தகப்பனார்.

"அப்பா ! அது தனிமையில் அழுது கொண்டிருக்கிறது !"

"எதற்காக அழுகிறது ?"

"அது என்னைப் பிரிந்து தனியாக இருக்கிறதனாலே அழுகிறது, அப்பா!"

"நன்றாக அழட்டும்! ஆனால்தான் அடுத்த தடவை அது தன் போக்கிரித் தனத்தை விட்டுச் சொன்னபடி கேட்கும்!"

"அப்பா ! இனிமேல் அது போக்கிரியா யிருக்காது !"

"ஏன்? உன்னிடம் ஏதாவது கூறியதா?"

"ஆமாம் அப்பா ! அது இனி சமர்த்தாக இருக்கிறதாகச் சொல்லி அழுதது !" என்றான் மித்யா.

"அப்படியானால் நீ சைக்கிளை எடுத்து விடலாம்!" என்றார் அவன் தகப்பனார்.

அன்றிலிருந்து மித்யா தினம் தோட்டத்தில் சைக்கிள் விடச் செல்லுவான். அவன் சைக்கிள் சொன்னபடி கேட்டுக் கொண்டிருந்தது! அவன் அப்பாவாவது அம்மாவாவது கூப்பிட்டால் அது தானாகவே வீட்டை நோக்கித் திரும்பிவிடும் !—பி. எல். மணி


—ஆங்கிலத்திலிருந்து



அண்மையி லிருப்பவரிடமிருந்து

ஜாம்ஷெட்பூர், ரௌர்கேலா இவைகளுக்கு, இடையே நெருங்கிய தொடர்பு அவசியமே. எல்லா எஃகு தொழிற் சாலைகளுள் ரௌர்கேலாவில் ஸ்தாபிக்கப்பட்டு வருவது. இந்தியாவின் முதல் எஃகு நகரமாகிய ஜாம்ஷெட்பூருக்கு மிக அருகில் இருக்கிறது.

இவ்வித நெருங்கிய தொடர்பு, தொழில் அனுபவத்தையும், உயரிய கருத்துக்களையும் உபயோகமான முறையில் ஒருவருக்கொருவர் மாற்றிக்கொள்ள வழி காட்டுகிறது.



இதுவும் அவசியமே. ஏனெனில் ஜாம்ஷெட்பூர் 50 வருட காலமாக எஃகு உற்பத்தி செய்து வருகிறது. ரௌர்கேலாவிற்காக எஞ்சினீர்களையும், தொழில் நிபுணர்களையும் பயில்வித்து உதவி புரிவதில் ஜாம்ஷெட்பூர் மிக சந்தோஷம் அடைகிறது. அப்படிப்பட்ட 150 பேர்கள் (வேலைக்குத் தேவையான முக்கிய அங்கத்தினர் முதல் தொழிலாளர் வரை) ஜாம்ஷெட்பூரில் இருக்கிறார்கள்.

ரௌர்கேலாவிற்கு நல்வாழ்த்துக்கள்

இவ்வித சிநேகத்தை பலப்படுத்தும் முறையில் ஜாம்ஷெட்பூரில் இருந்த பலரை ரௌர்கேலாவில் காணலாம். அவர்களுக்கும், அவர்களது சக தொழிலாளர்களுக்கும் ஜாம்ஷெட்பூரின் வாழ்த்துக்களும், அவசியம் உரித்தாகுக.

தி டாடா அயர்ன் அண்ட் ஸ்டீல் கம்பெனி லிமிடெட்.

கான்ஸ்டபிள் கந்தசாமி

ஏ.கே.பட்டுசாமி

ஒன்பதாம் அத்தியாயம்

புயலும் இடியும்

மறுநாள் எல்லாப் பத்திரிகைகளும் பின்கண்ட செய்தியை வெளியிட்டன.

''பிரபல வைர வியாபாரிகளான மணி சங்கர் காந்திலாலின் வியாபார ஸ்தலம் சூறையாடப்பட்டது. கொள்ளைக்காரர்களுடன் எதிர்த்துப் போராடிய கான்ஸ்டபிள் கந்தசாமிக்கு மண்டையில் பலமானகாயம். சென்னை ஜெனரல் ஆஸ்பத்திரியில் அவர் சிகிச்சை பெற்று வருகிறார்.''

பத்திரிகையில் கந்தசாமியின் பெயரைக் கண்ட சிங்காரி ஆச்சரிய மடைந்தாள். ''அப்பா, அப்பா! இதோ, பத்திரிகையிலே என்ன போட்டிருக்குது, பாருங்க!'' என்று பரபரப்புடன் தந்தையிடம் வந்தாள்.

''என்ன போட்டிருக்குது, குழந்தை! யாராவது மந்திரி 'டீபார்ட்டி'க்குப் போனார் என்று போட்டிருக்குதா?''

''இல்லையப்பா! நம்ம வீட்டுக்கு அன்று வந்தாரே, அந்தப் போலீஸ்காரர்......''

' உம், உம்......தங்கசாமியா?''

''இல்லையப்பா! கந்தசாமி'' என்று அவன் பெயரைக் கூறியபோது அவளது முகத்தில் நாணம் படர்ந்தது.

''ஆமாம், ஆமாம் கந்தசாமி, அவரைப் பற்றி ஏதாவது போட்டிருக்குதா?படிபடி!''



சிங்காரி முழு விவரங்களையும் படித்தாள். கந்தசாமிக்கு மண்டையில் நல்ல காயம் என்று படிக்கும்போதே அவளுடைய ஹிருதயத்தில் களீரென்று அடி விழுந்தது போலிருந்தது.



''சபாஷ், நல்ல சாமர்த்தியக்காரப் பிள்ளை! வீரன் என்றால் அவன்தான் வீரன்'' என்றார் புலவர்.

'' ஆஸ்பத்திரியிலே படுத்திருக்காராமே நாம் போய் அவரைப் பார்க்க வேண்டாமா அப்பா?'' என்று கொஞ்சலாகக் கேட்டாள் சிங்காரி.

''கட்டாயம் பார்க்கத்தான் வேண்டும் அம்மா, ஆனால்....உன்னுடைய சின்ன அம்மா ஏதாவது....''

''அவங்க திருவல்லிக்கேணியிலே யார் வீட்டிலோ கல்யாணம் என்று இப்பத்தான் போனாங்கப்பா...சாயந்திரம் தான் திரும்பி வருவாங்க. நாம் அதற்குள்ளாகப் போய் வந்துவிடலாம்'' என்று சொன்னாள் சிங்காரி.

தலையில் பெரும் கட்டுப் போட்டுக்கொண்டு படுத்திருந்த கந்தசாமியை அவர்களால் அடையாளம் கண்டுபிடிக்க முடியவில்லை. அவன் இருக்குமிடம் தெரியாமல் சுற்றுமுற்றும் பார்த்தாள் சிங்காரி. அதற்குள் அவர்களைக் கவனித்து விட்ட கந்தசாமி சிரமப்பட்டு, ''மாமா! இங்கேதான் இருக்கிறேன்!'' என்றான்.

அவனது குரலைக் கேட்டுத் திரும்பிய சிங்காரியைப் பார்த்து மண்டை வலியையும் சகித்துக் கொண்டு அவன் இலேசாக முறுவலித்தான். அவனது பரிதாப நிலையைக் கண்டு, வேதனையடைந்த அதே சமயத்தில் ''மாமா!'' என்று அவன் தன் தகப்பனாரை முறை கொண்டாடி அழைத்ததைக்கண்டு அவளது உள்ளத்தில் ஒரு இன்ப உணர்ச்சியும் தோன்றியது.

புலவரை அருகிலிருந்த ஆசனத்தில் உட்காரச் சொல்லி, அவள் பக்கத்திலே நின்று கொண்டாள்.

''மாமா!'' என்று மீண்டும் கூப்பிட்டு விட்டுச் சிங்காரியை உற்று நோக்கினான் அவன். அவள் நாணித் தலைகுனிந்தாள். புலவர் ஆட்சேபித்துப் பேசவில்லை.

'' சொல்லப்பா கந்தசாமி! உடம்பு எப்படியிருக்கிறது? பேப்பரில் படித்தேன். ஏது, பெரிய கொள்ளைக் கூட்டத்தில் சிக்கிக் கொண்டாயாமே!''

இன்ஸ்பெக்டர் அளகிரிசாமி நாயுடு முதல் ஆஸ்பத்திரி நர்ஸ் உள்பட அவன் அதுவரையில் எத்தனையோ பேர்டம் சொல்லிவிட்ட தன் வீரக் கதையை மீண்டும் சொல்ல ஆரம்பித்தான்.

''நல்லாச் சொன்னீங்க. தன்னந் தனியாகக் கிடுகிடுன்னு சுற்றி ஒவ்வொரு திருடனையும் அடிச்சிருக்கேன் பாருங்க! ஆறு மாசத்துக்குப் படுக்கையைவிட்டு எழுந்திருக்க மாட்டாங்க!''

''உன் தலையிலே இருக்கிற கட்டைப் பார்த்தால் உன் உடம்பு குணமாவதற்குக் கூட வெகு நாட்களாகும் போல் இருக்குதே!''

''விட்டுத் தள்ளுங்க. இதெல்லாம் வரவா? செலவா! பயங்காளிப் பசங்க பின்னாலிருந்து அடிச்சுட்டாங்க! இன்னும் ஒரே வாரத்திலே நான் வெளியே வந்து விடுவேன்.''

சிங்காரி தணிவான குரலில் பேசினாள்: ''உடம்பைப் பார்த்துக்குங்க. நீங்க ஓயாமல் பேசிக்கிட்டே இருந்தால் உங்கள் உடம்பு ரொம்ப அலண்டு போகும்!''

அவள் தன்னிடம் காட்டும் பரிவைக் கண்டு கந்தசாமியின் உள்ளம் குளிர்ந்துவிட்டது.

''இதோ பார், தம்பி! முடிந்தால் நான் நாளைக்காவது மறுநாளாவது வந்து பார்க்கிறேன். இல்லையானால் உடம்பு குணமானதும் நீ நம் வீட்டுக்கு அவசியம் வா. சிங்காரியின் கல்யாண விஷயம் முத்திக்கிட்டே போகுது. அது விஷயமா உங்கிட்ட சில முக்கிய விஷயங்கள் பேச வேண்டும்'' என்றார் புலவர்.

சிங்காரி விஷயம் என்றதும கந்தசாமி பேச்சோடு பேச்சாக, ''இதோ பாருங்க, இப்பவே என் பெயர் பேப்பரிலெல்லாம் அடிபட்டுப் போச்சு. சீக்கிரமே உத்தியோகம் உயர்வதற்கு இதுதான் முதல் படி!'' என்றான் பெருமிதத்துடன்.


இதே சமயம் வெளி வராந்தாவில் முத்தம்பாளின் குரல் கேட்கவே, ''அக்கா! வாங்க'' என்று வரவேற்றான் கந்தசாமி.

''நாம்ப போகலாம், அப்பா!'' என்றாள் சிங்காரி. அவளது கண்கள் அவனிடம் விடை கேட்டன. அவனது முறுவல் விடை கொடுத்தது.

முத்தம்மாளும் தருமலிங்கமும் பேசிக் கொண்டே உள்ளே நுழைந்தனர். அவர்களுக்குப் பின்னால் தயங்கித் தயங்கி வந்து கொண்டிருந்த முனியம்மாளைத்தொடர்ந்து 'மப்டி'யில் வந்த கான்ஸ்டபிள் முருகேசன் அவளை அணுகி வெளி வராந்தாவிலேயே நிறுத்தினான்.

''இதோ பார், நீ கந்தசாமியின் மாமன்மகள் முனியம்மாள்தானே?''

அப்போது தான் அவர்களைத் தாண்டிச் சென்று கொண்டிருந்த சிங்காரி, ''கந்தசாமி'' என்ற பெயர் காதில் விழுந்ததும் சடக்கென்று திரும்பி அவர்களைப் பார்த்தாள்.



முனியம்மாள் சிரித்துக் கொண்டே, அந்த ஆசாமியிடம் ஏதோ பதிலளித்தாள். மீண்டும் அவன் தணிவான குரலில் ஏதோ கேலியாகக் கேட்கவும், அவள் நாணிக் கோணிக் கொண்டு, "அப்புறமா சொல்லுகிறேன்" என்று கூறிய வண்ணம் ஓடிவிட்டாள்.

சிங்காரியின் மனத்தில் புயல் வீசியது. 'கந்தசாமிக்கு மாமன் மகள் ஒருத்தியிருக்கிறாளா? இந்த ஆசாமி அவளை என்ன கேட்டான்? ஒருகால் கல்யாணம் எப்போது என்று? அதற்குப் பதிலாகத்தான் அவள் 'அப்புறமா சொல்கிறேன்' என்று கூறினாளா?'

இனம் தெரியாத ஒரு வேதனையும் பொறாமை புணர்ச்சியும் அவளது உள்ளத்தில் வியாபித்தன.

* * *

வீட்டை நெருங்கியபோது அவர்களுக்கு ஒரு பெரிய அதிர்ச்சி காத்திருந்தது. மாலையில்தான் திரும்புவாள் என்று நினைத்திருந்த கண்ணம்மாள் முன்புறத் தோட்டத்தில் கூண்டுப் புலி போல் மேலும் கீழுமாக உலாவிக் கொண்டிருந்தாள். வராந்தாவில் பயங்கர மீசையும், ரத்தக் கண்களும், கிருதாக் கிராப்புமாக உயரமான ஒரு ஆசாமி நின்று கொண்டிருந்தான். சிங்காரியின் மனம் 'திக்திக்' என்று அடித்துக் கொண்டது.


அவள் மெதுவாக, "அப்பா, சின்ன அம்மா வந்துட்டாங்க, அப்பா!" என்றாள்.

"சரிதான் இன்றைக்குக் கிரகபலன் சரியாக இல்லை" என்று பெருமூச்சுவிட்டார் கிழவர்.

அவர்களைப் பார்த்ததும் அப்படியே நாகம் போல் சீறி விழுந்து பிடுங்கப் போகிறாள் என்று நினைத்ததற்கு நேர் மாறாகக் கண்ணம்மாள் சற்று நிதானமாகவே பேசியது சிங்காரிக்கு மிகுந்த ஆச்சரியத்தை அளித்தது.

"எங்கே போயிட்டீங்க சிங்காரி, காலையிலே கதவையும் பூட்டிக்கிட்டு?"

என்ன பதில் சொல்லலாம் என்று அவள் யோசித்துக் கொண்டிருக்கையிலேயே முத்துப் புலவர் குறுக்கிட்டு, "ஆஸ்பத்திரிக்குப் போய்விட்டு வந்தோம்" என்று உளறி விட்டார்.



'ஏன் போனீர்கள்?' என்று கேட்பாளோ என்று பயந்தபடி ஆகவில்லை.

"அப்பாவுக்கு உடம்பு சரியில்லேன்னு அழைச்சுட்டுப் போனியா, சிங்காரி, சரி சரி, கதவைத் திற" என்று சாந்தமாகப் பேசினாள் கண்ணம்மாள்.

சிங்காரி கதவைத் திறந்தாள். கண்ணம்மாள் அந்தப் புது மனிதனை அழைத்துக் கொண்டு கூடத்துக்குப் போனாள். முத்துப் பிள்ளை விவரம் புரியாது விழித்துக் கொண்டே தம் அறையில் புகுந்து முடக்கிக் கொண்டார்.

"சிங்காரி! சீக்கிரமா தம்பிக்குக் கொஞ்சம் காப்பி போட்டு எடுத்துக்கிட்டு வா!" என்றாள் கண்ணம்மாள்.

அவன், "எதற்குங்க அதெல்லாம்? வேண்டாம்!" என்றான்.

"சும்மா இருக்கட்டும் தம்பி, வித்தியாசம் பார்க்காதே. எங்கள் வீடு வேறே இல்லே. மருதமும் நானும் எத்தனை சிநேகம் தெரியுமா!"

அடுக்களையிலிருந்த சிங்காரிக்கு அவர்களது பேச்சு காதில் விழுந்தது. மருதம்மாள் அடிக்கடி பெருமையடித்துக் கொள்ளும் தங்கவேலு இவன்தான் என்று அவளுக்குப் புரிந்து விட்டது. அவனது கடுகடுப்பான முகமும், மிருகத்தைப் போன்ற தோற்றமும் அவளது மனத்தில் வெறுப் புணர்ச்சியையும் அருவருப்பையும் உண்டாக்கின.

வரவர மருதம்மாவிடம் சின்னம்மாவின் சிநேகம் வலுத்துக் கொண்டே வந்தது! தினம் தினம் அவர்கள் கூடிக் கூடி ரகசியம் பேசுவதும், இப்படிக் கண்டவர்களையும் வீட்டுக்கு அழைத்து வந்து 'காப்பியைப் போடு, பலகாரத்தைப் பண்ணு' என்று அவள் செய்த அதிகாரமும் சிங்காரிக்குக் கட்டோடு பிடிக்கவில்லை.

அவள் தன் சாரமற்ற வாழ்க்கையை எண்ணினாள். அன்பு காட்டிச் சீராட்டத் தாயில்லை. ஆதரவு காட்ட வேண்டிய தந்தை அநாதரவான நிலையில் இருந்தார். அந்த வாலிப வயதில் அவளது ஆசாபாசங்களை வெளியிடக்கூட வீட்டில் சுதந்திரம் கிடையாது. அவளுக்கென்று யாரும் தோழிகளும் இல்லை. அவளையோ, தந்தையையோ தேடிக்கொண்டு யாரும்


Alembic
க்ளைகோடின்
டெர்ப் வசாகா
பயங்கரமான
இருமலிலிருந்து
குணமடைய செய்வது
க்ளைகோடின் டெர்ப் வாசகா
இருமலுக்கு வீட்டிலேயே குணம் அளிப்பது
அலெம்பிக் கெமிகல் ஒர்க்ஸ் கம். லிட். பரோடா-3.
GTV.57.1A.
TM

வீட்டுப் பக்கம் வரக் கூடாது என்பது கண்ணம்மாவின் கண்டிப்பான உத்தரவு! பொழுது விடிந்தால் பொழுது போனால் சின்னம்மாவையும், அவளது தோழிகளையும் மனச்சாட்சிக்கு விரோதமாகப் புகழ்ந்து பேசுவதும், அவர்களுக்குப் பணிவிடை புரிவதுமேதான் வாழ்க்கையின் லட்சியம் என்றாகி விட்டது! அவளது எதிர்காலம் என்ன ஆகும்? தந்தை மட்டும் இல்லாதிருந்தால், கண்ணம்மாளின் அதிகாரத்தைச் சகித்துக் கொண்டு ஒரு விநாடி அவள் வீட்டில் இருக்க மாட்டாள்.

காப்பி தயாரானதும் கொஞ்சம் ஒதுப்புறத்திலிருந்தே, ''காப்பி போட்டாச்சு, சின்னம்மா!'' என்றாள்.

''போட்டாச்சுன்னா இங்கே கொண்டு வாயேன், சிங்காரி!''

விதியே என்று தலைகுனிந்த வண்ணம் காப்பிப் பாத்திரத்துடன் கூடத்துக்கு வந்தாள் அவள். தங்கவேலு வேட்டை நாயைப் போல் அவளையே உறுத்துப் பார்த்துக் கொண்டிருந்தான்.

''சிங்காரி! உன்னை இவருக்குத்தான் கட்டிக் கொடுக்கப் போகிறேன்'' என்றாள் கண்ணம்மாள்.

சிங்காரியின் கையிலிருந்த காப்பிப் பாத்திரம் நழுவித் தடாலென்று கீழே விழுந்தது. அதிலிருந்த காப்பி கண்ணம்மாவின் முகத்திலும், அருகில் இருந்த தங்கவேலுவின் முகத்திலும் தெறித்தது.

பத்தாம் அத்தியாயம்

பூகம்பம்

முனியம்மாள் ஊரிலிருந்து வந்தபோது பெருத்த மனக்கோட்டைகள் கட்டிக் கொண்டுதான் வந்தாள். அவளது பன்னிரண்டாம் வயதில் தாய் இறந்தது முதல் குடும்பப் பொறுப்பு முழுவதும் அவள் மீது விழுந்தது. கோவில், குளம், பூஜை, புனஸ்காரம், சிவனடியார்கள் சேவை என்று சதா பக்தி மார்க்கத்திலேயே ஈடுபட்டிருந்த தருமலிங்கம், வீடு வாசல் என்ற நினைவே இல்லாமல் இருந்தார்.

பெண்ணுக்கு வயதாகிக் கொண்டே வருவதும், அவள் மளமளவென்று இல்லறப் பாங்கையடைந்து நிற்பதும் கூட அவரது கவனத்தைக் கவரவில்லை. கிராமத்திலுள்ள தன்னையொத்த வயதுள்ள பெண்கள் விவாகமாகிக் குடியும் குடித்தனமுமாக வாழ்வதையும், அடிக்கொருமுறை தங்கள் பிறந்தகத்துக்கு வரும்போது தமது இல்வாழ்க்கையைப் பற்றி அவர்கள் கூறும் பெருமைகளையும் கேட்டுக் கேட்டு அவளது இளம் உள்ளம் பொருமியது.

இந்தச் சமயத்தில்தான் முத்தம்மாளுக்கு அவளைப்பற்றி நினைவு வந்தது. முனியம்மாளைப் பட்டணத்தில் கொண்டு வந்து விட வேண்டியது என்று கடிதம் வந்ததும் அவள் தனது எதிர்காலத்தைப் பற்றிப் பிரமாதமாகக் கற்பனை செய்ய ஆரம்பித்தாள்.

அருமை அத்தான் தன்னிடம் அளவற்ற அன்பு காட்டுவான்; சுகம் என்பதையே கண்டறியாத தன் வாழ்க்கை வளம் பெறப் போகிறது. ஒரு போலீஸ் வீரனுக்கு வாழ்க்கைப்பட்டுச் சென்னைப் பட்டணத்தில் சீரும் சிறப்புமாக வாழப் போகிறோம். கிராமத்துக்கு வரும்போது மற்றப் பெண்களிடம் அத்தானின் வீரத்தைப் பற்றிக் கதை கதையாகச் சொல்ல வேண்டும் என்றெல்லாம் பெருமையாக எண்ணிக் கொண்டு சென்னை வந்த அவளுக்குக் கந்தசாமி அவளிடம் நடந்து கொண்ட முறை பெருத்த ஏமாற்றத்தையும் துக்கத்தையும் அளித்து விட்டது.

வந்த நாள் முதலாகவே அவன் அவளைக் கண்ணில் காணவொட்டாது வெறுத்தான். முதல்நாள் அவள் அன்போடு அவனுக்குக் காப்பியும் பலகாரமும் கொண்டு வைத்தபோதே, மற்றவர்களுக்குத் தெரியாமல் ''சீ! உன் மூஞ்சியும் முகரையும். காப்பி கொண்டுவந்துட்டியா காப்பி? உன் கையாலே யார் வாங்கித் தின்னுவது! இன்னொரு தரம் என் எதிரே வந்தே தெரியும் சேதி!'' என்று கடுமையாக அவளது மனத்தைப் புண்படுத்தி விட்டான். எப்பொழுதாவது அவனது சீப்பையோ, சோப்பையோ தப்பித்தவறி எடுத்துவிட்டால், ''நாட்டுப் புறத்துக் கழுதை! உங்க ஊரிலே சோப்புத் தேச்சுத்தான் வளர்த்தியா! இனிமேல் அதைத் தொட்டால் கையைக் காலை ஒடிச்சுக் கழுத்திலே மாட்டி விடுவேன்!'' என்று விரட்டத் தொடங்கினான் அவன். இப்படித் திட்டுகிறானே என்று அவள் கண்ணைக் கசக்கினாள் என்றால் ''மூதேவி மாதிரி அழத் தொடங்கி விட்டாயே? ஊருக்காவது போய்த் தொலைகிறதுதானே!'' என்று கோபத்துடன் சீறி விழுவான்.

முனியம்மாளின் எண்ணக்கோட்டை கலகலத்து விட்டது. அதற்குத் தகுந்தாற்போல் முத்தம்மாளுக்கும் அத்தா

னுக்கும் இடையே நடந்த புகைச்சல்களி லிருந்து அத்தானைப் பற்றிக் கனவு காண் பது வீண் என்பதை அவள் உணர்ந்து கொண்டாள். அதிகமாக அவனிடம் பழகாமல் தொலைவாகவே இருக்கத் தொடங்கினாள். அவன் தலையைக் கண்ட வுடனே பயந்து பதுங்கத்தலைப்பட்டாள்.

இந்த நிலையில்தான் முருகேசன் அன்று ஆஸ்பத்திரியில் சந்தித்துக் கனிவாகப் பேசினான். மணவாழ்க்கை என்பது தன் அதிர்ஷ்டத்தில் இல்லை போலும் என்று நிராசை யடைந்தி ருந்த அவளது வறட்சி உள்ளத்தில் முருகேச னுடைய அநுசரணை யான மொழிகள் ஒரு புது நம்பிக்கையைத் தளிர்க்கச் செய்தன.



அன்று காலையி லேயே தருமலிங்கம் ஊருக்குப் புறப்பட்டு விட்டார். முத்தம்மா ளும் தம்பியைப் பார்க்க ஆஸ்பத்திரிக் குப் போய் விட்டாள். முனியம்மாள் ஆஸ்பத் திரிக்கு வருவதைத் தம்பி விரும்பவில்லை என்பதை அவள் ஜாடையாகக் கண்டு கொண்டாள். ஆகவே அவளை விட் டைப் பார்த்துக் கொள்ளச் சொல்லி விட்டு அவள் மட்டுமே சென்றாள்.

அவள் போனதும் முருகேசன் வந் தான். முனியம்மாள் நாணத்தோடு எழுந்து அவனை வரவேற்றாள்.

''அவங்க ஆஸ்பத்திரிக்குப் போயிருக் காங்க!'' என்றாள்.

''நீ அதைச் சொல்லணுமா, முனி யம்மா! அது தெரிஞ்சுதானே நான் உன்னைப் பார்க்க வந்தேன்! .....உன் கிட்ட ஒரு முக்கியமான சங்கதி கேட் கணும்....'' என்றான்.

முனியம்மாள் ஆவலோடு அவனது முகத்தைப் பார்த்தாள்.

''நீ அன்றைக்குச் சொன்னாயே, அத் தானுக்கும் உனக்கும் கல்யாணம் நடக் கப் போவதில்லை என்று! ஏன் அப்படி? ஏதாவது....'' என்று இழுத்தான் முருகேசன்.

முனியம்மாள் பதில் பேசவில்லை. முரு கேசனின் கேள்வி அவளது துயரத்தைக் கிளறிவிட்டது. கந்தசாமி அவளை அலட் சியப் படுத்தித் திட்டிய திட்டுகள் நினை வுக்கு வந்ததும் கண்களில் நீர் சுரந்தது.

அவளது கண்கள் கலங்கியதைக் கண்ட முருகேசனின் மனம் வேதனையடைந்தது.

''என்ன முனியம்மா! நான் ஏதாவது தப்பாகக் கேட்டு விட்டேனா?''

துக்கம் தொண்டையை அடைக்க அவள் மெதுவாகத் திக்கிக் கொண்டே கூறினாள்: ''இல்லைங்க, அவருக்கு என் னைக் கண்டாலே பிடிக்கல்லே!......''

அவன் அந்தக் கள்ளங்கபடமற்ற பெண்ணைக் கனிவாகப் பார்த்தான்.

''நீ வருத்தப் படாதே, முனியம்மா! அவன் கிடக்கிறான்!'' என்று அவளைச் சமா தானப்படுத்தினான்.

அடக்க முடியாத துயரம் உள்ளத்தில் அலை மோதும்போது யாராவது ஆறுதலாக இரண்டு வார்த்தை கூறி விட்டால், அந் தத் துயரம் அடங் குவதற்குப் பதிலாக அதிகரித்து விடுவதும் உண்டு. முனியம்மாள் விஷயத்தில் இது உண் மையாகி விட்டது.

''இந்த உலகத் திலே, யாருமே விரும் பாத ஒரு ஜென்ம மாகப் பொறந்துட் டேன்!...'' என்று விம்மலுக் கிடையே கூறி விசிக்கத் தொடங்கினாள் அவள்.

அதற்கு மேலும் அந்த அபலையின் அழுகையைப் பார்த்துக் கொண்டு வாளா இருக்க அவனால் இயலவில்லை. அருகில் சென்று அன்போடு அவளது கேசத்தை வருடிக் கொண்டே, ''இதோ பாரு முனியம்மா, என்னைக்கூடவா அப்படி நினைக்கிறே! அந்தப் பயலுக்கு உன் அருமை தெரியாமல் போனால் எல்லாருமே அப்படி இருப்பாங்களா? இதற்குப் போய் அசட்டுத்தனமா அழ லாமா?... என்னைப் பாரு! கண்ணைத் துடைத்துக்கொள்'' என்று முருகேசன் அன்பாகப் பேசினான். அவளது உடல் ஆனந்தத்தால் சிலிர்த்தது.

இதே சமயம் வெளிவாசற்படி யருகில் ஆளரவம் கேட்கவும் முனியம்மாள் முருகேசனைக் கண்களால் எச்சரிக்கை செய்த வண்ணம் மெதுவாக உள்ளே நழுவினாள். முருகேசனும் பேச்சை மாற்றி, ''சரி, அவங்க இல்லையா?...... அப்படியானால் நான் போகிறேன். வந்தால் சொல்லுங்க!'' என்று கூறிக் கொண்டே திரும்பினான். அதேசமயம்


வஸந்தத்தின் புத்துணர்ச்சி
உங்களுக்கு இன்றும்.. என்றும்
மிக்க நேர்த்தி வாய்ந்த காஷ்மீர் பொக்கே உங்கள் உடலுக்கு இளவேனிற்காலையின் புத்துணர்ச்சியளிக்கிறது... அதைக் குளிர்ச்சியாகவும் வாசனை திகழவும் வைக்கிறது.
Cashmere Bouquet
காஷ்மீர் பொக்கே
டால்கம் பௌடர்
ஆண்கள் விரும்பும் நறுமணத்துடன்


பித்தளை மற்றும் தாமிர சாமான்களை பாலிஷ் செய்ய பிராஸோவிற்கு நிகர் ஒன்றுமில்லை. பிராஸோ சுத்தம் செய்வதுடன் பளபளப்பாகவும் செய்கிறது — அதுவும் விரைவாக, எளிதாக, மிருதுவாக.
"பிராஸோ கொண்டு பாலிஷ் செய்வதற்கு முன்னால், பித்தளை இவ்வளவு பளபளப்பாக இருக்கும் என்று எனக்குத் தெரியாது"
BRASSO
திரவம் அல்லது பசை
பிராஸோ
மெட்டல் பாலிஷ்
உங்கள் வீட்டிற்குப் பிரகாசத்தைக் கொண்டுவருகிறது
அட்லான்டிஸ் (ஈஸ்ட்) லிமிடெட்
(இங்கிலாந்தில் இணைக்கப் பெற்றது)

வீட்டுக்கு உள்ளே நுழைந்த முத்தம்மாள் "என்ன தம்பி, என்ன விசேஷம்?" என்று கேட்டாள்.

"ஒன்னுமில்லே. சுந்தரசாமியை ஆஸ்பத்திரியிலே போய்ப்பார்க்க முடியல்லே. ஸ்டேஷனிலே ஏகப்பட்ட வேலை. இந்தப் பக்கம் ஒரு காரியமாக வந்தேன். அப்படியே உங்களையாவது பார்த்து விசாரிச்சு விட்டுப் போகலாம்னு வந்தால், நீங்க ஆஸ்பத்திரிக்குத்தான் போயிருக்கிறதாகத் தெரிஞ்சது. நீங்க இல்லாத சமயத்திலே நான் மட்டும் இங்கே நின்னு பேசிக்கிட்டிருந்தால் தப்பு பாருங்க. அது தான் புறப்பட்டுவிட்டேன்!"

இதே நேரத்தில் முத்துப் பிள்ளையின் வீட்டில் பூகம்பத்துக்கான அறிகுறிகள் காணப்பட்டன. கண்ணம்மாள் ரௌத்திராகாரமான கோபத்துடன் விளங்கினாள். மருதம்மாளும் தங்கவேலுவும் மீண்டும் அப்போதுதான் வந்து போனார்கள். கண்ணம்மாள் சிங்காரியின் விவாகத்தைப் பற்றி அவர்களிடம் முடிவாகப் பேசித் தீர்த்து விட்டாள்.

'அடுத்த வாரம் வெள்ளிக்கிழமையன்று நிச்சய தாம்பூலம் மாற்றிவிடுவது. அதற்கடுத்த புதன்கிழமை திருநீர் மலையில் சுருக்கமான முறையில் கல்யாணத்தை நடத்திவிட வேண்டியது. உறவினர்கள் யாரையும் கூப்பிட்டுத் தம்பட்டம் அடிக்க வேண்டிய அவசியம் இல்லை. விவாகம் ஆன மறுநாளே தங்கவேலு சிங்காரியை அழைத்துக் கொண்டு ராணிப்பேட்டைக்குப் போய்விடுவான்.' இவ்வாறு அவர்களுக்குள்ளாகவே பேசி முடித்துக் கொண்டார்கள்.

வழக்கம்போல் முத்துப்பிள்ளையைப் பேச்சில் சேர்த்துக் கொள்ளவேயில்லை. அவரது மனம் குமுறிக் கொண்டிருந்தது. சிங்காரியின் மனநிலை விவரிக்க வொண்ணாததாக இருந்தது. இதற்கு முன் கண்ணம்மாளும், மருதம்மாளும் கூடிப் பேசும் போதெல்லாம், அவள் அவை சர்வ சாதாரணமான வெட்டிப் பேச்சுக்கள் என்று சிறிது அலட்சியமாகவே கருதியிருந்தாள். 'புலி வருகிறது, புலி வருகிறது' என்று கடைசியில் வந்தே விட்டது. இவ்வளவு சீக்கிரமாக முடிவு கட்டி விடுவாள் என்று அவள் எதிர்பார்க்கவே இல்லை. மருதமும் தங்கவேலுவும் விடைபெற்றுக் கொண்டு சென்ற உடனேயே சிங்காரி துக்கமும், கோபமும் ஒருங்கே கொந்தளிக்கக் கூறினாள்:

"சின்னம்மா! இப்பொழுதே சொல்லி விட்டேன். உங்க ஏற்பாடு எனக்குத் துளிக்கூடச் சம்மதமில்லை."

"ஆஹ்ஹாங்! அவ்வளவு தூரத்துக்கு வந்துவிட்டாயா நீ! நேற்றையச் சிறுக்கி, என்னை எதிர்த்துப்பேசக்கூடத் துணிச்சல் வந்துடுச்சா! என் தீர்மானத்தை மாற்ற ஈசுவரனாலும் முடியாது! பார்த்துடறேன் எப்படிச் சம்மதிக்காமல் போகிறேன்னு!" என்று கர்ஜித்தாள் கண்ணம்மாள்.

சிங்காரியும் விடவில்லை. தலைக்கு மேல் போகிற வெள்ளம், சாண் போனால் என்ன, முழம் போனால் என்ன என்று தைரியமாகவே பதிலுக்குப் பதில் கடகடப் பேசி விட்டாள்.

மகளது துணிவைக் கண்ட புலவருக்கும் தைரியம் பிறந்து விட்டது.

"இதோ பார்! என் மகளைக் கண்ட கழுதைக்கும் விலை கூறக் கடைத் தெரு கத்தரிக்காய் என்று நினைத்துக் கொண்டாயா! அவளை யாருக்குக் கட்டிக் கொடுக்கிறதென்று எனக்குத் தெரியும்! நான் அவளுக்குப் புருஷன் பார்த்து வைத்தாகி விட்டது!" என்று ஆவேசமாக இரைந்தார் அவர்.

அவ்வளவுதான்; எரிகிற நெருப்பில் எண்ணெயை ஊற்றியது போலாகி விட்டது. கண்ணம்மாள் எரிமலை போல் நெருப்பைக் கக்கலானாள்!

"ஹாம்! புருஷன் தேடுகிற மூகரையைப் பாரு! காலணா சம்பாதிக்கக் கையாலாகவில்லை. உங்க அதிகாரம் கொடி கட்டிப் பறக்குதோ? ஏதேது? அப்பனுக்கும் பெண்ணுக்கும் வரவர வாய் துளுத்துப் போச்சு! இந்த வீட்டிலே என்னுடைய இஷ்டப்படித்தான் நடக்க முடியும்!"

"உன் இஷ்டமென்ன உன் இஷ்டம்! அவள் என் மகள்! அவளுடைய கல்யாண விஷயத்தில் தலையிடுவதற்கு உனக்கு எந்தவிதமான உரிமையும் இல்லை!"

"என்ன! எனக்கு உரிமையில்லையா? அப்படியானால் இது என் வீடு! என் பேச்சைக் கேட்காதவர்களுக்கு இந்த வீட்டிலே இருக்கவும் உரிமையில்லை."

முத்துப் பிள்ளைக்குத் தம் வாழ்க்கையிலேயே அதுவரையில் ஏற்பட்டு அறியாத கோபம் உண்டாகியது.

"என்னது! உன் வீடா! உன் அப்பன் வீட்டிலிருந்து சீதனம் கொண்டு வந்தியோ! இன்னொருதரம் சொல்லு!" என்று கையை ஓங்கிக் கொண்டு கண்ணம்மாளை நோக்கித் தடுமாறிக் கொண்டே இரண்டடி எடுத்து வைத்தார். அடுத்த விநாடி அவரது தலை கிர்ரென்று சுற்றியது. அந்த வீடும் அங்கிருந்த பொருள்களும் தட்டாமாலை யாடுவது போல் இருந்தன. தள்ளாடிக் கீழே விழுந்து விட்டார் அவர்.

"அப்பா! அப்பா!" என்று தீனமாகக் கதறிய வண்ணம் ஓடிப் போய் அவரைத் தூக்க முயன்றாள் சிங்காரி. (தொடரும்)



வழிகளால் நரையை
ஒழிக்கலாம்...
'சிரசாஸனம்' ஒழுங்காகச் செய்துவந்தால், நரைமயிர் நாளடைவில் கருப்பாக மாறும் எனச் சொல்லப் படுகிறது. ஆனால் அதைப் பழக, ஓய்வு நேரமும், மன நிம்மதியும் அவசியம்.
தற்காலத்தில் "லோமா"வைத் தவறாமல் உபயோகிப்பதுவே, நரையை ஒழிக்க நிச்சயமானதும், பத்திரமானதும், சுலபமானதுமான வழியாகும்.
"லோமா" இப்பொழுது திருட இயலாத மூடியுள்ள பிரத்தியேகமாகத் தயாரித்த பாட்டிலில் வழங்கப்படுகிறது.
லோமா
ஸோல் ஏஜெண்டுகள் : எம். எம். கம்பாட்வாலா, ஆமதாபாத்-1
ஏஜெண்டுகள் : வி. நரோட்டம் அண்ட் கோ., பம்பாய்-2 போன்: 30575
சென்னை ஏஜண்டுகள் : ஜே பாலபாய் அண்டு கம்பெனி 260. எஸ்பிளனேட், மதராஸ்-1
இலங்கை ஏஜண்டுகள் : சிர்குல் கதிர் & கோ., 41&43, இரண்டாம் குறுக்குத் தெரு, கொழும்பு-11

நரஸுஸ் காபி

அருந்தி அதன்

பிரத்யேகமான ருசியை

அனுபவியுங்கள்



நரஸுஸ் மான்யுபாக்சரிங்
கோ. பிரைவேட் லிட்.,
சேலம் & சென்னை

ப்யூரிடி பார்லி கொடுக்கப்படும், பாலூட்டும் தாய்மார்கள் மேன்மேலும் அதிகரிப்பது ஏன்?

ஏனெனில், ப்யூரிடி பார்லி



1. சரியான போஷாக்கை அளித்து, தாய்ப்பாலை அதிகம் பெருக்க உதவுகிறது.
2. சுத்தமாக அரைக்கப்பட்டு நவீன விஞ்ஞான முறைப்படி தயார் செய்யப்படுகிறது. அதனுக் அசல் உயர்ந்த ரக தானியத்தின், புஷ்டி தரும் சிறந்தசத்தைக் காப்பாற்றுகிறது.
3. காற்று உள்ளே புகாவண்ணம், சுகாதார முறைப்படி, டின்களில் அடைக்கப்படுவதால், சுத்தமாகவும், புதியதாகவும், பத்திரமாகவும் இருக்கிறது.

ப்யூரிடி

இந்தியாவில் மிக அதிக அளவில்
விற்பனையாகும் பார்லி

இலவசம்

'ஒவ்வொரு தாய்மார்களுக்கும் தெரிய வேண்டியது' என்ற புத்தகத்தை இலவசமாகப் பெற அட்கின்ஸன் (ஸை) லிமிடெட் (இங்கிலாந்தில் ஸ்தாபிக்கப்பட்டது) இலாகா F. B. P 1. தபால் பெட்டி நெ. 9009 கல்கத்தா-16 என்ற விலாசத்திற்கு எழுதவும்.

நாட்டு வைத்தியம்

ஸ்ரீஹரி

45. வெளவால் வாதம்

ஆமவாதத்தின் இனத்தைச் சேர்ந்தது கிருத்ரஸியென்னும் ஒருவகை வாத ரோகம். இதை மேனாட்டு வைத்தியம் பயின்றோர் 'ஸயாடிகா' என்பர்.

''அப்பாஜியின் மகளாய்ப் பிறந்து குப்பாஜியின் மருமகளாய்ப் புகுந்த எனக்கு வைத்தவம் என்றால் தெரியாதா?'' என்ற திருச்சமூத்தின் கூட்டத்தைச் சேர்ந்தவர், இதை 'ஸியடீகா' என்றும் அழைத்து, தமக்கு வைத்திய சாஸ்திரத்தில் இருக்கும் அபூர்வஞானத்தைத் தெரிவித்த மேதையைத் தாமே இவ்விதம் மெச்சிய விதத்தில் ஒரு அசட்டு இளிப்பையும் பூணுவர். என்னைக் கேட்டால் இந்தக் கிருத்ரஸியை ஒரு 'வெளவால்' என்றுதான் சொல்லுவேன். இதை மிருகமென்றோ பறவை என்றோ தீர்மானிக்கமுடியுமா? அவ்விதந்தான் இந்த கிருத்ரஸியை — ஆமவாதமென்று நிச்சயித்து உஷ்ண ஸ்நிக்தமான சிகிச்சையும் செய்ய முடியாது. ரத்தவாதத்தின் இனத்தைச் சேர்ந்ததென்று நிச்சயித்து சீதஸ்நிக்தமான சிகிச்சையும் செய்ய முடியாது. சில சமயம் இதைப் போலவும், சில சமயம் அதைப் போலவும் இருக்கும். ஒரு நாள் சீத சிகிச்சையினால் சிறிது குணம் பெற்றதுபோல் தோன்றும். மறுநாள் அதனாலேயே அதிகமாகிவிட்டது போல் தோன்றும். உஷ்ண சிகிச்சையினால் குணம் தெரிவதுபோல் தோன்றும். அதையே தொடர்ந்து செய்தோமானால் நோயின் கொடுமை அதிகமாகிவிட்டதாகத் தோன்றும். இவ்வியல்புள்ள கிருத்ரஸிக்குச் சிகிச்சை செய்வது எப்படி?

இப்படி ஒரு சமயம் உஷ்ண ஸ்நிக்தமான சிகிச்சையால் சமனம் பெறுவதும் மற்றொரு சமயம் சீதஸ்நிக்த சிகிச்சையால் சமனம் பெறுவதுமான விசித்திர இயல்பு பெற்ற கிருத்ரஸியை வெளவால் வாதம் என்பதைத் தவிர வேறு என்ன பெயரிட்டு அழைப்பது?

கிருத்ரஸி என்றால் என்ன? நோயின் குறிகள், நோய்க்குக் காரணம் முதலியவைகளைப் பற்றி ஒன்றுமே சொல்லாமல் என்ன என்னவோ சொல்லிக் கொண்டே போகிறீர்களே என்கிறீர்களா?

நல்லது. இதோ சொல்லி விடுகிறேன். மற்றைய வாத ரோகங்களுக்குக் காரணம் எதுவோ, அதுவேதான் இந்த வெளவால் வாதத்திற்கும். தண்மை கொள்ளல், இரவில் கண் விழித்தல், வறட்சி மிக்க ஆகாரங்களைப் புசித்தல், அளவு கடந்த சோர்வு ஏற்படும் வரையில் தேக உழைப்பு-எண்ணெய்க்குளியே செய்யாமலிருத்தல் என்பது போன்றவைகளெல்லாம் பொதுவாக வாத ரோகங்களுக்குக் காரணம்.

''மத்யானம் கொஞ்ச நேரம் விமண்டு திண்ணையில் படுத்தேன். எனக்கும் தெரியாமல் சிறிது நேரம் கண்ணயர்ந்து விட்டேன். ஒரு பத்து நிமிஷம்-கால் மணி கூட இராது. அதற்குள் கண் விழிப்பு வந்து விட்டது. எழுந்தால் எழுந்திருக்க முடியவில்லை. உடம்பெல்லாம் ஒரு வலி; கனம். அது கொஞ்சம் கொஞ்சமாக இந்தக் காலில் அதிகமாயிற்று. வரவர...'' என்று இப்படி ஒரு புராணத்தைச் சொல்லிக் கொண்டு வருவோரையெல்லாம் எல்லோரும் கண்டிருப்பீர்கள்.

அர்த்திதம்: ''ரயிலில் நேற்று ராத்திரி ஜன்னலண்டை தலை வைத்துக் கொண்டு தூங்கி விட்டேன். தூக்கம் ஏது சங்கரீ? ஒரு மணிக்குப் பிறகுதான் சிறிது சாய்ந்தபடியே கண்ணயர்ந் திருப்பேன்! ஐந்தரை மணிக்குக் கண் விழிப்பு ஏற்பட்டது. உடனே தலை மரத்துப்போனது போல் ஒரு உணர்ச்சி, முகத்தில் ஒரு பக்கமெல்லாம் மரத்துப்போன மாதிரி உணர்ச்சி. நாக்கைச் சரிவரப் புரட்டிப் பேச முடியவில்லை. வாய் ஒரு பக்கம் கோணிக் கொண்டுபோகிறது. பேசினால், சிரித்தால் இந்தக் கோணல் அதிகமாகிறது. ஒரு கண் சரியாக மூடவரவில்லை. அந்தக் கண்ணிலிருந்து நீர் அருவியாக ஒழுகுகிறது. சாப்பிடும் போது மென்று கொண்டே இருக்கும் உணவு ஒரு ஓரமாக நமக்குத் தெரியாமலே வெளியே நழுவி விடுகிறது'' என்று இப்படி ஒரு கதையைச் சொல்லிக் கொண்டு வருவார். 'அர்த்திதம்' என்னும் 'முகவாயு' ரோகமுள்ளவர். இது எதனால்? கடுமையான தணுப்புக் காற்றை அதிகம் ஏற்றதினால் வந்த வினை.

இவ்விதத் தகவலிலிருந்தெல்லாம் வாத ரோகங்களுக்கெல்லாம் பொதுவான சில காரணங்களை அறியலாம் அல்லவா? இந்த 'வெளவால் வாத'த்துக்கும் அவ்விதமேதான்.

முதுகுப்புறத்தில் இடுப்பின் பக்கத்தில் கச்சம் சொருகுமிடத்துக்குச் சற்று வலப்புறத்திலோ இடப்புறத்திலோ தொடங்கிச் சகிக்க முடியாத ஒரு வேதனை ஏற்ப



டும். இது பின்புறமாகவே பிருஷ்டத்தின் மேலும் பிறகு தொடையின் பின்புறமாகவும் நேராக இறங்கி முட்டிக்காலின் பின்புறம்வரையிலும் வியாபித்திருக்கும். 'சையாடிக்' நரம்பின் கோளாறினால் அப்பிரதேசத்தில் ஏற்படும் இந்த நோவு சகிக்க முடியாததாக இருக்கும்.

"தேள் கொட்டினாற் போல்" என்று இதன் நோவை வர்ணிப்பார் நோயாளி. வலி மிகவும் அதிகமாக இருக்கும் காரணத்தால் சதா "உம்..உம்" என்று முனகிக் கொண்டே இருப்போரும், அழுது கொண்டே இருப்போரும் கூட உண்டு. அவ்வளவு தீவிரமான வலி இதில் ஏற்படும்.

காலக்கிரமத்தில் வலி கணுக்கால் வரையிலும் பரவியது போலவும் தோன்றும்.

உள்ளுக்குச் சாப்பிட ஆமவாதத்தில் சொன்ன கஷாயங்களும் வாரத்துக்கொருமுறை அல்லது பத்து நாளைக்கொருதரம் ஹிங்குத்ரி சூர்ணம் அல்லது தாத்ரீ தைலத்தைக் குடித்துக் குடலைச் சுத்தம் செய்து கொள்வதும் இதில் நல்லது.

மேலுக்குப் பூச ஆமவாதத்தின் கீழ், பத்தாவதாகச் சொன்ன ஊமத்தை இலையின் ரசத்தில் செய்த தைலம் நல்லது.

சவிஸார தைலம்: 10 பலம் ஓமத்தைச் சிறிது இடித்துத் தூளாக்கி 4 படி ஜலம் விட்டு 1 படி கஷாயமாகக் காய்ச்சிக் கொண்டு மருந்தைக் கசக்கிப் பிழிந்து களைந்து விட்டுக் கஷாயத்தை வடிகட்டிக் கொள்ளவும். இத்துடன் அரை வீசை தேங்காயெண்ணெய் அல்லது நல்லெண்ணெய் கூட்டி அடுப்பில் ஏற்றிக் காய்ச்சவும், மிகச் சிறிதளவு கல்கம் (கசண்டு) தானாகவே உண்டாகும். இது பிண்ட தைலத்தின் கல்கத்துக்குச் சொன்ன பாகத்தில் வரும்போது — தைலத்தில் $\frac{1}{4}$ பலம் சூடன்-கற்பூரத்தைப் பொடித்துக் கூட்டி ஒரு பொங்கு வந்ததும் இறக்கி வடிகட்டி வைத்துக்கொள்ளவும். இதுதான் சவிஸார தைலம்; இது பல விதத்தில் உபயோகமாகும். அவ் விவரங்களைச் சந்தர்ப்பம் வரும்போதெல்லாம் தெரிவிக்கிறேன். தேங்காயெண்ணெயில் காய்ச்சிக் கொள்வதுதான் மிகவும் சிறந்தது.

இதைச் சிறிது சூடாக்கி, வலியுள்ள இடங்களில் சதும்பத் தடவி-கோதுமைத் தவிட்டின் கிழியினால் தாபஸ்வேதம் செய்தல் அவசியம். இதனால் உடனே வலி குறையும். அவசியமானால் இந்த தாபஸ்வேதத்தை ஒரு தினத்தில் 3-4 முறையும் செய்யலாம். இடைவேளைகளில் இத் தைலத்தைத் தடவி ஊறவிட்டிருப்பதும் நல்லது.

தாபஸ்வேதமாவது:—ஒரு சிறிய துணியில் கோதுமைத் தவிட்டை மூட்டையாகக் கட்டிக் கொள்ள வேணும். மூட்டை சிறியதொரு தேங்காய் அளவு இருக்கலாம். கட்டும்போதே துணியின் ஓரங்களைச் சேர்த்து — தேங்காய்க்குக் குடுமி இருப்பது போல் கட்டிக் கொண்டால்—சூடுள்ள கிழியைப் பிடித்தெடுக்கத் தோதாக இருக்கும்.

சிறியதொரு இரும்புச் சட்டியில் கொஞ்சம் சவிஸார தைலத்தை எடுத்துக் கொண்டு கரிக்கும்மட்டியில் சூடாக்கவும். சூடான எண்ணெயில் மேற்சொன்ன கிழியை ஒத்திச் சூடாக்கி—அதிகப்படி எண்ணெயை வாணலியின் ஓரத்தில் ஒத்திக் களைந்து, சூடுள்ள கிழியை நம் கையில் பதம் பார்த்துப் பார்த்து, பிறகு வலியுள்ள இடங்களின்மேல் ஒத்தி ஒத்திக் காப்பணங் கொடுக்கும் முறையைத் தாபஸ் வேதம் என்பர். இது இந்த வௌவால் வாதத்தில் மட்டுமின்றி ஆமவாதத்திலும் உடனே சமனம் தரும் ஒரு சிறந்த உபாயமாகும்.

அவசியமானால் ரத்தவாதத்தில் சொன்ன தைலத்தையும் இடையிடையே சில நாட்கள் உபயோகிக்கலாம்.

"ஆம், ஓவல்டின் எப்பொழுதும் நல்லது!"



வருஷக்கணக்கான அநுபவத்தினால் 'ஓவல்டின்' எவ்வளவு நல்லது என்பது வயது முதிர்ந்த பெண்களுக்குத் தெரியும். அவளுடைய சின்னஞ்சிறு பேரனுக்கும் கூட அது நல்லதாக விளங்குகிறது. ஏனெனில் 'ஓவல்டின்'னின் தரம் ஒருபோதும் வித்தியாசப் படுவதில்லை. அதன் ஊட்டமளிக்கும் தன்மை மற்றும் வைடமின் பொருள்கள் எப்பொழுதும் அதே உன்னத நிலையில் இருந்து வருகிறது.

'ஓவல்டின்' பண்ணைகளில் அதில் உபயோகிக்கப்பட்டிருக்கும் சரக்குகளனைத்திற்கும் ஓர் நிரந்தர 'அளவை' ஏற்படுத்தியுள்ளனர். 'ஓவல்டின்' லாபரட்டரிகளில் அதன் தயாரிப்பின் பிரதியொரு கட்டத்திலும் கடும் சோதனைகள் மேற்கொள்ளப் படுகின்றன. 'ஓவல்டின்' தான் வேண்டுமென்று கேளுங்கள். உலகெங்கிலும் வியாபித்துள்ள அதன் தரத்தின் கியாதி பிரதியொரு டின்னிற்கும் பக்கபலமாக விளங்குகிறது.

பிரதியொரு டின்னும் ஆரோக்கிய மயமான

ஓவல்டின்



வினியோகஸ்தர்கள் :

கிறாம்ஸ் டிரேடிங் கோ. (இந்தியா) பிரைவேட் லிட்.

IV. 497

தமிழ் கூறும் நல்லுலகம்

நாக்பூர் தென் இந்திய மாதர் சங்கம் இவ் வருடமும் தீபாவளி அமாவாசையன்று ஸ்ரீமதி சுப்புலட்சுமி ராமய்யா வீட்டில்பகவம் வைத்துக் கொண்டாட ஜனத்தரை விழாவைத் தொடங்கியது. குழந்தைகள் இரு பகுதிகளாகப் பிரிந்து, தென்னிந்திய மக்கள் இல்லங்களுக்குச்சென்றுகோலாட்டம் அடித்தார்கள்.

கடைசி தினம் மாலை பகவத்தை ஊர்வலமாக எடுத்துச் சென்றார்கள். ஸ்ரீமதி விக்டர் என்ற அமெரிக்கர் அன்று தலைமை வகித்துக் குழந்தைகளுக்குப் பரிசுகள் வழங்கினார். அந்த அம்மையார் தமிழிலேயே பேசியதுகுறிப்பிடத்தக்கது. அவர் இருபத்தைந்து வருடங்கள் மதுரையில் பெண்களுக்காகச் சேவை செய்தவர். விழாவின் ஆரம்பதினத்தன்றும், கடைசி தினத்தன்றும் தென்னிந்திய மாதர்கள், குழந்தைகளுடன் திரளாக வந்து, விழாவைச் சிறப்பித்தனர்.

★

இருநூறுக்கு மேற்பட்ட தமிழ் மாணவர்கள் சர்வகலாசாலையின் வரலாற்றில் முதன் முறையாகத் தங்களுடைய சமூக கலாசாரத் தேவைகளைப் பூர்த்தி செய்யும் நோக்கத்துடன் அமைத்த தில்லி சர்வகலாசாலை தமிழ் மன்றத்தை டாக்டர் பி. சுப்பராயன் எம். பி. அவர்கள் 6-12-57 அன்று துவக்கி வைத்தார்கள். சங்கத்தின் தலைவர் ஸ்ரீ எஸ். ஒ. இராமகிருஷ்ணன் அவர்கள் தலைமை வகித்து டாக்டர் அவர்களை வரவேற்றுப் பேசினார். மன்றத்தின் போஷகர் டாக்டர் வி. கே. ஆர். வி. ராவ் அவர்கள் சர்வகலாசாலையின் உப அத்யக்ஷர் என்ற முறையில் ஆசிச் செய்தி அனுப்பியிருந்தார். தமது செய்தியில் தமிழ் மாணவர்களது இந்த முயற்சியைப் பெரிதும் பாராட்டித் தமிழரல்லாத பிற மாணவரிடத்தும் தமிழ் இலக்கியப் பெருமையைப் பரப்புமாறு கோரியிருந்தார்.

★

சீரூர் தமிழ் எழுத்தாளர் சங்கத்தின் சார்பில் 15-12-57 அன்று பேராசிரியர் 'கல்கி' அவர்கள் நினைவு விழா, செட்டிப் பாளையம் திரு நடராஜன் அவர்கள் தலைமையில் மிகச் சிறப்பாகக் கொண்டாடப்பட்டது;

விழாவுக்குத் தலைவர் ராஜாஜி, டி.கே. ஷண்முகம், மதுரை எழுத்தாளர் சங்கம், மற்றும் பலரிடமிருந்தும் வந்திருந்த வாழ்த்துச் செய்திகளை இரா. பாண்டுரங்கம் வாசித்தார்;

கூட்டத்துக்குப் பெரும் திரளாக வந்திருந்த தமிழ்ப் பெருமக்களைக் கே. ஆர். பசுபதி அவர்கள் வரவேற்றார்.

தமிழ் எழுத்தாளர் சங்கத்தின் சார்பில், அமரர் 'கல்கி' அவர்களுக்குச் செயலாளர் திரு சி. கோவிந்தராஜன் வணக்கம் செலுத்தினார்;

தவத்திரு குன்றக்குடி அடிகளார் தமிழுக்ும்-தமிழ் அன்னைக்கும் 'கல்கி' அவர்கள் செய்த தொண்டினைப் பாராட்டினார்.

செயலாளர் திரு சி. கோவிந்தராஜன் நன்றி கூற விழா இனிது நிறைவேறியது.

சென்ற மாதம் கொழும்பு பாரதி இளைஞர் சங்க ஆதரவில் மகாகவி பாரதியாரின் 76-வது ஜயந்தி விழா கொழும்பு விவேகானந்த சபை மண்டபத்தில் சிறப்பாகக் கொண்டாடப்பட்டது.

முதல் நாள் விழாவை யோகிராஜ் சுவாமி சச்சிதானந்தர் அவர்கள் துவக்கி வைத்தார். சர் கந்தையா வைத்தியநாதன் அவர்கள் தலைமை வகித்து, சுவாமி சிவானந்த சரஸ்வதி அவர்களின் திருவுருவப் படத்தைத் திரை நீக்கம் செய்து வைத்தார்.

தருமபுர ஆதீன பல்கலைக் கல்லூரித் தமிழ்ப் பேராசிரியர் சொ. சிங்காரவேலனார், மதுரைத் தமிழ் எழுத்தாளர் சங்கச் செயலாளர் திரு நா. பார்த்தசாரதி ஆகியவர்கள் மூன்று நாட்களிலும் விரிவுரை ஆற்றினார்கள். இரண்டாம் நாள் விழாவில் அன்பர் பூபதிதாஸர் வாழ்த்துரை நல்கினார். சங்கத்தலைவர் நயமணி திரு கவிதாசனார் தலைமை வகித்தார். திரு டி. பி. இருதயராக, திரு ச. சுப்பையா ஆகியவர்கள் பேசினார்கள். முத்தமிழ் மணி ஸ்ரீ சி.எஸ். எஸ். மணி பாகவதர் அவர்கள் பாரதியார் சரித்திரத்தைக் கதா காலட்சேபமாகச் செய்வித்தார். கப்பலோட்டிய தமிழன் வ. உ. சிதம்பரனார் திருவுருவப் படத்தைப் பண்டிதர் நா. பார்த்தசாரதி திறந்து வைத்தார்.

மூன்றாம் நாள் விழாவுக்கு வித்துவான் கா. பொ. இரத்தினம் அவர்கள் தலைமை வகித்தார். திரு இ. செல்லையா, ஜனாப் எஸ். எம். கமால்தீன், திருமதி பாலம் லட்சுமணன் ஆகியவர்கள் பேசினார்கள்; பேராசிரியர் கல்கி அவர்களின் திருவுருவப் படத்தை வீரகேசரி ஆசிரியர் திரு கே. பி. ஹரன் அவர்கள் திறந்து வைத்தார். தமிழகத்திலும், ஈழ நாட்டிலுமுள்ள பிரமுகர்களிடமிருந்து வந்திருந்த வாழ்த்துச் செய்திகளைச் செயலாளர் திரு அ. பட்டையா வாசித்தார். தமிழ்த்தாய் வாழ்த்துடன் விழா இனிது முடிவடைந்தது.

★

இந்நகர் வ. உ. சி நிறுவனத்திலுள்ள முப்பது பேரடங்கிய மாணவர் குழு ஒன்று திரு ஆர். கண்ணன், திரு நாராயணசாமி அவர்கள் தலைமையில் கோவையை யடுத்த மருதமலையில் சமூக சேவை முகாம் போட்டிருந்தது. இக்குழு குக்கிராமத்தில் டிசம்பர் 17, 18, 19 தேதிகளில் முகாமிட்டு அனேக சமூக வேலைகள் செய்தது. கிராமத்தில் வாழும் மக்களின் சுற்றுப்புறங்கள் மாணவர்களால் சுத்தமாக்கப்பட்டு மலேரியா தடுப்புக்காகத் தேங்கிய தண்ணீரில் மருந்திட்டனர்.

மாணவர்கள் பல குழுக்களாகப் பிரிக்கப்பட்டுக் கிராம மக்களுக்கு எப்படிச் சுற்றுப்புறங்களைச் சுத்தமாக வைத்திருக்க வேண்டும் என்பது பற்றி, செய் முறையின் மூலம் செய்து காட்டினர். அன்றிரவு கூட்டத்துக்குக் கிராம மக்கள் அனைவரும் வந்திருந்தனர்.

மின்னலில் தோன்றிய அடிச்சுவடுகள்

"பேனாவைத் தொட்டிலிட்டுத் தாலாட்டுகிறீர்களா? உடனே எழுந்து உட்கார்ந்து சில கதைகள் எழுதியனுப்புங்கள்" என்று பத்திரிகாசிரியர் அன்பு ததும்பக் கட்டளையிட்டு எனக்கு ஒரு கடிதம் எழுதியிருந்தார். தான்தோன்றியான இந்த உலகத்திலே கதை எழுதவாவது! அகஸ்மாத்தாக ஏற்படும் சில சம்பவங்கள் நம்முடைய கற்பனையை யெல்லாம் தூக்கி உடைப்பிலே கொண்டு போடுகிறவைகளாக இருக்கின்றன. பார்க்கப் போனால் எல்லாமே அகஸ்மாத்தாக ஏற்படுகிறவைகள்தாம். இந்த உலகம் இருக்கிறதே, இது அகஸ்மாத்தாகச் சூரியனிலிருந்து தெறித்துக் குளிர்ந்து போன ஒரு பொறி என்று விஞ்ஞானிகள் சொல்கிறார்கள். பசு, பட்சி, மரம், செடி, கொடிகள் எல்லாம் பூமியில் அகஸ்மாத்தாக உண்டானவை. 'ஆக்ஸிடெண்டல்' என்ற ஒரு பதத்தைத் திருப்பித் திருப்பிக் கூறுவதைத் தவிர, பரிணாம வாதத்துக்கு விளக்கம் கூற டார்வின் கூடத் திணறிப் போகிறார். ஆகவே அகஸ்மாத்தாக எனக்கு நேர்ந்த சில அனுபவங்களைக் கோவையாகக் கதை வடிவத்திலே எழுதுகிறேன். சிலந்திக் கூட்டில் ஈ பறந்து வந்து மாட்டிக் கொள்ளுவது போல் இந்தக் கதை என் பேனா முனையில் அகப்பட்டுக்கொண்டு விட்டது.

★

பஸ்ஸிலே பிரயாணம் செய்கிறவர்களுக்கு டிரைவருக்குப் பக்கத்திலே முன் சீட்டில் உட்கார்ந்து கொள்வது ஒரு பெருமையாயிருக்கும். இத்தகைய உன்னத ஸ்தானம் அன்று சீர்காழியிலிருந்து திருமுல்லைவாயில் போகிற பஸ்ஸில் கிடைத்தது. அடிக்கடி நான் அந்த ரஸ்தா பஸ்களில் பிரயாணம் செய்கிறவனானதால் டிரைவர்கள், கண்டக்டர்கள் எல்லாருமே எனக்கு அறிமுகமானவர்கள். மாருதி ஸெளண்ட் ஸர்வீஸில் ஒரு ரேடியோவை ரிப்பேர் செய்து கொண்டு வந்தேன்; ரேடியோ என் முதலாளியினுடையது.



"தம்பு! பூவனம்பேட்டைக்கு ஒரு டிக்கட் போடு!" என்று சொல்லி விட்டுக் கண்டக்டரிடம் ஓர் இரண்டு ரூபாய் நோட்டை நீட்டினேன். தம்பு அதை வாங்கிக் கொண்டு,



ஆனை. ஸ்ரீ. குஞ்சிதபாதம்

"ரேடியோ பெட்டிக்கு ஆறணா லக்கேஜ் போட்டுக் கொள்கிறேன்" என்றான்.

"அட, சரிதானப்பா! நாலணா நீ எடுத்துக் கொள்; லக்கேஜ் எல்லாம் போடாதே!"

கண்டக்டரிடம் நாலணா சமயம் வந்த போதெல்லாம் கொடுத்து வைத்தாலும் கூட்டத்திலே என் தலையைக் கண்டதும் முதல் டிக்கெட் எனக்குக் கொடுத்துக் கொண்டிருப்பான். பஸ் கம்பெனிக்கு லக்கேஜ் கொடுப்பதிலே என்ன லாபம்?

பூவனம் பேட்டையில் இறங்கி மல்லிகைச் சேரிக்கு மண்ரோட்டில் நான் போக வேண்டும்; பூவனம் பேட்டையில் பண்ணை வண்டி வந்திருக்கும். நான் யார் என்று சொல்ல மறந்து விட்டேனே! மல்லிகைச் சேரி மிராசுதார் காமேசுவர அய்யர் பண்ணையில் நான் தான் காரியஸ்தர். 'ஏஜண்டு ஐயா' என்று கௌரவமாகக் குடிபடைகள் சொல்வார்கள். கதை எழுதியே காலட்சேபம் செய்ய முடியுமா? பொழுது போக்க எழுதுகிறது. மேற் செலவுக்கு எழுதுவதிலேயும் வரும். பண்ணையில் மாதம் நூத்து கலம் நெல்லும் முப்பது ரூபாய் சம்பளமும் கொடுத்தார்கள். அறுவடை காலத்தில் அப்படியும் இப்படியும் கொஞ்சம் பார்த்துக் கொள்ளுகிறதுதான்; இல்லை யென்று சொல்லவில்லை. ஈசுவரன் ஏதோ ஒரு நிறைவாகப் படியளந்து கொண்டு தான் இருக்கிறான்.

பஸ் ஸ்டாண்டிலிருந்து பஸ் கிளம்ப இன்னும் அரைமணியாகும். உலகம் போகிற போக்கை என் முன்சீட் ஆசனத்தில் ஒய்யாரமாகச் சாய்ந்து கொண்டே பார்த்தேன். ஓர் இளம் பெண் ஒரு சின்ன டிரங்குப் பெட்டியை இடுப்பில் சுமந்து கொண்டு நின்றாள். அவளைச் சுற்றி மாட்டு வண்டிக்காரர்கள் நின்று பேரம் பேசிக் கொண்டிருந்தார்கள்.

மாலைமணி நாலிருக்கும். புட்டிப் பால் ஜீரணிக்காமல், சிமெண்டுத் தரையில் குழந்தை கக்கியது போல வானத்தில் திட்டுத் திட்டாக வெண் மேகங்கள் சிதறியிருந்தன: எதிரிலிருந்த வெற்றிலைப் பாக்குக் கடையில் "வெண்ணிலா" பத்திரிகை தோரணமாகத் தொங்கிக் கொண்டிருப்பதைக் கண்டேன். கொஞ்சம் சபலம் தட்டத்தான் செய்தது: என்னுடைய கதை இந்த இதழில் வந்திருக்குமோ? தபாலில் வருவதாக இருந்தால் மறு நாள்தானே எனக்குப் பிரதி கிடைக்கும்? இதற்கு ஒரு நாலணாக் காசு கொடுத்தால் போகிறது. எல்லாவற்றையும் சேர்த்து எழுத முதலாளி கணக்கு இருக்கவே இருக்கிறது. தோண்டி தோண்டி அப்படி யொன்றும் கணக்குக் கேட்கிறவரும் அல்ல, நம் முதலாளி. பஸ்ஸிலிருந்து கீழே இறங்கிக் கடைக்குப் போனேன்:

"வாங்கோ ஸார் வாங்கோ! ஒரு லிம்டோ சாப்பிடுங்கோ!" என்று சொல்லிப் பானக் குப்பியைத் திறந்து கொடுத்தான் அந்தத் தாம்பூலம் விற்கிற ஸ்தாபனத்தின் உரிமையாளன், என்னுடைய பதிலை எதிர்பாராமலேயே. நான் பானத்தைப் பருகும்போது, "கடவுளின் ராஜிநாமா என்ற கதை பிரமாதம் ஸார்! 'வெண்ணிலா' விளம்பரத் தாளிலே கூடப் போட்டிருக்கிறார்கள் ஸார், கொட்டை எழுத்திலே! மேலட்டைகூட உங்கள் கதைக்குத்தான் ஸார். இருந்தாலும் 'தாலி கட்டின கலி' என்ற கதைதான் உங்கள் 'மாஸ்டர் பீஸ்' என்பேன்" என்றான்.

நான் வெற்றிலையில் சுண்ணாம்பை லாகவமாகத் தடவிக் கொண்டே அவனுடைய

பாராட்டை ரசித்தேன்: பத்திரிகையையும் வாங்கிக் கொண்டு பஸ்ஸுக்குத் திரும்பினேன். அந்த டிரங்குப் பெட்டிப் பெண் இன்னும் தன்னுடைய பேரத்தை முடிக்கவில்லை. வண்டிக்காரர்கள் அல்லோலகல்லோலம் செய்து கொண்டிருந்தார்கள்.

"மாதுளம் பேட்டைக்கு ஒன்னரை ரூபாய்க்கு வாரியா என்று கேக்கறீங்களே, ஏம்மா! நல்லா யிருக்குங்களா?"

"மைல் ஏழு இருக்கு. ஏழு! ஏழரை மூணரை கொடுக்காட்டியும் மூணு ரூபாயா வது வேணும்!"

"ஒரே பேச்சு, நீங்க இரண்டரை ரூபாய் தருகிறீங்களா!"

"இரண்டு ரூபாய் கொடம்மா! கொடுங்க பெட்டியை இப்படி!"

"நீ என்னடா பெரிய டபேதார்மாதிரி நடுவிலே வந்து குதிச்சே? நான் பேசிக்கிட்டிருப்பதற்குள்ளாரே நீ எவன்டா அவன்?"

"நீ மகா பூதர்!"

"உ...ம்...ம்!"

"உ...ர்...ர்!"

பரட்டைத் தலையும் குரூர முகமும் உள்ள காட்டுமிராண்டிகளின் நடுவிலே இன்னது செய்வது என்று தெரியாமல் விழித்துக் கொண்டிருந்த அந்த இளம் பெண்ணைக் கண்டு இரக்கப்பட்டேன்.

"எங்கே அம்மா போக வேணும்?" என்றேன், அந்தப் பெண்ணைப் பார்த்து. பால் வடியும் முகம் என்பார்களே அப்படியிருந்தது. பச்சைக் கிளி என்றால் பச்சைக்கிளி. அவ்வளவு அழகு. பயத்தினால் மிரள மிரள விழித்தாள் அவள்.

"மாதுளம் பேட்டைக்குப் போகவேணும்" என்றாள் அந்தப் பெண்.

"இந்த நேரத்துக்கு வண்டியிலே போவதா? ஏழு மைல் இருக்கிறதே அம்மா? இருட்டி விடும். பஸ்ஸிலே போய் வாழைப்பாடியில் இறங்கினால் இரண்டுமைல் மாதுளம்பேட்டை. அங்கு வண்டி கிடைக்காது. ஒற்றையடிப் பாதையிலே போக வேண்டும்."

"என்ன செய்யலாம், சொல்லுங்கள்" என்றாள் அந்தப் பெண்.

எனக்கு என்ன செய்வது என்று சொல்லத் தெரியவில்லை. அதற்குள் பஸ்காரன் 'பாம், பாம்' என்று ஹாரன் அடிக்கத் தலைப் பட்டுவிட்டான்.

"வா, அம்மா, என் கூட" என்றேன்: அந்தப் பெண் வந்தாள். "ஏறிக்கொள் வண்டியில்" என்றேன். ஏறிக் கொண்டாள். "கண்டக்டர் வாழைப்பாடி ஒரு டிக்கட்" என்றேன். 'ரைட்' என்றான் அவன். பஸ் புறப்பட்டது. பஸ்ஸில் கூட்டமில்லை. போகும் வழியில் இரண்டு பேர் ஏறிக் கொண்டார்கள். வாழைப்பாடி வந்ததும் பஸ்ஸை நிறுத்தச் சொல்லிவிட்டு நானும் அந்தப் பெண்ணும் இறங்கினோம். "தம்பி! பூவனம்பேட்டை காப்பிக் கிளப்பு வாசலில் நம் வண்டி கிடக்கும்; வண்டிக்காரனிடம் ரேடியோவைக் கொடுத்து விட்டு மன்னிச்சேரிக்குத் திரும்பிப்போகச் சொல்லு. நான் அடுத்த பஸ்ஸில் வருகிறேன்" என்றேன். 'ரைட்' என்றது கண்டக்டரின் குரல். புகையை விட்டுக் கொண்டு பஸ் கிளம்பியது.

நானும் அந்தப் பெண்ணும் டிரங்குப் பெட்டியைச் சுமைதாங்கி மீது வைத்துவிட்டு நின்றோம். மளிகைக் கடையில் கடிகாரம் ஒற்றைமணி அடித்தது. மணி ஆறரை: விளக்கு ஏற்றிவிட்டார்கள். அக்கம் பக்கம் குடிசைகளில், மாலை மயங்கி இருள் வியாபிக்கத் தொடங்கியது.

எனக்கு அந்தப் பெண்ணைப் பார்க்கப் பார்க்கக் கண்றாவியாக இருந்தது: "ஏனம்மா துணை அழைத்துக் கொண்டு வரக் கூடாது? இல்லாவிட்டால் காலை வேளையிலாவது வரக் கூடாதா? இப்படி மாலை வேளையிலே சீர்காழியில் வண்டி பேசிக் கொண்டு நிற்கிறாயே! மாட்டு வண்டியில் வந்து கழுத்தை முறித்து வாய்க்கால் மதகடியில் உன்னை வண்டிக்காரன் செருகியிருந்தால் என்ன செய்கிறது? காதிலே கழுத்திலே நகை அதிகமாக இல்லாவிட்டாலும் இரண்டு மூன்று பவுனாவது தேறாதா? அதைச் சொல்லேன். சரி, வந்தது வந்தாகிவிட்டது. உன்னை வீட்டிலே கொண்டுபோய் விட்டு வருகிறேன்" என்றேன் நான்.

மளிகைக் கடை வாசலில் ஒரு வண்டி அவிழ்த்துப் போட்டுக் கிடந்தது. வைக்கோல் மேல் மாடுகள் அசை போட்டுப் படுத்திருந்தன. விசாரித்தேன். வண்டி வராது என்று ஒரு கிழவன் சொல்லிவிட்டான். பெட்டியைத் தூக்கிவர ஆள் கிடைக்குமா என்று கேட்டுப் பார்த்தேன். வருவதாகக் கிளம்பிய ஒரு பையன் என்னவோ யோசனை செய்துவிட்டுப் பிறகு மறுத்து விட்டான். நல்ல வேளையாக என் கைப் பையில் டார்ச் விளக்கு இருந்தது. 'வெண்ணிலா'வையும் அதிலேதான் வைத்திருந்தேன்.

நான் அந்தப் பெட்டியை எடுத்துக் கொண்டேன்; என் பையை அந்தப் பெண்ணிடம் கொடுத்தேன்: இருவரும் நடந்து சென்றோம்; அந்தப் பெண்ணால் வேகமாக நடக்க முடியவில்லை. இளைப்படைந்து போயிருந்தாள் அவள்.

"குழந்தை! எந்த ஊரிலேயிருந்து வருகிறாய்?" என்று கேட்டேன் அவளை.

"விழுப்புரத்திலிருந்து வருகிறேன் மாமா! என் அத்தை வீட்டுக்காரருக்கு ரயிலில் வேலை. காலை வேளையிலேதான் புறப்பட்டேன். கடலூரில் ஒரு கூட்ஸ் வண்டி தண்டவாளத்தை விட்டு இறங்கிவிட்டதாம். அதனால் நாலரை மணி வண்டி தாமதித்து விட்டது. வாழைப்பாடியிலே இறங்கி எப்படிப் போகிறது என்றுதான் சீர்காழியிலேயே வண்டி பேசிக் கிளம்பினேன். என்னுடைய கஷ்ட காலத்திலும் கொஞ்சம் நல்ல அதிர்ஷ்டம் இருந்தது. பகவான்தான் உங்களை எனக்கு ஒத்தாசையாக அனுப்பியிருக்கிறார்" என்றாள் அவள்.

கோதுமை மாவினால் செய்து வைத்த பொம்மை மாதிரி சில பெண்கள் இருக்கும். வாயைத் திறந்தால் அசடு வழியும். அப்படி இல்லை இந்தப் பெண். அழகாக மட்டும் அவள் இல்லை. சூடிகையாகவும் இருந்தாள்.

"இந்த ஊரில் யார் அம்மா இருக்கிறார்கள் உனக்கு?" என்று கேட்டேன்.

"என் அப்பா இருக்கிறார். சுந்தரராமன் அவர் பெயர். போஸ்ட்மாஸ்டராக இருந்து ஓய்வு பெற்றவர்" என்றாள் அவள்.



REGISTERED USER OF THE TRADE MARK 'SANFORIZED'.

முன்னிருட்டுக் காலம், வானத்தில் நட்சத்திரங்கள் பூத்திருந்தன. தூரத்திலிருந்த புளிய மரத்தின் மீது கோட்டான் கத்திக் கொண்டிருந்தது. மழைத் தண்ணீர் தேங்கியிருந்த குட்டையில் தவளைகள் ஆர்க்கெஸ்ட்ராவாக முழங்கிக் கொண்டிருந்தன.

"இனிமேல் சாலையைச் சுற்றிப்போனால் நேரமாகும். இப்படி ஒற்றையடிப்பாதை வழியே குறுக்கே போய்விடுவோம். விளக்கை ஏற்றியபடியே வா; பாட்டரி ஆகிவிடுமோ என்று சிக்கனம் பார்க்காதே" என்றேன் நான்.

"ஐயனார்கோவில் வழியாகவா போகிறது? பயமாக இருக்கிறதே!" என்றாள் அவள்.

"ஐயனார் ஒன்றும் செய்யமாட்டார். வா!"

"நீங்கள் யார் மாமா? உங்களை நான் தெரிந்துகொள்ளவே இல்லையே?"

"என்னை நீ எதற்காகத் தெரிந்து கொள்ள வேண்டும்? யாரோ பரோபகார சிந்தனை உள்ள ஒரு பைத்தியக்காரன் என்று எண்ணிக் கொள். அவ்வளவு போதும்."

"அப்படிச் சொல்லாதீர்கள் மாமா. நீங்கள் பஸ்ஸில் உட்கார்ந்திருந்தபோதே உங்களை விட்டு வண்டி அமர்த்தச் சொல்லலாம் என்று நினைத்தேன். ஆனால் சங்கோசமாயிருந்தது. சில பேரைப் பார்த்தாலே நல்லவர்களாகத் தோன்றுகிறது. அந்த மீசை வண்டிக்காரனைப் பார்த்தபோதே எனக்குப் பயமாயிருந்தது; உங்கள் பெயர் என்ன?"

"என் பெயர் நரிமாசலபதி. அடுத்த ஊர் தான்; மங்கிலைக்சேரி எனக்கு; உன்னுடைய பெயர் என்ன?"

"என் பெயரா? சகுந்தலா!"

"நாகரிகமான பெயர் வைத்துக் கொண்டிருக்கிறாயே பொழியக் காலிலே செருப்புப் போட்டுக் கொள்ள வில்லையே! வெளிச்சத்தைப் பாதையிலே காண்பித்துக் கொண்டுபோ, காலில் முள் கின் தைத்து விடப் போகிறது. இங்கெல்லாம் கருவேல மரம் அதிகம்" என்றேன்.

மெதுவாக எட்டுமணிக்குள்ளாக மாதுளம் பேட்டைக்கு வந்து சேர்ந்து விட்டோம்.

சின்னஞ்சிறு அக்கிரகாரத் தெரு. பாதி வீடுகள் பூட்டிக் கிடந்தன. டைப் அடிக்கிற வேலை, காப்பிக்கிளப்பு வேலை என்று இளவட்டங்கள் பிழைப்பு நிமித்தம் வெளியூர் போய் விட்டார்கள். அழுது வடிந்தது தெரு. இரண்டொரு வீடுகளில் கதவு திறந்திருந்ததால் உள்ளிருந்து தெரிந்தது வெளிச்சம்.

"இந்த வீடுதான், வாருங்கள்" என்றாள் சகுந்தலா.

பெட்டியைத் திண்ணையில் வைத்து விட்டு நான் பையையும் டார்ச் விளக்கையும் சகுந்தலாவிடமிருந்து வாங்கிக் கொண்டேன்.

"வந்த மனிதர் ஒரு வாய் சாப்பிட்டு விட்டுத்தான் போக வேண்டும். அப்பாவைப் பார்த்து விட்டுப் போகலாம்" என்று அன்பு கனிய அத் தேன்மொழியாள் சொன்னாள்.

"அம்மா, சகுந்தலா! இந்த ஊருக்கு நான் அடிக்கடி வருவேன். இன்னொரு நாள் வந்து சாப்பிடுகிறேன். உன் சமையல் திறமையை யெல்லாம் அன்று காண்பிக்கலாமே!" என்றேன். அவள் ஒப்புக் கொள்ள வில்லை.

"நீ உள்ளே போ. நான் மணியக்காரர் வீட்டிலிருந்து சைக்கிள் கொண்டு வருகிறேன்; அப்பளாம், வத்தல் குழம்பு போதும். அதற்கு மேல் சாப்பிட மாட்டேன். நீ ரொம்ப உபசாரம் செய்கிறாயேதான் சம்மதிக்கிறேன்; நேரமாகி விட்டால் பஸ் கிடைக்கிறதோ என்னவோ! சைக்கிளிலேயே நான் ஊருக்குப் போகிறேன்" என்று சொல்லி விட்டு மணியக்காரர் வீட்டுக்குப் போனேன்.

மணியக்காரர் காரியமாகத் திருச்சிக்குப் போயிருந்தார். அவருடைய மனைவியிடம் சொல்லி விட்டுச் சைக்கிளை வாங்கிக் கொண்டு போஸ்ட்மாஸ்டர் வீட்டுக்கு வந்தேன்.

நான் வாசற்படியைத் தாண்டி உள்ளே அடி எடுத்து வைத்ததும் சமையலறையிலிருந்து இரைச்சல் சத்தம் கேட்டது.

"செக்கச் சிவந்த ஆள் வாட்டசாட்டமாக இருக்கிறானே இல்லையோ! தேடிப் பிடித்துக்



கும்பிருட்டிலே அழைத்துக் கொண்டு வந்திருக்கிறாள், துணைக்கு."

இந்தப் பெண் குரல் எனக்குத்தான் மண்டகப்படி அர்ச்சனை செய்து கொண்டிருந்ததா? நல்ல காரியம் செய்தாள். அதற்காக அபவாதத்தையும் கூடவா சகித்துக் கொள்ள வேண்டும்?

"வேண்டாம் வேண்டாம், நல்லவர்களை யெல்லாம் வாய்க்கு வந்தபடி திட்டாதே; மங்கிலைக் சேரி பண்ணையிலே இவர் வைத்ததுதான் சட்டம். பண்ணையார்கூட இவர் யோசனையைக் கேட்டுத்தான் எல்லாம் செய்கிறது. கௌரவமாக இருக்கப்பட்டவர்களுக்குத் தோஷம் கற்பிக்காதே. பெரிய பெரிய வீட்டுப் பெண்களை அவர்தானே அழைத்து வருகிறதும் கொண்டு போய் விடுகிறதுமாக இருக்கிறார்."

புருஷக் குரல் எனக்குப் பரிந்து பேசியது: "ஸார்!" என்று கூப்பிட்டேன்; சுந்தர

ராமய்யர் வெளியிலே வந்தார். ''வாருங்கள், வாருங்கள்! தெய்வச் செயலாக நீங்கள் அந்த பஸ்ஸிலே வந்தது நல்லதாய்ப் போயிற்று. குழந்தை எல்லாவற்றையும் சொன்னாள். கைகால் கழுவிக் கொண்டு சாப்பிட வாருங்கள்'' என்றார்.

எனக்கு அந்த வீட்டிலே சாப்பிட உட்காரப் பிடிக்கவில்லை. ''நான் எல்லாம் கேட்டுக் கொண்டிருந்தேன். அந்த அம்மாளைக் கூப்பிடுங்கள். ஒரு வார்த்தை சொல்லி விட்டுப் போய் விடுகிறேன்'' என்றேன்.

சகுந்தலா முந்தானையால் கண்களைத் துடைத்துக் கொண்டே வந்தாள். கூடத்தில் எரிந்து கொண்டிருந்த அழுக்கேறிய விளக்கின் வெளிச்சத்தில் அவளுடைய கலங்கிய கண்கள் நன்கு தெரிந்தன.

''க்ஷமாசபதி மாமா! அம்மா ஏதோ தெரியாத்தனமாகச் சொல்லி விட்டாள். நீங்கள் கோபித்துக் கொள்ளக்கூடாது. நீங்கள் எனக்காக இங்கே சாப்பிட்டு விட்டுத் தான் போக வேண்டும்'' என்றாள் சகுந்தலா.

''சகுந்தலா! கல்யாணமாகிப் புக்ககத்துக்குப் போனாலும் உன் வீட்டிலே வந்து விருந்து சாப்பிடுகிறேன்'' என்றேன்.

அந்தப் பரதேவதை சமையலறையிலிருந்து வெளியே தலைகாட்டுவதாக இல்லை. அதுவும் நல்லதுதான் என்று பிறகு எண்ணினேன். எனக்கு வந்த ஆத்திரத்திலே படபடப்பாகப் பொரிந்து தள்ளியிருப்பேன்; பிறர் வீட்டுப் பெண்களை நாம் கண்டித்துப் பேசுவது கண்ணியமாக இராதல்லவா! எனக்குக் கபகபவென்று பசியான பசியாகத்தான் இருந்தது. ஆனாலும் சுந்தரராமய்யரும், சகுந்தலாவும் எவ்வளவோ மன்றாடி உபசாரம் செய்தபோதிலும் அங்கு நிற்கவும் மனமின்றித் திரும்பவும் மணியக்காரர் வீட்டுக்கு வந்தேன்.

மாதுளம் பேட்டையிலும் எங்களுக்கு ஏழு வேலி நிலம் இருந்தது. அந்த நிலமும் மணியக்காரர் மேற்பார்வையிலேதான் பண்ணை சாகுபடியில் இருந்தது. ஆகவே அடிக்கடி வரத்துப் போக்கில் எனக்கு அவர் குடும்பமும் பழக்கமானதுதான். அங்கே போய்ச் சாப்பிடலாம் என்று திரும்பினேன். மணியக்காரரின் தாயார் கூடத்தில் கொசு வலை கட்டிக் கொண்டிருந்தாள். ''பாட்டி, பசிக்கிறது. சாப்பாடு போடச் சொல்லுங்கோ! இன்றைக்கு உங்கள் வீட்டிலேதான் சாப்பிடப் போகிறேன்'' என்றேன்.

''ஏன் காணும்! சுந்தரராமய்யர் வீட்டிலே சாப்பிடப் போகிறேன் என்று கிளம்பினீரே ஓட்டம் ஓட்டமாக. மீனாட்சி! எல்லாம் இருக்கிறதோ இல்லியோ?'' என்று கேட்டாள் பாட்டி வியப்புடன்.

மீனாட்சி சாதத்தில் தீர்த்தம் கொட்டிவிட்டதாக வந்து சொன்னாள்.

''பரவாயில்லை, பாட்டி! நல்ல ஆடைத் தயிராகவும் விட்டு, வடு மாங்காயும் போடுங்கள் போதும்'' என்றேன்.

''நன்றாகத்தான் இருக்கு; கால்படி அரிசியைக் களைந்து வைத்தால் அரை நாழியில் சமையல் ஆகிவிடும். ஏன் போனவர் உடனே திரும்பிவிட்டீர்?'' என்றாள் பாட்டி.

நான் எல்லா விவரமும் சொன்னேன்.

''அந்த ராட்சஸி சாமானியப்பட்டவளா என்ன? இளையாளாய் வந்து வாழ்க்கைப்பட்டாளா, பிடிச்சது சனியன் அந்த மனிதருக்கு. பாவம், அந்தப் பெண்ணைப் பிடித்து ஆட்டி அம்பலத்திலே வைக்கிறாள். ஒரு மாதம் மாமா வீட்டிலே போயிருக்கும்; அத்தை வீட்டிலே போய் ஒரு மாசம் இருக்கும். என்ன இருந்தாலும் பிறத்தியார் வீட்டிலே எத்தனை காலம் போயிருக்க முடியும்? அவரவர்களுக்கென்று குடும்பம் இல்லையோ?'' என்று பாட்டி சொன்னாள். என்ன விரகசாரமோ? நம் கவலை நமக்கு.

*

என் எஜமானர் மனைவிக்கு ஒரு மாதமாக உடல் நலமில்லை. சாதாரண புளு ஜுரமாக ஆரம்பித்து நீண்ட நாட்கள் ஜுரமாகத் தொடர்ந்தது. சீர்காழி டாக்டர் வைத்தீஸ்வரன் புண்ணியமில்லை என்று தீர்மானித்து, மாயவரம் போய் டாக்டர் ராஜகோபாலனை அழைத்து வந்தேன். அவர் தமக்கு நம்பிக்கை இல்லை என்று சொல்லி விட்டபோதிலும் அவரது வைத்தியம் மட்டும் தொடர்ந்தது.

மாயவரத்திலிருந்து டாக்டர் ராஜகோபாலன் இரவு எட்டு மணிக்கு மேல்தான் மல்லிகைச் சேரிக்குப் புறப்பட முடியும்; அவரை மொய்த்துக்கொண்டு விடும்நோயாளிகளிடமிருந்து விடுபட அவருக்கு அவ்வளவு நேரம் ஆகிவிடும். தம்முடைய பெரிய நர்ஸிங்ஹோமிலிருந்த பிணியாளர்களைக் கவனித்து விட்டு, நகரில் பல வீடுகளுக்கும் 'விஸிட்' போய் விட்டு, அவர் கிளம்புவதற்குள் எனக்கு அலுத்துப் போய் விடும். இத்தனை சுறுசுறுப்பான டாக்டரை நான் கண்டதே இல்லை. அவர் இனிமை கனியப்பேசுவதே நோயாளிக்கு அமுதம்போல் ஆறுதல் அளிக்கும். பணம் என்று யாரையும் அவர் வாய் திறந்து கேட்டதில்லை. ஏழையோ செல்வந்தரோ யாரானாலும் சுமுகமாகச் சிகிச்சை செய்வார். அப்படிப்பட்டவருக்கு அவர் எதிர்பார்க்காத அளவுக்குப் பழக்கமும் பிராக்டீஸும் ஏற்பட்டதில் வியப்பு இல்லை.

அன்று இரவு என் வீட்டுக்கு இரண்டு புடவைகளும், இரண்டு ரவிக்கைகளும் வாங்கிக் கொண்டு டாக்டரையும் எங்கள் மோட்டாரிலே அழைத்துக் கொண்டு எட்டரை மணிக்குப் புறப்பட்டேன்.

நான் வெற்றிலையும் புகையிலையும் அடக்கிக் கொண்டு முன்சீட்டில் டிரைவருக்குப் பக்கத்தில் உட்கார்ந்து கொண்டிருந்தேன்; டாக்டர் பின் சீட்டில் உட்கார்ந்திருந்தார். அன்று மாலை நல்ல மழை பெய்து நின்றிருந்தது. வானம் குமுறிக் கொண்டிருந்தது. பளிச்சுப் பளிச்சென்று கண்ணைப் பறிக்கும்படியான மின்னல். ஆனால் தூறல் இல்லை. வாழைப்பாடி மளிகைக் கடை வாசல் வந்ததும் எனக்கு என்னவோ சகுந்தலாவைப் பற்றி நினைவு வந்தது. எத்தனையோ தடவை இந்த மளிகைக் கடையைக் கடந்து போயிருக்கிறேன். மாயவரம் வரும் போதுகூட இப்படித்தானே போனேன்? இப்பொழுது சகுந்தலாவின் நினைவு வருவானேன்?

ஏதாவது விபரீதம் ஏற்படுவதற்கு முன்னதாக ஒரு சூசனை ஏற்படக்கூடும் என்பது மனோ

விஞ்ஞானத்தில் ஒரு நியதி என்று எப்பொழுதோ ஒரு சமயம் படித்திருக்கிறேன்.

'பாவம்! அவளுடைய சித்தன்னை அவளை எப்படி வதை செய்து கொன்றிருக்கிறாளோ? மாற்றாந் தாயின் கொடுமைகளைப் பற்றித் தமிழ்ப் பத்திரிகை தோன்றிய நாள்முதல் ஆயிரம் ஆயிரம் கதைகள் எழுதியிருக்கிறார்கள். தன் மூத்தவளுக்குப்பிறந்தவள் என்பதற்காக இளையாளானவள் அந்தப் பெண்ணைத் துவேஷித்தாக வேண்டும் என்று மனுஸ்மிருதியில் ஆக்ஞாபித்திருக்கிறதா? இந்தத் துவேஷ மனப்பான்மைக்குக் காரணம் என்னவென்று எந்த மனநூல் ஆராய்ச்சியாளராவது கண்டு பிடித்திருக்கிறாரோ என்னவோ, எனக்குத் தெரியாது.

வாழைப்பாடி தாண்டி இரண்டு மைலில் சாலைக்கும் பக்கத்திலே ஒரு திடல் இருக்கிறது. அத்திடலில் ஒரு கிணறு உண்டு. வருஷா வருஷம் கோடைக் காலத்தில் அத்திடலில் கொட்டகை போட்டு எங்கள் பண்ணைச் செலவில் தண்ணீர்ப் பந்தல் நடத்துவது வழக்கம். இந்தத் தர்மம் பரம்பரை பரம்பரையாக நடைபெறுகிறது. அத்திடலை அடுத்து எங்களுக்கு ஐந்து வேலி நிலமும் உண்டு. சில வருஷங்களுக்கு முன் இயந்திரப் பம்பு வைத்து அங்கு கரும்புச் சாகுபடிகூடச் செய்திருந்தோம். செலவு அதிகமானதினால் இப்பொழுது விட்டு விட்டோம்.

அந்தக் கிணற்றின் எதிரில் மோட்டார் சாலையில் போகும் போது நான் வாயில் இருந்த வெற்றிலைச் சாற்றைத் துப்பத் திரும்பினேன். 'பளீர்' என்று ஒரு மின்னல் மின்னியது: அந்த மின்னலின் ஒளியில் சாலையிலிருந்து கிணற்றை நோக்கிச் சென்ற காலடிகளைக் கண்டேன். திடுக்கிட்டது என் உள்ளம். மின்னலில் தோன்றிய அடிச்சுவடுகள் எனக்குப் பீதியை விளைவித்தன. 'நிறுத்து' என்று உரத்துக் கூறினேன், தேள் கொட்டியது மாதிரி. திடீரென்று காரை நிறுத்தியதனால் சர்ரென்று டயர்கள் தேய்ந்து வண்டி ஒரு குலுக்குக் குலுக்கி நின்றது. கதவைத் திறந்து கொண்டு கீழே குதித்தேன்.

"டிரைவர், டார்ச் லைட்டை எடுத்துக் கொண்டு வா!" என்றேன். டார்ச் விளக்கின் வெளிச்சத்தில் சொதசொத வென்றிருந்த சேற்றில் கிணற்றினருகில் விரைந்தோம். கிணற்றுக்குள்ளே வெளிச்சத்தைக் காட்டினேன். உள்ளே ஒரு பெண்ணின் உடல்!

"ஐயையோ! ஐயா!" என்று கத்தி விட்டான் டிரைவர். எனக்குக் குலை நடுக்கம் ஏற்பட்டது என்று சொல்லி என் பய உணர்ச்சியை வார்த்தைகளினால் சித்திரப்படுத்திவிட முடியாது. "ஐயா! இறங்கி நான் தூக்கிவிடுகிறேன். இந்த வெளிச்சத்தைக் காண்பியுங்கள்" என்று சொல்லி விட்டு டிரைவர் சட்டையையும் வேஷ்டியையும் அவிழ்த்துக் கரையிலே உதறி விட்டுக் கிணற்றில் இறங்கினான். அவன் டிராயர் மட்டுமே போட்டுக் கொண்டிருந்தான். நீர் மட்டத்துக்கு வந்து பெண்ணைப் பிடித்துக் கொண்டான். மேலே தூக்க முடியவில்லை. "டாக்டர், டாக்டர்! மோட்டாரிலே இருக்கிற பொட்டலத்திலிருந்து ஒரு புடவை எடுத்துக் கொண்டு ஓடி வாருங்கள்" என்று கூச்சல் போட்டேன்.

பிப்ரவரி மாதச் சிறுகதைப் போட்டி

1. மாதந்தோறும் நடக்கும் இந்தச் சிறுகதைப் போட்டியில் எழுத்தாளர்கள் எல்லோரும் கலந்து கொள்ளலாம்.

2. எழுத்தாளர்கள் சொந்தமாகவே கதைகள் புனைந்து அனுப்ப வேண்டும். கதைகள் கல்கியின் ஆறு பக்கத்திலிருந்து பத்து பக்கம் வரையில் வெளியிடக்கூடியதாக இருக்கலாம்.

3. ஒவ்வொரு மாதமும் அந்தந்த மாதப் போட்டிக்கு வந்த கதைகளில் சிறந்ததற்கு நூறு ரூபாய் பரிசு வழங்கப்படும்.

4. பிப்ரவரி மாதப் போட்டிக்கு பிப்ரவரி 1-ந் தேதியிலிருந்து 28-ந் தேதி வரை கதைகள் எழுதியனுப்பலாம். பிப்ரவரி மாதப் போட்டிக்கு வந்த கதைகள் மார்ச் மாதம் முழுதும் பரிசீலனை செய்யப்படும். பரிசு பெற்ற கதை ஏப்ரல் மாதத்தில் பிரசுரமாகும். அதேபோல் அந்தந்த மாதக் கதைகள் அடுத்த மாதத்தில் பரிசீலனை செய்யப்பட்டு, அதற்கடுத்த மாதத்தில் பிரசுரமாகும்.

5. கதைகளை நல்ல காகிதத்தில் இடைவெளிகள் விட்டு ஒரே பக்கத்தில் எழுத வேண்டும். காகிதத்தின் மறு பக்கத்தில் எழுதக் கூடாது.

6. தேர்ந்தெடுக்கப்படாத கதைகளைத் திரும்பப் பெற விரும்புவோர் அவற்றுடனேயே போதிய தபால் பில்லைகள் வைத்து அனுப்ப வேண்டும். தபால் பில்லைகள் வைத்து அனுப்பாதவற்றைத் திருப்பி யனுப்புவதற்கில்லை.

7. போட்டிக் கதை சம்பந்தமாக எந்தவிதக் கடிதப் போக்குவரத்தும் வைத்துக் கொள்வதற்கில்லை.

8. தேர்ந்தெடுத்த கதைகளைத் திருத்துவதற்கும் குறைத்து வெளியிடுவதற்கும் ஆசிரியருக்குப் பூரண உரிமை உண்டு.

— ஆசிரியர், கல்கி

டாக்டர் ராஜகோபாலன் தம்முடைய டார்ச் லைட்டையும் எடுத்துக்கொண்டு புடவையுடன் ஓடி வந்தார். புடவையைப் பிரித்து அதிலே அப்பெண்ணின் உடலைக் கட்டித் தூக்கி இழுத்து மேலே கொண்டு வந்தோம். மோட்டாரின் எதிரில் வெளிச்சத்திலே நடுச் சாலையில் அப்பெண்ணின் உடலைக் கிடத்திக் கைகளை அசைத்து முதலுதவி செய்தோம். பெண்ணின் உயிருக்குப் பயமில்லை என்று டாக்டர் ராஜகோபாலன் தைரியமூட்டினார். காரிலிருந்து மருந்துப் பெட்டியைக் கொண்டு வந்து 'கோராமைன்' இஞ்செக்ஷன் கொடுத்தார். மழை பெய்து, ஈரம் காய்ந்து மறுபடியும் பெண்ணின்வாயிலிருந்து வெளிப்படுத்திய தண்ணீரால் தரை நனைந்து போயிருந்தது. பெண் மூச்சு விட்டாள். நீங்கள் இந்தச் சம்பவத்தைப் படிக்கும் நேரம்கூட ஆகியிருக்காது. அவ்வளவு சீக்கிரம் மளமளவென்று இயந்திரமாகி யிருந்தோம். அந்தப் பெண் எழுந்து உட்கார்ந்து பிரகாசத்தில் கூசிய கண்களைக் கசக்கிக் கொண்டு திருதிருவென்று சுற்றுமுற்றும் விழித்தாள். "ஹிமாசலபதி மாமா!" என்று சொல்லி 'ஹோ' வென்று அழுதாள். டாக்டரும் டிரைவரும் வியப்படைந்தார்கள். கலவரத்தினிடையே, "உங்களுக்குத் தெரியுமா சாமி இந்தப் பெண்ணை?" என்றான் டிரைவர். "இப்போது ஒன்றும் கேட்காதே!" என்று சொல்லி விட்டு இன்னொரு புடவையைக் கொண்டு வந்து கொடுத்து, "இதை உடுத்திக் கொள், சகுந்தலா!" என்றேன்.

டிரைவரும், சகுந்தலாவும் உடையணிந்து கொண்டுவிட்டார்கள். நான் சகுந்தலாவைப் பற்றி டாக்டரிடமும், டிரைவரிடமும் சொன்னேன்: "சகுந்தலா எதற்காகக் கிணற்றில் விழுந்தாள் என்று நாம் விசாரிக்காமல் இருப்பதே நல்லது. இந்த உலகத்தில் ஜீவிக்க முடியாதபடி அவள் கஷ்டம் என்னவாக இருக்க முடியும்? மாற்றாந்தாயின் கொடுமை, வரதட்சிணைக் கொடுமையினால் கல்யாணமாகாத நிலைமை இந்தமாதிரி ஏதோ ஒன்று. அவளை நாம் விசாரித்து ஆவது என்ன!" என்றேன்.

"சரஸ்வதி அம்மா காதிலேயும் விழாமல் இருப்பது நல்லது. இந்த பயங்கரமான செய்தி கேட்டுப் பலவீனமான அவள் இருதயம் அதிர்ச்சியினால் நின்று போனாலும் போய் விடும்" என்றார் டாக்டர்.

"கேட்டுக்கொள், டிரைவர்!" என்றேன்.

"கேட்டுக் கொள்கிறது என்ன ஐயா! கடிகாரத்தின் பிரேஸ்லெட்டைக் கழற்றினேன். ஐயா! அவசரத்தில் அப்படியே கிணற்றுக்குள் இறங்கினேன். கடிகாரம் நழுவிக் கிணற்றுக்குள் விழுந்தது. சிங்கப்பூர் சாயபு விடம் எண்பது ரூபாய்க்கு வாங்கினேன். பாதிப்பணம்தான் கொடுத்தேன். இன்னும் பாக்கி கொடுக்கவில்லை" என்றான் அவன்.

"அட, ஒரு பெண் பிழைத்தாளே என்கிறது இல்லை. கடிகாரம் கெட்டுப்போனதுக்கு அழுகிறயே. நாளைக் காலையில் முழுகி எடுத்து விடச் சொன்னால் போகிறது. ஓடுமோ, ஓடாதோ? உனக்கு வேறு வாங்கித் தருகிறேன், போ!" என்றேன்.

மோட்டார் கொஞ்ச தூரம் போனதும் மழை அந்தர்தாரையாக ஊற்றத் தொடங்கியது. ஆகா! இந்த மழை சற்று முன் பெய்திருந்தால் காலடிச் சுவடுகள் தோன்றி யிருக்குமா? டாக்டர் சீர்காழியில் தாமதித்திராவிட்டால் அந்தப் பெண் மோட்டார் வெளிச்சத்தைக் கண்டு நாக மரத்தின் பின்னால் ஒளிந்து கொண்டிருக்க மாட்டாளா? நான் புடவை வாங்கியதும், வெற்றிலை போட்டுக் கொண்டதும், எச்சில் துப்பியதும், அப்பொழுது மின்னல் மின்னியதும் அகஸ்மாத்தான நிகழ்ச்சிகள் அல்லவா? சர்வந்தர்யாமியான கடவுள் ஒருவர் இருக்கிறார் என்பதற்கு இதைவிட எனக்கு வேறு என்ன அத்தாட்சி வேண்டும்? கடவுள் சங்கு சக்கர கதாபாணியாகவா தோன்றிக் கொண்டே யிருப்பார்? தம்முடைய இருக்கையை நம்முடைய அனுபவத்தின் மூலமேதான் உணர்த்திக் கொண்டிருப்பார்.

"நானும் டிரைவரும் யாரிடமும் சொல்லப் போவதில்லை. நீங்கள் தான் இந்தச் சம்பவத்தைக் கதையாக எழுதிவிடப் போகிறீர்கள்" என்றார் டாக்டர்.

"நீங்கள் நம்பும்படி எழுதுவதல்லவா கதை? இதை யாராவது நம்புவார்களா? கதையைப் படித்து விட்டு அபத்தமான 'பிளாட்' என்பார்களே!" என்றேன் நான்.

இந்த அகஸ்மாத்தான நிகழ்ச்சிக்கோவையில் இன்னொரு அம்சமும் இருக்கிறது பாக்கியாக. அதையும் சொல்லி இந்தக் 'கதை'யை முடித்து விடுகிறேன்.

மறுநாள் காலையிலே கிணறு முழுகுகிற ஆள் ஒருவனை அழைத்துக் கொண்டு போய் டிரைவர் கடிகாரத்தையும், ஒரு பாட்டரி லைட்டையும் கொண்டுவந்தான். பாட்டரி லைட் என்னுடையது. வெண்ணிலா பத்திரிகையையும் அதையும் அன்று மாதுளம்பேட்டையில் சகுந்தலா வீட்டுத் திண்ணையில் பையோடு வைத்துவிட்டு ஆத்திரத்தில் மறந்து வந்து விட்டேன்.

அந்த விளக்கு சகுந்தலாவுக்கு இப்படியா உதவ வேண்டும்? உயர்ந்த வாட்டர் புரூப் கடிகாரமானதனால் அது ஓடிக் கொண்டே யிருந்தது. நான் முதலாளி கணக்கில் வேறு விளக்கு வாங்கிக் கொண்டு விட்டேன்: அதனால் அதைப் பற்றி அக்கறை காண்பிக்கவில்லை. இதுவல்ல நான் பாக்கியிருப்பதாகச் சொன்ன கதை அம்சம்! என்னுடைய கதையைச் சகுந்தலா 'வெண்ணிலாவில்' படித்து விட்டுப் பாராட்டினாள் என்று நான் பெருமையடித்துக் கொள்ளக்கூட இல்லை!

சகுந்தலாவை எஜமானியம்மாளுக்கு ஒத்தாசைக்காக அழைத்து வந்ததாகப் பொய் சொன்னேன். பொய்க் கதைகளை எழுதிக் கொண்டிருக்கிற நான் வாழ்க்கையிலும் சமயோசிதமாகக் கொஞ்சம் என் கற்பனையைப் பிரயோகப்படுத்துகிறதும் உண்டு.

என் எஜமானியம்மாள் சிவலோகப் பிராப்தி அடைந்த பிறகு சகுந்தலாவை என் எஜமானியாக்கி விட்டேன். சகுந்தலாவுக்கு மூத்தவர்களாக இரண்டு பெண்கள் உள்ள என் எஜமானருக்கு இரண்டாந்தாரமாகச் சகுந்தலாவைக் கல்யாணம் செய்து வைத்ததற்கு நானா காரணம்? இந்தப் பாரத சமுதாயமேதான் காரணம்!

படித்துப் பாருங்கள்

தேமதுரத் தமிழோசை

சென்ற மாத ஆரம்பத்தில் 'ஒரு நக்கீரர்' என்ற தலைப்பில் உபதலையங்கம் ஒன்று எழுதியிருந்தோம். சென்னை மேல் சபையில் நாமக்கல் கவிஞர் அழுத்தம் திருத்தமாகச் சில உண்மைகளை எடுத்துரைத்தது அந்தத் தலையங்கத்துக்கு ஆதாரமாயிற்று:

தமிழ் மக்களுடைய நல்லெண்ணத்தின், தமிழ்ப் பண்பின் குரலாக அன்று கவிஞர் அவர்கள் அற்புதமாகப் பேசினார்கள். இன வேற்றுமையை ஒழிப்பதாகச் சொல்லிக் கொண்டு சிலர் செய்து வரும் அக்கிரமங்களை வன்மையாகக் கண்டித்தார்கள். கேட்பவர்களின் உள்ளங்கள் உருகும்படி பேசினார்கள்.

ஆழ்ந்த அறிவு செய்த ஆராய்ச்சியின் பயனாக எழுந்தது அந்தப் பேச்சு. அதைக் கேட்க முடியாது போனவர்கள் கவலைப்பட வேண்டியதில்லை. இதோ தேமதுரத் தமிழோசை என்ற நாமக்கல் கவிஞரது புத்தகம் இருக்கிறது!

இந்தப் புத்தகத்தில் ஆரியர் என்றும் திராவிடர் என்றும் பிரித்துப் பேசுவது எவ்வளவு அறிவீனமான செய்கை என்பதைக் கவிஞர் மேற்கோள்களுடன் எடுத்துக் காட்டுகிறார். அது மட்டுமல்ல, தாய்மொழிப் பற்றுடன் விளங்குவது குறுகிய மனப்பான்மை என்றும் அப்படி இருக்கக்கூடாது என்றும் வெளிப்படையாகவும் மறைமுகமாகவும் சொல்லி வருபவர்களுக்குச் சரியான பதில் கொடுக்கிறார். தமிழ் நாட்டின் எல்லைப் பிரச்னையைச் சுமுகமாக, நியாயமாகத் தீர்க்காமல் குழப்பம் விளைவிப்பவரைப் பார்த்து எள்ளி நகையாடுகிறார். தமிழிலுள்ள எல்லாம் வட மொழியிலிருந்து வந்தது என்ற அர்த்தமற்ற வாதத்தைத் தவிடுபொடியாக்குகிறார். 'தமிழ் எதற்கு உதவும்?' என்று கேட்கும் கற்றறிந்தோரை, 'தமிழ் எதற்கு உதவாது?' என்று திருப்பிக் கேட்டுத் திணற அடிக்கிறார். தமிழின் தொன்மையையும் தமிழ் நாகரிகத்தின் தொன்மையையும் சிறப்பாக விளக்குகிறார். 'பண்டைக் காலத்தில் தமிழ் செய்யுள் என்று இருந்ததே அன்றி இசைக்கலை இருந்து வந்ததா?' என்ற கேள்விக்கு 'நிச்சயம் இருந்து வந்தது' என்று ஆதாரங்களுடன் சந்தேகத்திற்கு இடமில்லாமல் பதில் உரைக்கிறார்.

இன்னும் எத்தனை எத்தனையோ அரிய பெரிய விஷயங்களை எளிய தமிழிலே கவிஞர் அவர்கள் எழுதியிருக்கிறார்கள். கடைசியாக, தமிழ் என்ற சொல்லுக்குச் சரியான விளக்கத்தை ஆராய்ந்து தந்திருக்கிறார்கள். தனித் தனிக் கட்டுரைகளாக அமைந்த போதிலும் ஒன்று சேரப் பார்க்கும்போது ஒரு பெரிய ஆராய்ச்சி நூலாகவே திகழ்கிறது.

கவிஞருடைய ஆராய்ச்சித் திறனும், தர்க்கத் திறனும் மிளிரும் ஒரே ஒரு இடத்தை மட்டும் பார்க்கலாம். மொழிப் பற்றைப் பற்றிக் கூறும் இடத்தில் ஒரு குறளை மேற்கோளாகக் காட்டுகிறார்:

பற்றுக பற்றற்றான் பற்றினை அப்பற்றைப்
பற்றுக பற்று விடற்கு.

துறவிகள் பற்றினை விட முயல்வதற்கு ஒன்றினைப் பற்றிக் கொள்ள வேண்டும். பற்றற்ற கடவுளைப் பற்றிக் கொள்ளவேண்டும் என்பது குறள். அப்படி முற்றும் துறக்க முயலும் துறவிகளுக்கே பற்றுதல் அவசியமானால் நாமெல்லாம் எம்மாத்திரம்! நமக்குத் தாய்மொழிப் பற்று இருப்பதில் தவறென்ன? அதிலும் பணத்தாசை, பெண்ணாசை, பதவியாசை, மண்ணாசை ஆகிய ஒன்றினையும் விடாதவர் மொழிப்பற்றை மட்டும் விட்டுவிட வேண்டும் என்று சொல்வது விசித்திரம் தான். கவிஞரது இந்த வாதத்துக்குப் பதில் எப்படிச் சொல்ல முடியும்?

இத்தகைய அரிய நூல்கள் தமிழில் வெளிவர வெளிவர, 'தேமதுரத் தமிழோசை உலகமெல்லாம் பரவும் வகை செய்தல் வேண்டும்' என்ற மகாகவி பாரதியாருடைய லட்சியம் விரைவில் நிறைவேறிவிடும் என்பதில் சந்தேகம் சிறிதும் இல்லை.

பிரசுரம்: கவிஞர் பதிப்பகம், ராஜவீதி, கோயமுத்தூர். விலை ரூ. 2-00

வள்ளிமலை வள்ளல்

முருகப் பெருமானை அல்லும் பகலும் அனவரதமும் தியானித்து, அந்தத் தியானத்திலேயே ஒடுங்கி அகமும் புறமும் அவன் உருவாகக் கண்டு வாழ்ந்த ஞான புருஷர் ஒருவரின் வாழ்க்கைச் சரித்திரம் இது. இளமையிலேயே ஞானம் பெற்று, முருகப் பெருமான் அருட் பிரசாதத்தால் திருப்புகழ் பாடல்களை உணர்ச்சியோடு அநுபவித்துப் பாடும் சக்தியைப் பெற்றிருந்தார், இம் மகா புருஷர். வள்ளிமலையைத் தமது உறைவிடமாகக் கொண்டு வாழ்ந்தமையினால் சிலருக்கு வள்ளிமலை சுவாமிகள் என்னும் பெயர் நிலைத்து விட்டது.

சுவாமிகளிடம் மிகவும் ஈடுபாடு கொண்ட இந்நூலாசிரியர் சுவாமிகளின் குழந்தைப் பருவத்திலிருந்து துவங்கி விரிவான குறிப்புகளுடனும், ஆதார பூர்வமான தகவல்களுடனும் அவரது சரித்திரத்தைத் தயார் செய்திருக்கிறார். டாக்டர் குருசாமி முதலியார் அவர்களின் முன்னுரை இப் புத்தகத்துக்கு விசேஷ மதிப்பையளிக்கிறது. ஸ்ரீ கி. வா. ஜகந்நாதன் அவர்களின் சாற்றுக் கவிகள் சுவாமிகளின் புகழைச் சாற்றுவதாகவே அமைந்திருக்கின்றன.

எழுதியவர்: ஆர். கல்யாணசுந்தரம்; வெளியீட்டோர்: இந்தியன் பப்ளிஷிங் ஹவுஸ் லிமிடெட், 14, கங்குராம செட்டித் தெரு, சென்னை 1; விலை ரூ. 2-50

பெண்மை வென்றது!

ஸ்ரீப்ரியா



பஸ்ஸிலிருந்து இறங்கி சென்ட்ரல் ஸ்டேஷனை நோக்கி வேகமாக நடந்தேன். பஸ்ஸிலிருந்து பாஸை வெளியே எடுத்துக் கொண்டு வரிசையாகப் போடப்பட்டிருந்த ஊர்ப் பெயர்களை வாசித்தேன். பம்பாய், கல்கத்தா, ஆம், இதோ டெல்லி ரிஸர்வேஷன் கௌண்டர்! ஆனால் பெயர்ப் பலகையின் கீழ் மேஜையருகே இருந்த நாற்காலி காலியாயிருக்கவே சற்றுத் தயங்கிய என்னைக் கண்டு, அந்த வரிசைக் கோடியில் வேறு யாரோ இருவருடன் பேசிக்கொண்டிருந்த பெண் ஓடிவந்தாள். ஒரு கணம் திடுக்கிட்டேன் நான். அந்த முகம் எதையோ எனக்கு நினைவூட்டியது.

"வெள்ளிக்கிழமை ஜி. டி. 'இடார்ஸி' வரை ஒரு சீட் ரிஸர்வ் செய்ய வேண்டும்." நான் பாஸை நீட்டினேன்.

"வெள்ளி...நாளை மறு நாளா? எல்லாம் பூர்த்தியாகி விட்டது போலிருக்கிறதே! பார்ப்போம். நாளை மாலை வாருங்கள்" என்றபடி என் பாஸை உற்று நோக்கினாள் அவ்வாரணங்கு. "மிஸ்டர் வாசுதேவன் மட்டும்" என்று வாய் முணுமுணுத்தது.

காணாமற் போன வஸ்துவைத் தேட வீட்டிலுள்ள பெட்டி பீரோ எல்லாவற்றையும் கொட்டிக் கவிழ்த்துத் தேடுவது போல் உருத் தெரியாமல் நினைவில் அமிழ்ந்துவிட்ட சம்பவத்தை மனத்தில் கொண்டுவர எதையெல்லாமோ எண்ணி என் மூளையைக் குடைந்து கொண்டே டன் ஏறினேன் நான். கலகல வென்ற சிரிப்பொலி என்னைத் தொடர்ந்தது. திடுக்கிட்டுத் திரும்பிப் பார்த்தேன். டிக்கெட் கௌண்டர்காரியுடன் அரட்டை அடித்துக் கொண்டிருந்த இரு இளம் பெண்கள்தான் அவர்கள்.

"மிஸ், ஹேமா! இந்தக் கீதாவுக்கு என்ன அப்படித் திடீர் வேலை வந்து விட்டது? கிளம்பும் சமயம் பின்தங்கி விட்டாளே!"

"இல்லை ரமா! ஏதோ ரிஸர்வேஷனில் திடீரென்று மாற்றம் செய்யவேண்டி வந்து விட்டதாம். அடுத்து வருடவிடம் ஏதோ சொல்லி விட்டு வருகிறேன் என்றாள்."

'கீதா...!' தேடிய பொருள் அகப்பட்டு விட்டது! ஆம் அவள்தான் அது! கீதா! கீதா! பஸ்ஸின் சக்கரங்கள் முன்னே சுழன்ற போது என் சிந்தனை பின்னோக்கிச் சுழன்றது.

இன்று ஐந்து வருடங்கள் ஓடி விட்டன. அது ஒழுங்காக நடந்திருந்தால் இன்று பிரம்மச்சாரியாக உலவி வரும் நான் இந்தக் கீதாவின் கரம் பற்றி ஒரு குழந்தைக்குக்கூடத் தந்தையாகி இருப்பேனோ என்னவோ!

பஸ் ஒரு குலுக்கலுடன் நின்றது. எதிரே வந்தது ஒரு ஊர்வலம். அந்தக் கூட்டத்தினின்று ஒதுங்கத்தான் பஸ் நின்றிருக்கவேண்டும். இனிய நாதஸ்வர இசையும், கூட்டத்தின் கொம்மாளமும், 'ஜாம்' மென்று மோட்டாரில் குட்டிப் படைகள் புடைசூழ உட்கார்ந்திருந்த மாப்பிள்ளையும் பஸ்ஸிலிருந்த எல்லோருடைய கவனத்தையும் ஆவலே உருவாகக் கழுத்தை ஒடித்துத் தன் பக்கம் திருப்பச் செய்த போது, என் தலை மட்டும் கவிழ்ந்தது. வேதனை நெஞ்சை அழுக்கியது.

மனிதர்களுக்குத்தான் நடக்கப் போவதைப் பற்றி என்ன திட நம்பிக்கை! நானும் அன்று அப்படித்தான் நினைத்தேன். ஏன், மாப்பிள்ளையாக ஒரு முறை ஊர்வலம் வந்தவன் நான் என்றால் வியப்பாக இருக்கும்! மறுநாள் என் அருகே 'அவள்' அமர்ந்திருக்கப் பிறர் புலன்களுக்குப் படாது அவளுடன் எப்படிப் பேசுவது என்று இன்பக் கோட்டைகள் பல நான் கட்டினேன் என்றால் உலகம் சிரிக்கும்! ஆம், நான் மாப்பிள்ளையாக அழைக்கப்பட்டு மணவறை ஏறாமலே ஏமாந்தவன்தான். ஊர்வலம் எங்களைக் கடக்கவே பஸ் புறப்பட்டு விட்டது. என் மன ஊஞ்சல் மட்டும் ஊர்வலத்தைத் தொடர்ந்து சென்றது...... பின்னோக்கி!

* * *

"ஆரத்தி, ஆரத்தி..." பெரியவர்கள் கூச்சலிடப் பெண் வீட்டு வாசலில் மோட்டார் நின்றது. புதுப் புடவைகள் சரசரத்தன.

"டேய், மேலே பாருடா மண்டு" என்றான் நாணு ரகசியமாக. ஆகா, நீலோத்பல விழிகள் இரண்டு ஆவல் பொங்க, ஆசை நிர என்னை நோக்கிக் கொண்டிருந்தன. ஆனால்



அவை என் கண்களைச் சந்தித்ததும் நீரில் மூழ்கும் கெண்டை மீனைப் போல் 'குபுக்' கென்று ஓடி ஒளிந்தன. ஒரு கணம் என் உடல் புல்லரித்தது. இன்று திருட்டுத்தனமாகப் பார்ப்பானேன்? நாளைதான் ஆசை தீரப் பார்க்கப் போகிறோமே என்று இந்த மனம் அடங்குகிறதா? என் கழுத்து அண்ணாந்தபடி இருந்தது.

''இதோ! அவர் உன்னைத் தேடுவதில் கழுத்து சுளுக்கிக் கொள்ளப் போகிறதடீ!'' என்று ஒரு குறும்புக்காரியின் குரல் கேட்டபின் தான் நான் சுய நினைவடைந்தேன். கார் ஊர்ந்து பிள்ளை வீட்டார்களை இறக்கியிருந்த வீட்டின் முன்னால் வந்து நின்றது.

வாசலில் கூத்தடித்துக் கும்மாளம் அடித்துக்கொண்டிருந்த சிறுவர்கள் சத்தம் தவிர வீட்டுக்குள் நிலவிய அமைதி என் சிந்தனைக்கு இதமாயிருந்தது. கண்களை மூடியபடி ஈஸிசேரில் சாய்ந்தேன்.

திடீரென்று ஒரு பேரிரைச்சல். ''ஐயோ! மாமா, மணி மண்டை...'' ஏதோ உருப்படியில்லாத கூச்சல் கேட்டுக் கண் விழித்தேன். குரல் வந்த திசைக்குத் தாவிய நான் கண்ட காட்சி! என் உடலே அதைக்கண்டு நடுங்கியது: அவனைப் பெற்ற வயிறு பட்டபாட்டை விளக்க முடியுமா?

'' ஐயோ, புறப்பட்டபோதே அவர் வேண்டாமென்றாரே! பிடிவாதமாக வந்தேனே, பாவி!'' என் அத்தை வாயிலும் வயிற்றிலும் அடித்துக் கொண்டாள். கிராமத்து டாக்டர் வந்தார். மண்டையில் கட்டுப் போட்டார். எப்படி இது நேர்ந்தது என்ற அவரது கேள்விக்குப் பதிலளிக்கப் பெரியவர்கள் யாருக்கும் இயலவில்லை. கடைசியில் கூட விளையாடிய ஒரு பையன்தான் முன் வந்தான். பந்தக்காலிலும் திண்ணைக் குறட்டிலுமாக ஏறி விளையாடிக் கொண்டிருந்திருக்கின்றனர் குழந்தைகள். மணி அவர்கள் தலைவன். ஏற்கனவே அவனுக்கு இரட்டைவால்என்ற



பட்டம் உண்டு. அன்று மாலை தென்னை மரத்தில் கிராமத்து ஆள் ஒருவன் ஏறுவதை அவன் பார்த்திருக்கிறான். அது போலவே மணி பந்தக்காலில் ஏறியிருக்கிறான். மூங்கிலின் கட்டு தளரவே அது மடாரென்று கீழே சாய, அவன் பயந்து கைகளை நழுவவிட, பூமியை நோக்கிப் பாய்ந்த அவன் நெற்றிப் பொட்டை வாசல் குறட்டுக் கருங்கல் பதம் பார்த்து விட்டது. பந்தலே ஒரு பக்கம் சாய்ந்தது போல் அலங்கோலமாக நின்ற காட்சி என்னை என்னவோ செய்தது.

அதன் பின் அரைமணியில் அத்தை புத்திர சோகத்துக்கு ஆளானாள்.

"அபசகுனம் போலக் குழந்தை போய் விட்டது. புறப்படு, கிட்டா! இனி இந்த இடத்தில் நாம் தங்கக் கூடாது" என்று குரல் கொடுத்தாள் பாட்டி.

நீலோத்பல விழிகள் நீர் சோர என்னை நோக்கின.

ஆகக் கடைசியில் 'பின்னால் மேற்கொண்டு செய்வது பற்றிப் பேசிக் கொள்ளலாம்' என்று பெண்ணின் தந்தையிடம் கூறிவிட்டுப் புறப்பட ஏற்பாடுகள் செய்தார் என் தந்தை.

"சார்! லாபகரம்னு கிராமத்தில் கல்யாணம் செய்ய வந்தேன். எனக்கு இப்போது ஏக நஷ்டம். இருந்தாலும் என்னை முழுக்க அவமானப்படுத்தி விடாதீர்கள்" என்று பெண்ணின் தந்தை காலில் விழாக் குறையாகக் கெஞ்சினார்.

"மாப்பிள்ளை சார்! நீங்கள் படித்தவர். பெரியவர்கள் ஏதாவது சொன்னாலும் பழைய பசலிப் பேச்சை நம்பி என் கோதாவைக் கை விட்டு விடாதீர்கள். ஒரு ஆண் பிள்ளையை விடப் பெண்ணின் வாழ்வு இப்போது எப்படிப் பாதிக்கப்படும் என்பது உங்களுக்குத் தெரியும்" என்று கண்களில் நீர் பொங்க என்னைத் தனியாகச் சந்தித்து ரகசியமாகக் கூறவும் அவர் தவறவில்லை.

வண்டி வந்தது. புறப்படுவதற்கு முன் ஒரு முறை அவ்வீட்டுப் பக்கம் திரும்பினேன்: அதே ஜன்னலில் அதே குமுத விழிகள். ஆனால் அதில் இப்போது நாணமோ, இரக்கமோ இல்லை: கெஞ்சல், சோகம், உரிமை எல்லாம் கலந்து வழிந்தன. என் பார்வையைச் சந்தித்த பின்னும் அது மறையவில்லை. தெருக் கோடி வரையில் என்னை வழியனுப்பியது. ஏழடி வைத்து என் கரம் பற்றி என்னுடன் வரவேண்டியவள், விழிக்கோணத்தில் என்னைத் தொடர்ந்தாள். பின் கண்ணுக்கு மறைந்து கருத்தில் நிறைந்தாள்.

"ஸார்! டிக்கெட் வாங்கியாச்சா? நயா பைசா சில்லறை கொடுங்க ஸார்!" கண்டக்டரின் குரல் என் நினைவை நிலைப்படுத்தியது. பைசாவை எண்ணிக் கொடுத்தேன். காசில்கூடப் புதுமை! ஆனால் மனிதனின் கருத்தில்? அதில் இன்று புதுமையுமில்லை. பழமையுமில்லை. இரண்டும் குழம்பிய ஒரு சகதிக் குட்டை!

• • •

ரயில்வே அதிகாரி மூன்று மாதவியில் வந்தவர் அதன் பின் முப்பது கடிதங்கள் எழுதி விட்டார். ஆனால், புத்திர சோகத்துக்காகப் பிறந்தகம் கொண்டாடவந்த அத்தை, அப்பா அம்மா எல்லோரையுமே ஆட்டி வைத்துக் கொண்டிருந்தாள். அவள் பிள்ளையின் மரணத்தை ஏதோ நாங்களே முன்னின்று நடத்தியது போல இருந்தது அவளது பேச்சும் அதிகாரமும்.

"கிட்டா! இனி அந்த வீரபுரத்தான் பேச்சையே எடுக்காதே. பெரிய இடம், படித்த பெண் மகாலட்சுமிமாதிரி இருக்கிறதென்றாய்...அது துக்கிரிப் பிணம்! வீட்டுக்குள்ளேயே அடியெடுத்து வைச்சுட்டா இன்னும் என்ன நடக்குமோ, யாருக்கு மூட்டை கட்டுமோ?" என்று பாட்டி பெண்ணுக்கு ஆதரவாக அழுத்தமாகப் பேசி விட்டாள்.

ஒரு நாள் பெண்ணைப்பெற்றவர் நேரிலேயே வந்து சேர்ந்தார். கெஞ்சலும் கோபமுமாக வார்த்தைகள் பரிமாறப்பட்டன: கல்யாண ஏற்பாடு வீணானதிலேயே எனக்கு ஏகப்பட்ட நஷ்டம். சம்சாரி, சார் நான். ஏதோ கடைசிக் குழந்தையாச்சேன்னு கோதாவுக்குச் சக்திக்கு மீறிக் கடன் வாங்கிக்கூடச் செலவழித்தேன். பெரிய மனசு பண்ணுங்கோ. இதெல்லாம் பழைய கால மூடநம்பிக்கை..." என்று கெஞ்சினார் அவர்.

கடைசியில் கோதாவின்தந்தை என்னை அணுகினார். நான் தலைகுனிந்து நின்றேன். ஒரு புறம் பெற்றவர்கள்; அவர்களை மீறிப் பழக்கப்படாத பாச நெஞ்சம். மறுபுறமோ வரப் போகும் மனைவி என்று இல்லாவிடினும், பெண் பாவம் என்ற நியாய உணர்வு. "உங்கள் முடிவு என்ன வாசுதேவன்?" என்ற அவரது கேள்விக்குப் பதிலளிக்க நான் தயங்குகையிலேயே என் பாட்டி குறுக்கிட்டு விட்டாள்: "அவன் குழந்தை. அவனிடம் உமக்கு என்ன கேள்வி? நாங்கள் பெரியவர்களைவிட அவன் என்னசொல்லக் கிடக்கிறது?" என்று அவரைமடக்கிவிட்டாள் அம்மூதாட்டி.

அவமானமும், ஆத்திரமும் சேர வந்தவர் வெளியேறினார். அதன்பின் எனக்கும் பம்பாய் சென்ட்ரல் ரயில்வேயில் வேலை கிடைத்து, பின் ஜபல்பூர் மாற்றிப் போனேன்.

* * *

கண்டக்டர் குரல் என்னை பஸ்ஸிலிருந்து வெளியே தள்ளியது. என் மனத்தில் அப்போதே ஒரு திட்டம் உருவாகியது. "நானே வாருங்கள். ரிஸர்வேஷன் கிடைக்குமா பார்க்கலாம்" என்ற தேன் குரல் என்னை உற்சாக மூட்டியது. மறுநாள் மறுபடியும் ஸ்டேஷனுக்குப் படையெடுத்தேன்:

"டேய், பழி இங்கு எங்கேடா வந்தே?"

நான் கண்களை அகலவிரித்து நோக்கினேன். சந்தேகமில்லை: அது சென்ட்ரலில் டெல்லி கௌண்டர்தான். ஆனால் அவள் எங்கே?

"டேய், நீ வாசுதானேடா. என்ன விழிக்கிறாய்?" அங்கு அமர்ந்திருந்த உருவம் தன் கரங்களை என் தோளில் பதித்த பின்தான் நான் விழிப்புற்றேன்.

"அட, ராமுவா? இங்கே நீ எங்கேடா வந்தாய்?" என்று வினவினேன் நான்.

"எனக்கு வேலை இங்குதானேடா? ஆமாம், உனக்கு என்ன வேணும்?" என்றபடி என் கைப்பாலை அவன் பிடுங்கி விடவே நான் வேறு வேறு வழியின்றி, "ரிஸர்வேஷன்தான்,


நான்தான் டீ...
நான் விதைகளிலிருந்து
பயிராக்கப்படுகிறேன்
நான்தான் டீ — நாட்டின் சின்னம்
TEA BOARD INDIA



எல்லா சோதனைகளிலும்
தேர்ச்சி பெற்ற
ஆதர்ச டூத் பிரஷ்
இன்றே வாங்குங்கள்-
அதன் குணங்
களை தெரிந்து
கொள்ளுங்கள்
எல்லா
கடைகளிலும்
கிடைக்கும்
Aryan
இந்தியாவிலேயே மிக்க அநுபவம் வாய்ந்த
டூத் பிரஷ் தயாரிப்பாளர்கள்



பிரீப்மென் மற்றும்
ஸுலேகா
இன்றைய
மிகவும்
நம்பகமான
பேனுக்கள்
பலவித கலர்களிலும் கவர்ச்சியான
தோற்றத்திலும் எங்கும் கிடைக்கும்
Sole Distributors :
PENMEN'S INDUSTRIAL
SERVICES
Kandivli, Bombay (S. D.)

நானே ஜி.டி.க்கு: நேற்று வந்தேன். இன்று வந்தால் விவரம் அறியலாம் என்று சொன்னார்கள். நேற்று இங்கே வேறு யாரோ இருந்தார்களே?'' என்று மென்று விழுங்கினேன்.

''ஓ, நேற்று மிஸ் கீதா இருந்தாள். இன்று அவள் லீவு. அதனால் என்னை இங்கு போட்டார்கள். சரி, வா காப்பி சாப்பிடலாம்'' என்றபடி பக்கத்தில் இருந்தவனிடம் ஏதோ சொல்லிவிட்டு என்னை இழுத்துக் கொண்டு கிளம்பினான் ராமு. 'என்னை வரச் சொல்லி விட்டு அவள் லீவு எடுப்பானேன்? என்னைப் புரிந்து கொண்டு சந்திக்க விரும்பவில்லையோ?' என் மனம் குழம்பியது.

காண்டீனில் போய் அமர்ந்ததுமே என் வாய் எண்ணத்தை வெளியிட்டு விட்டது. ''ஏண்டா அவள் லீவு?''

ராமு என்னை ஏற இறங்க ஒரு முறை பார்த்தான். ''டேய்! அவளைப் பற்றி வேறுமாதிரி நினைக்காதே. அவள் நெருப்பு. ஜாக்கிரதையடா'' என்றான். தொடர்ந்து, ''ஏண்டா, ஜடம், என்னைப் பார்த்துப் பத்து வருஷமாச்சே. என்னை ஏதாவது கேட்டாயா? அவளை விசாரிக்க வந்துவிட்டாயே?'' என்றான்.

''அதற்கில்லேடா, ராமு, தவறாக எண்ணி விடாதே'' என்று சமாதானப்படுத்திய பின்தான் எனது கேள்விக்குப் பதில் பெறமுடிந்தது.

''கீதாவின் தந்தை ரயில்வேயில் பெரிய அதிகாரி. இந்த வருஷம் ரிடையராக வேண்டியவர். பாவம், போதாத காலம். நாலைந்து வருடங்களுக்கு முன் ஒரு முறை மூன்று மாத லீவில் தென்னிந்தியா வந்தபோது, எதிர்பாராத விதமாக இந்தப் பெண்ணுக்கு ஏதோ நல்ல வரன் குதிர்ந்ததாம். தன் பிராவிடண்ட் பண்டிலிருந்து அட்வான்ஸ் கேட்டு, அது சாங்ஷன் ஆகிவர நேரமில்லாது, முகூர்த்தம் பத்து நாட்களுக்குள் அமையவே, தனக்குத் தெரிந்த கண்டிராக்டர் ஒருவரிடம் ரூபாய் இரண்டாயிரம்—நண்பன் என்ற முறையில்—கடன் வாங்கினார் அவர். கல்யாணத்துக்கு வேண்டிய ஏற்பாடுகள் பெரிய தோரணையில் நடந்தன. அந்தப் பாவிக் கல்யாணப்பிள்ளை—அவளை அடையக் கொடுத்து வைக்காத கட்டை-கல்யாணத்துக்குத் தன்னுடன் ஒரு 'அல்பாயு'வை அழைத்து வந்தானாம். அது என்னடா என்றால் மாப்பிள்ளை அழைப்பு ஆனதும் மண்டையைப் போட்டு விட்டதாம். அதற்காக அந்த 'உத்தம புத்திர'னின் பெற்றோர்கள் அபசகுனம், இனி இந்தச் சம்பந்தம் வேண்டாம் என்று உத்தர விட்டார்களாம். படித்த மேதாவியான அந்தப் பிள்ளையும் அப்பன் சொல்லைத் தட்ட மாட்டேன் என்று சொல்லி விட்டானாம். ஆக, கல்யாணம் நின்றுவிட்ட அந்தப் பெண் அதற்கு அப்புறம் இன்னொருத்தனுக்கும் கழுத்தை நீட்டமாட்டேன் என்று கூறிவிட்டதாம். பெற்றவரோ கோர்ட் ஏறி, அந்தப் பிள்ளையைத் தன் காலில் விழுந்து பெண் கேட்கச் செய்கிறேன் என்றாராம். ஆனால் கீதாதான் 'தானாகக் கனியாத பழத்தைத் தடியால் அடிப்பானேன்?' என்று தடுத்து விட்டாளாம்...''

''ம், அதற்கும் இன்று அவள் வேலைக்கு வராததற்கும் என்னடா சம்பந்தம்?'' என்று அக்கறை இல்லாதவன் போல் கேட்டபடியே நான் காப்பியில் மிதந்த ஒரு எறும்பைப் பிடிக்க முனைந்தேன்.

ராமு தொடர்ந்தான்: ''அதுதான் கேளு. கல்யாணத்துக்கு ஏற்பாடு செய்து ஏக நஷ்டமா? அதோடு மன உளைச்சல் வேறு! போதாததற்குக் கீதாவின் தந்தை ரூபாய் இரண்டாயிரம் கடன் வாங்கி இருந்தாரா? ஆனால் கல்யாணம் நின்றதும் பிராவிடண்ட் பண்டு பணத்தை எடுக்காமலே எப்படியோ மெள்ளக் கடன் அடைக்கலாம் என்று நினைத்தார். ஆனால் எந்தப் பாவியோ இவரை அமுக்கச் சமயம் பார்த்தான் போல் இருக்கிறது. லீவு முடிந்து அவர் வேலையில் சேர்ந்த



போது வேண்டாத விஷமிகள் சிலர் கைங்கர்யத்தால், இவர் 'கண்டிராக்ட்' தருவது விஷயமாக லஞ்சம் வாங்கியதாக இவர் மீது குற்றச் சாட்டு பதிவாகி இருந்தது. அவர் ஏதேதோ வாதாடினார். ஆனால் கடன் கொடுத்தவனுக்கு என்ன துர்ப்புத்தியோ, யார் போதனையோ... அவனும் கடன் கொடுத்ததாகக் கூறவில்லை! அவர் வேலையிலிருந்து ஸஸ்பெண்டு செய்யப்பட்டார். பின் மூன்று வருடங்களாக விசாரணை அதோ, இதோ என்று நடந்தது. இன்று கடைசி ஈரங்கி. அதுதான் கீதா வரவில்லை. இப்போது இந்தப் பெண் கையைத்தான் அவர் எதிர்பார்க்கிறார்: மயிலாப்பூரில் கப்பு முதலித் தெருவில்

ஒண்டுக் குடித்தனம். நல்ல வேளை சீதாவின் தாய் இந்தக் கோலங்களைக் காணாது கண்ணை மூடி விட்டாள்......"

'விருட்'டென்று எழுந்தேன் நான். சீனா வேஷன், ராமு எல்லாவற்றையும் மறந்து வெறிபிடித்தவன் போல் கூட்டத்தில் இடித்துப் புகுந்து ஏதோ ஒரு பஸ்ஸில் ஏறினேன்.

*　　　　*　　　　*

என் மனம் ஒரு தீர்மானத்துக்கு வந்த பின் சற்று அமைதி பெற்றது. அடுத்த தீர்மானம் ஒரு வெறியாக என்னை மைலாப்பூரில் ஒரு சந்தருகே கொண்டு நிறுத்தியது: ஆனால் முன்னால் என்னுள் பீறிட்ட வேகம், துணிவு அந்த வீட்டுக்குள் நுழையும் போது என்னை வெகுவாகக் கைவிட்டு விட்டது.

இருளும், ஒளியும் ஒன்றை ஒன்று விழுங்கி நின்ற நேரத்தில் விளக்கைக் கூட ஏற்றாமல் அவள் அமர்ந்திருந்த கோலம் என்னைத் திடுக்கிடச் செய்தது. தலைவிரிகோலமாகச் சோகமே உருவாகக் கன்னத்தில் கையேந்தி அவள் அமர்ந்திருந்த அந்த நிலையையும் காணச் சகிக்கவில்லை.

"ஸார்!" மெள்ளக் குரல் கொடுத்தேன்.

திடுக்கிட்டவள் போல் அவள் நிமிர்ந்தாள். "யார்? நீங்களா?"

"மிஸ் சீதா! விஷயங்களைக் கேள்விப் பட்டேன். மிக்க வருத்தமாயிருந்தது. முடிவு இன்று என்னவாயிற்று? என்னால் உங்களுக்கு ஏதாவது உதவி..."

"ஏன்? எதைக் கேள்விப்பட்டீர்கள்? இன்று மிகுதியையும் தெரிந்து கொள்ளலாம் என்று வந்தீர்களா? முடிவாம், முடிவு! நேர்மை இல்லாத உலகம் நீதியை என்றாவது கண்டிருந்தாலல்லவா அதைப் பற்றி எடை போடத் தெரிந்திருக்கும்!"

"சீதா! நான் குற்றவாளிதான். கோழை தான். ஆனால் அன்றைய என் நிலை அப்படி. இதோ பார். இப்போது அதற்கு ஏதாவது பரிகாரம் செய்யத்தான் வந்திருக்கிறேன். உன்னைப் புண்படுத்தவோ வேடிக்கை பார்க்கவோ வரவில்லை. சீதா! வெற்றியும், தோல்வியும், விஷயத்தைவிட, வக்கீலின் வாதத்தில்தான் இருக்கிறது. வேறு நல்ல வக்கீல் வைத்து மேல் கோர்ட்டில் வாதாட நான் செலவுகளை ஏற்று உதவுகிறேன். நம் மணத்தையும் ஏதாவதொரு கோவிலில் அமைதியாக முடித்துக் கொள்வோம்." என் குரல் கம்பியது. அவள் கரங்களை என் கைகளில் ஏந்தினேன் நான். அவள் என்னை ஊடுருவி நோக்கினாள். ஒரு கணம்! 'பளிச்' சென்று தன்னை விடுவித்துக் கொண்டாள் அவள். "மிஸ்டர், எட்டி நில்லும்..." அவள் கண்கள் நெருப்புத் துண்டங்களெனச் சிவந்து மின்னின. "இனி அந்த எண்ணம் வேண்டாம். என் யாருக்குமே அந்த உரிமை கிடையாது" என்றாள் சீதா.

"சீதா பழைய சம்பவங்களை மறந்துவிடு."

"மிஸ்டர் வாசு, அதை மறந்து விடு என்று சுலபமாகச் சொல்லி விடலாம். நீங்கள் மறந்தும் போகலாம். ஆனால் புதிதாக இதைநீங்கள் நினைவு வைத்துக் கொள்ளுங்கள், உங்கள் சம்பந்தம் எங்களுக்குத் தேவை இல்லை."

"என்ன, சீதா?" என் தலையில் தணலைக் கொட்டியது போல் இருந்தது.

"மிஸ்டர் வாசுதேவன்! நீர் எங்கள் வீட்டு மாப்பிள்ளையாக்கப்பட முயற்சிகள் ஆரம்பமாயின; அன்று வரையில் ஒருவரிடமும் கடன் என்று கைநீட்டி அறியாத என் தந்தை கடன் பட்டார். தன்னைக் கடனாளியாக்கிக் கொண்டாவது உம்மை வரவேற்க அவர் ஆனந்தமாகத்தான் தயாராயிருந்தார். பலன் என்ன? அவர் மனத்தில் வேதனைதான் மிஞ்சியது: என் நெஞ்சில் தீரா ஏக்கம் குடிகொண்டது. 'கல்யாணம் கூடி வந்து தடைப்பட்டது' என்ற அவமானம் பலவித உருவெடுத்து எங்கள் குடும்பத்தைச் சூழ்ந்தது. அது மட்டுமா? உம்மை மாப்பிள்ளையாக வரித்த முகூர்த்தம் அவர் மீது அபாண்டப் பழி சுமத்தப்பட்டு, வேலையையும் இழந்தார். நேற்று நீர் மறுபடியும் என் வழியில் குறுக்கிட்டீர். என் மனமும் சற்றுச் சலனமடையத்தான் செய்தது. ஆனால் அந்த வேளை ராசி: இதோ என் தந்தை கடமையில் தவறியவர் என்று குற்றம்சாட்டப்பட்டுக் கடும்தண்டனை பெற்று விட்டார். இந்த அவமானம் அவர் மனத்தை வேறு பயங்கர முடிவுக்கு வரச் செய்யாதிருக்க வேண்டுமே என்பதே என் கவலை. நானோ? எனது ஒரே ஆதாரத்தையும் இழக்கும் நிலையில் இருக்கிறேன். ஐயா! நீர் எங்கள் வீட்டுக்கு வருமுன்னரே இப்படி உற்பாதங்கள் நேர்ந்தால், வந்தபின் இன்னும் என்னென்ன நிகழுமோ? ஒரு பெண்ணுக்கு உள்ள நீதி தானே ஆணுக்கும்? உமது திக்குக்கே கும்பிடு, ஐயா, வாசு! இன்னும் இங்கு அனாவசியமாக நின்று ஒண்டுக் குடியில் அக்கம் பக்கத்தவரின் வம்பை வளர்த்து என் பெயரையும் மாசுபடுத்தாமலாவது நீர் போய் விடும்." அவள் வெறும் சீதாவாகப் பேசவில்லை. அவளுள் இதுநாள் குமுறிய பெண்மையின் தாபம்தான் சீறி எழுந்தது.

மௌனமாக வெளியேறினேன் நான், குனிந்த தலையுடன். எரிந்து நிய்ந்த நெருப்பின் புகைபோல் ஜன்னல் வழியே அவளது விம்மல் ஒலி என் செவிகளில் கேட்டது.

மறுதினம் "அம்மா, நான் திருமணமே செய்து கொள்ளப் போவதில்லை. என் ஜாதகப் பரிவர்த்தனையை நிறுத்திக் கொள்" என்று கண்டிப்பாகக் கூறிவிட்டு நான் புறப்பட்ட போது என் தாய்க்கு என் வேதனை புரிந்திருக்காது!

சீதாவின் தணலன்ன விழிகளுக்கும், "போம், என்னைக் களங்கப் படுத்தாது நீர் போய் விடும்" என்ற அனல் கக்கிய அவள் சொற்களுக்கும் கட்டுப்பட்டு நான் என்னை ஆயிரம் மைல்களுக்கு அப்பால் விரட்டப் போகும் ரயிலில் சோர்ந்து வீழ்ந்தேன்.

என் மனத்தில் அன்றுபோல் இன்றும் சீதா தான் நிறைந்திருந்தாள். ஆனால் ஆளை மயக்கும் மங்கையாக 'அம்மா மனம் மாறுதா, அவளை மணப்போமா' என்று நப்பாசை யூட்டும் அப்சரஸாக அல்ல; பெண்மையின் தூயவடிவமாக, தீபச் சுடரென அமர்ந்து ஒளி வீசும் தெய்வ உருவாக அவள் என் நெஞ்சில் பிரதிஷ்டை ஆகியிருந்தாள்.

Printed and Published by T. Sadasivam at the Kalki Press, Kilpauk, Madras-10
for the Proprietors Messrs Bharathan Publications Private Limited
Managing Editor : T. Sadasivam


பாண்ட்ஸ்
ட்ரீம்ப்ளவர் டால்க்
உபயோகித்தால்
நாள்முழுவதும் புத்துணர்ச்சி
யுடனும், நறுமணத்துடனும்
இருக்கலாம்
விருந்து கவரூட்டுவதும், நறுமணம் வாய்ந்ததுமான
பாண்ட்ஸ் ட்ரீம்ப்ளவர் டால்கம் பவுடர் உபயோகித்
தால், நீங்கள் கொடிய வெப்பத்திலும், புழுக்கமான
காலங்களிலும்கூட இனிய உணர்ச்சியுடன் இருக்கலாம்.
மென்மையான இந்த டால்கம் பவுடரை உடம்பில்
தூவிக்கொண்டால், எரிச்சலூட்டும் வியர்வைத்
தொல்லை ஒழியும். நாள் முழுவதும் புது மலரைப்
போல் இனிய புதுமையுடன் இருக்க பாண்ட்ஸ்
ட்ரீம்ப்ளவர் டால்கம் பவுடர் உபயோகியுங்கள்.
சீஸ்ப்ரோ-பாண்ட்ஸ் இன்கார்ப்பரேட்டட்
(வரையறுக்கப்பட்ட பொறுப்புடன்
யு.எஸ். அமெரிக்காவில் இணைக்கப்பெற்றது)
POND'S
DREAMFLOWER TALC
DREAMFLOWER TALC

REGISTERED No. M. 4392
Registered as a Newspaper in Ceylon